REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2022 ஜனவரி 1 சனிக்கிழமை

# தினகரன்

THINAKARAN தினகரன்

2022 இனிய புத்தாண்டு வாழ்த்துகள்

வரு. 90 இல. 01 | Saturday 01, January, 2022 | 16 பக்கங்கள் | 30/-

## புது வருடத்தை நம்பிக்கை, ஆர்வத்துடன் வரவேற்போம்

### ஜனாதிபதி கோட்டாபய புதுவருட வாழ்த்து



மலர்ந்துள்ள புத்தாண்டு, எதிர்காலத்தைப் புதிய உத்வேகத்துடனும் நம்பிக்கை மற்றும் உறுதியுடனும் பார்க்கத் தூண்டியிருக்கிறது. அதனால், 2022ஆம் ஆண்டை, மிகுந்த ஆர்வத்துடனும் எதிர்பார்ப்புடனும் வரவேற்போம் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது புதுவருட வாழ்த்தில் தெரிவித்துள்ளார்.

தனது வாழ்த்துச்செய்தியில் ஜனாதிபதி மேலும் தெரிவித்துள்ளதாவது,

06

## தடைகளை முறியடித்து புதுவருடத்தை வரவேற்போம்

### புத்தாண்டு செய்தியில் பிரதமர் மஹிந்த




அனைவரதும் நம்பிக்கைகளையும் பிரார்த்தனைகளையும் நிறைவேறச் செய்யும் 2022 புத்தாண்டு பிறந்துள்ளது.

வாழ்க்கையின் கடினமான சூழ்நிலைகளை அனுபவித்து, மிகுந்த வலிமையுடன் எதிர்கால சவால்களை வெற்றி கொள்வதற்கு உதயமாகியுள்ள இப்புத்தாண்டில் உறுதிகொள்வோம் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

06

## நம்பிக்கை மிகு புத்தாண்டாக 2022 பிறக்க பிரார்த்திப்போம்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வாழ்த்து



வெற்றிகளைவிட ஒரு நாடு என்ற வகையில் தோல்விகள் மற்றும் துன்பங்கள் பலவற்றையும் கடந்து புது வருடமொன்று பிறக்கும் இவ்வேளையில் அனைத்து இலங்கையருக்கும் புத்தாண்டு நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவரது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அதிகாரத்தின் நிகழ்ச்சி நிரலை நம் கையில் வைத்துக்கொண்டு இந்த நெருக்கடியான சூழலை எதிர்கொள்ள முடியாது, ஆனால் இந்த

06

### திருகோணமலையிலுள்ள 99 எண்ணெய்த்தாங்கிகளுள்

# 61 எண்ணெய்த் தாங்கிகள் IOC யுடன் இணைந்து அபிவிருத்தி

### 51 வீத பங்குகள் இ.பெ.கூ. தாபனத்துக்கு கிடைக்கும் வகையில் ஏற்பாடு

**புதிய நடைமுறை மூலமாக 85 தாங்கிகளின் நிர்வாகம் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் வசமாகிறது**

**நேற்றைய ஊடகவியலாளர் மாநாட்டில் எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில தெரிவிப்பு**



திருகோணமலை எண்ணெய் தாங்கிகளுள் 61 எண்ணெய் தாங்கிகளை இந்தியன் ஒயில் (ஐ.ஓ.சி) நிறுவனத்துடன் இணைந்து அபிவிருத்தி செய்ய அரசாங்கம் தயாராகி வருவதாக அமைச்சர் உதய கம்மன்பில நேற்று தெரிவித்தார். இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு 51 வீத பங்கு கிடைக்கும் விதத்தில் உருவாக்கப்பட்டுள்ள புதிய நிறுவனத்தின் கீழ் இந்த எண்ணெய் தாங்கிகள் அபிவிருத்தி

06

## புது மகிழ்வும் புது நிமிர்வும் புத்தாண்டின் வரவாகட்டும்!



நாளைய பொழுதுகளின் நம்பிக்கை ஒளியோடு பிறந்திருக்கும் புத்தாண்டின் வரவாக புது மகிழ்வும் புது நிமிர்வும் அமையட்டும் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவரது வாழ்த்துச் செய்தியில்,..

அடுத்து வரும் தேர்தல் வெற்றியை குறி வைத்தே அங்கு மிங்கும் அலைந்து பலரும்

06

### பால்மாகடை சீல் வைக்கப்பட்டதாக பொய் பிரசாரம்:

## பொலிஸாருக்கு அவப்பெயரை ஏற்படுத்த சிலர் தீவிர முயற்சி

### மிரிஹான சம்பவம் குறித்து பொலிஸார் அறிக்கை

மிரிஹான ஜூபிலி போஸ்டில் உள்ள பால்மா விற்பனை நிலையத்தை பொலிஸார் சோதனை செய்து சீல் வைத்ததாக சமூக வலைதளங்களில் பரவி வரும் செய்திகள் ஆதாரமற்றவை, அவை வதந்திகள் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்கு அவப்பெயரை ஏற்படுத்தும் நோக்கில் இவ்வாறான பிரசாரங்கள் மேற்கொள்ளப்படுவதாக அவர்கள்

06

## துறைமுகத்தில் தேங்கியுள்ள அத்தியாவசிய பொருட்களை விடுவிக்க நடவடிக்கை

### புறக்கோட்டை விற்பனை நிலையங்களுக்கு அமைச்சர் பந்துல நேரடி கண்காணிப்பு விஜயம்



கடந்த சில தினங்களாக அரிசி உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகக் கூறப்படும் குற்றச்சாட்டுகளின் உண்மை நிலையை கண்டறிவதற்கும், பொருட்களை விநியோகிக்கும் முறைகள் குறித்து ஆராய்வதற்காகவும் வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்தன புறக்கோட்டை மொத்த வர்த்தக நிலையங்களை கண்காணிக்கும் பணியில் இணைந்துகொண்டார். இதன்போது புறக்கோட்டை மொத்த வியாபாரிகளுடனான கலந்துரையாடலின் போது,

06

## நாட்டில் மேலும் 41 ஒமிக்ரோன் தொற்றாளர்கள் கண்டுபிடிப்பு

### மொத்த எண்ணிக்கை 45ஆக உயர்வு



நாட்டில் மேலும் 41 ஒமிக்ரோன் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை, எதிர்ப்பு சக்தி ஆய்வு மற்றும் மரபணு விஞ்ஞான நிறுவனத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக ஆய்வகத்தில் மேற்கொள்ளப்பட்ட மரபணு பரிசோதனையில் இந்த ஒமிக்ரோன் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அதற்கமைய ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தில் இதுவரை அடையாளம் காணப்பட்ட ஒமிக்ரோன் தொற்றாளர்களின் எண்ணிக்கை 45 ஆக அதிகரித்துள்ளது.

### இலங்கைக்கு இந்தியா

## 10 பில். டொலர்களை கடனாக வழங்க வேண்டும்



இலங்கைக்கு இந்தியா 10 பில்லியன் டொலர்களை கடனாக வழங்க வேண்டும் என பாரதீய ஜனதா கட்சியின் சிரேஷ்ட அரசியல்வாதியும் இந்திய மாநிலங்களவை உறுப்பினர் சுப்பிரமணிய சுவாமி தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் குறித்து டுவிட்டரில் பதிவிட்டுள்ள அவர், இதன் மூலம் சீனாவிற்கு ஒரு சகா கிடைப்பதை தடுக்கலாம் என தெரிவித்துள்ளார்.

இந்து சமுத்திரத்தில் இந்தியா தனக்கு நீண்ட கால சகா ஒருவர் தேவை என கருதினால் இந்தியா

06

## நீர்வீழ்ச்சியில் நீராட சென்ற மூவரில் சிறுமி சடலமாக மீட்பு

### இருவரை தேடும் பணிகள் தீவிரம்



ஹங்வெல்ல தும்மோதர குமாரி நீர்வீழ்ச்சியில் நீராடச் சென்று காணாமல்போன இருவரை தேடும் பணிகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

06

### மாந்தையில் தனிப்பட்ட சிலர் அடாவடி:

## சட்டத்துக்கு முரணாக காணிகள் அபகரிப்பு!

### பிரதேச செயலாளர் குற்றச்சாட்டு



சட்டத்துக்கு முரணாக காணிகளை அபகரித்து வைத்திருக்கும் தனிப்பட்ட நபர்கள் தொடர்பில் பிரதேச செயலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும் போது அவர்களே விஷமத்தனமான கருத்துக்களை பரப்பி வருவதாக மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் ந.றஞ்சனா தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர்

06

## உள்நாட்டு மதுபானங்களுக்கு பாதுகாப்பு ஸ்டிக்கர் குறியீடு

### அறிமுகப்படுத்த கலால் திணைக்களம் ஏற்பாடு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் மதுபானங்களுக்கு பாதுகாப்பு ஸ்டிக்கர் ஒன்றை அறிமுகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. அரச திறைசேரிக்கு வரவேண்டிய வரிகளை அதிகரிப்பதற்காக இவ்வாறு தீர்மானித்துள்ளதாக கலால் திணைக்களத்தின் பேச்சாளர், கலால் ஆணையாளர் கபில குமாரசிங்க தெரிவித்தார்.

06




## 2022ஆம் ஆண்டில் நீண்டவார இறுதி விடுமுறை நாட்கள்

நாட்காட்டியின்படி 2022 ஆம் ஆண்டு நீண்ட வார இறுதி விடுமுறை கொண்ட ஆண்டாக காணப்படுகிறது. அதன்படி, வெள்ளி மற்றும் திங்கட் கிழமைகளில் ஏழு பொது விடுமுறைகள் வந்துள்ளன.

06

## 24 வயதுக்கு கீழுள்ள எவருக்கும் இனி சிகரட் விற்பதற்கு தடை!

சிகரட் உட்பட புகையிலை தயாரிப்புகளை விற்பனை செய்தல், கொள்வனவு செய்தல் மற்றும் மேம்படுத்தல் ஆகியவற்றுக்கான வயதெல்லை அடுத்த ஆண்டு முதல் 21 வயதில் இருந்து 24 வயதாக அதிகரிக்கப்படுகிறது என புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகார சபையின் தலைவர் கலாநிதி சமாதி ராஜபக்ச (Samadi Rajapaksa) தெரிவித்துள்ளார்.

புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான அதிகார சபை சட்டத்தில்

06

## பொது இடங்களில் இனி புகைப்பிடித்தால் ஆபத்து!

### கண்டறிய கைத்தொலைபேசியில் புதிய செயலி



பொது இடங்களில் புகைப் பிடிப்பவர்களை கண்டறிவதற்காக கைத்தொலைபேசியில் புதிய செயலி ஒன்று அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது.

புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான தேசிய அதிகார சபை மற்றும் சுகாதார அமைச்சு என்பன இணைந்து இந்த செயலியை அறிமுகப்படுத்தியுள்ளன.

அந்த செயலியைத் தரவிறக்கம் செய்வதன் ஊடாக

06

### இடமாற்ற பட்டியல் உள்ளிட்ட பிரச்சினைகள்:

## தொழிற்சங்க போராட்டம் நடத்த GMOA சங்கம் முஸ்தீபு

தொழிற்சங்க போராட்டம் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக நாளை மறுதினம் 3 ஆம் திகதி அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் விஷேட செயற்குழு ஒன்றுக் கூடவுள்ளது.

2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்தர இடமாற்ற பட்டியல் உள்ளிட்ட முக்கிய பிரச்சினைகளுக்கு தீர்வு கோரி பாரிய தொழிற்சங்க போராட்டத்தை முன்னெடுப்பது குறித்து இதன்போது ஆராயப்படவுள்ளது.

இன்று (01) முதல் அமுலாகும்

06

## ஜனவரியில் சம்பள அதிகரிப்பு இல்லையெனில் போராட்டம்

### ஆசிரியர், அதிபர் ஒன்றிணைந்த தொழிற்சங்கம் எச்சரிக்கை

அரசாங்கம் வழங்கிய வாக்குறுதிக்கு அமைய, ஜனவரி மாதத்தில் சம்பளம் அதிகரிக்கப்படாவிட்டால் தொடர் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக ஆசிரியர்,அதிபர் ஒன்றிணைந்த தொழிற்சங்கம் எச்சரித்துள்ளது.

அதன்படி, எதிர்வரும் 21ஆம் திகதி முதல் இவ்வாறு தொடர் பணிப்புறக்கணிப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாக அந்த சங்கம் அறிவித்துள்ளது.

06

### விக்கல் வீராச்சாமி



எங்கட பெரமுன கட்சி அரசாங்கத்த கலைக்கவோ கவிழ்க்கவோ எவராலும் முடியாது எண்டு ஜி. எல் பீரிஸ் ஐயா தெரிவிச்சிருக்கிறார்....

அவர் சொல்லியே உது எங்களுக்கு தெரியணும், எத்தனை பேர் எத்தனை தடவை அசைச்சுப் பாத்திச்சினம் என்ன நடந்தது...!!!

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2022 ஜனவரி 1 சனிக்கிழமை

# தினகரன்
THINAKARAN
තිනකරන්

**தொழுகை நேரம்**

01 முதல் 03 வரை

| | |
|---|---|
| சுபஹ் | 05.00 |
| லுஹர் | 12.15 |
| அஸர் | 03.36 |
| மஃரிப் | 06.06 |
| இஷா | 07.21 |

**இன்றைய சுபதினம்**

பிலவ வருடம் மார்கழி 17

ராகுகாலம் : பகல் : 09.00 - 10.30வரை
சுபநேரம் : காலை : 07.30 - 09.00வரை

யோகம்: சித்தயோகம்

திதி: சதுர்த்தசி

**இராசி பலன்கள்**

| | |
|---|---|
| மேஷம் | வெற்றி |
| ரிஷபம் | பாராட்டு |
| மிதுனம் | தனம் |
| கடகம் | போட்டி |
| சிம்மம் | கோபம் |
| கன்னி | முயற்சி |
| துலாம் | நன்மை |
| விருச்சிகம் | நிறைவு |
| தனுசு | செலவு |
| மகரம் | பொறுமை |
| கும்பம் | மறதி |
| மீனம் | சுகம் |

கலாநிதி இராமச்சந்திரகுருக்கள் (பாபு சர்மா)

# தேசிய பாதுகாப்பிற்கு தனியார் பாதுகாப்புத்துறையின் பங்களிப்பு அளப்பரியது

## பாதுகாப்புச் செயலாளர் தெரிவிப்பு



**ஸாதிக் ஷிஹான்**

தனியார் பாதுகாப்புத் தொழிற்துறை, வளர்ந்து வரும் ஒரு துறையாகும், தேசிய பாதுகாப்பிற்கு பங்களிப்பு செய்வதால் இவர்களினால் நாட்டிற்கு வழங்கப்படும் சேவை அளப்பரியது என பாதுகாப்பு செயலாளர் ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்தார்.

"பொருளாதாரத்திற்கு பங்களிப்பது மற்றும் நாட்டு மக்களுக்கு வேலை வாய்ப்புகளை உருவாக்குவது என்பன தவிர மிக முக்கியமாக, இலங்கை படைத்தரப்பில் சேவையாற்றிய வீரர்களைக் கொண்டு தனியார் பாதுகாப்பு நிறுவனங்கள், நாட்டின் தேசிய பாதுகாப்பை உறுதி செய்வதில் அதிக பங்களிப்பை வழங்கி வருகின்றன என்று மேலும் தெரிவித்தார்.

இலங்கை பாதுகாப்பு சேவை வழங்குநர்கள் சங்கத்தின் 2021ம் ஆண்டிற்கான 'வருடாந்த பொதுக் கூட்டம் கொழும்பு தாஜ் சமுத்திரா ஹோட்டலில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் :

பாதுகாப்பு செயலாளர் என்ற வகையில் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தும் பொறுப்பானது தனக்குறியது என சுட்டிக்காட்டிய அவர், தனியார் பாதுகாப்பு நிறுவனங்களைச் சேர்ந்த சுமார் 150,000 ற்கு மேற்பட்ட உறுப்பினர்களும் தேசிய பாதுகாப்பு இயந்திரத்தில் ஒருங்கிணைந்த பங்குதாரர்களாக மாறியுள்ளதை தான் உறுதியாக நம்புவதாகவும் தெரிவித்தார். தேசிய பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் அளிக்கும் ஜனாதிபதியின்

06

## பங்களாதேஷ் வங்கியிடம் பெற்ற

# 200 மில்லியன் டொலர் கடனை மீள செலுத்தும் கால எல்லை நீடிப்பு



பங்களாதேஷ் வங்கியிலிருந்து பெற்ற 200 மில்லியன் டொலர்களை மீளச் செலுத்தும் காலத்தை நீடிப்பதற்காக விடுத்த கோரிக்கை ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளதாக மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

விரைவில் டொலர் கையிருப்பை 03 பில்லியன் டொலர்களாக உயர்த்தப் போவதாக மத்திய வங்கி ஆளுநர் குறிப்பிட்டிருந்தார்.இதற்கிடையில் இந்தியாவிடமிருந்தும் சீனாவிடமிருந்தும் இலங்கை பொருளாதார உதவிகளை கோரியிருந்தது.

அதேநேரம் பங்களாதேஷ் வங்கியிலிருந்து ஏற்கனவே பெற்ற 200 மில்லியன் டொலர்களை மீளச் செலுத்தும் காலத்தை நீடிக்க விடுத்த கோரிக்கையும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதாகவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

அத்துடன் இலங்கை மத்திய வங்கியின் உத்தியோகபூர்வ கையிருப்பு 3.1 பில்லியன் அமெரிக்க டொலர்களை எட்டியுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் அண்மையில் தெரிவித்திருந்தார். ஏற்கனவே தாம் அறிவித்தப்படி உத்தியோகப்பூர்வ மாக

06

## உள்ளூர் பால்மா விலையும் அதிகரிப்பு:

# டொலர் தட்டுப்பாடு இருக்கும் வரை பால்மாவுக்கான தட்டுப்பாடும் தொடரும்

## இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**



இறக்குமதி செய்யப்படும் பால் மாவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் உள்ளூர் உற்பத்தி பால் மாவின் விலையை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாக கால்நடைகள் மற்றும் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் டி.பி. ஹேரத் தெரிவித்துள்ளார்.

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் 400 கிராம் பால் மா பக்கற்றின் விலையை 20 ரூபாவால் அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் இறக்குமதி செய்யப்படும் பால் மாவின் விலை அதிகரிக்கப்பட்டுள்ள நிலையில் சந்தையில் பால்மாவுக்கு நிலவும் தட்டுப்பாடு தொடர்வதாக பால்மா இறக்குமதியாளர்கள் சங்கம் கவலை வெளியிட்டுள்ளது.

நாட்டில் டொலருக்கான தட்டுப்பாடு நிலவும் வரை பால் மாவுக்கான தட்டுப்பாடும் தொடரும் என அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் கடந்த ஒரு மாத காலமாக நாட்டில் நிலவும் பால்மா தட்டுப்பாடு காரணமாக பொது மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்க நேர்ந்துள்ளது. சந்தையில் பால்மா தட்டுப்பாடு காரணமாக அந்த நிலை மேலும் தொடர்வதாகவும் அந்த சங்கம் தெரிவித்துள்ளது. இறக்குமதி செய்யப்படும் பால்மா ஒரு கிலோவின் 150 ரூபாவாலும் 400 கிராம் பால்மா விலை 60 ரூபாவாலும் கடந்த இரு தினங்களுக்கு முன் அதிகரிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஸ)

# மேல் மாகாணத்தில் நேற்று முதல் விசேட பாதுகாப்பு திட்டம் அமுல்

## பொலிஸ், CIDயினர் 24 மணி நேர கடமையில்

**லோரன்ஸ் செல்வநாயகம்**

கொழும்பு நகர் உட்பட மேல் மாகாணத்தில் விசேட பாதுகாப்பு வேலைத்திட்டம் நேற்று முதல் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

வாகனங்களை சோதனைக்கு உட்படுத்தல், மக்களுக்கு அசௌகரியம் ஏற்படுத்தும் வகையில் செயல்படுபவர்களை கைது செய்தல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை தேவைப்பட்டால் நிரந்தரமாகவும் தற்காலிகமாகவும் விசேட வீதித் தடைகளை ஏற்படுத்தவும் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

அது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்:



கொழும்பு நகருக்குள் பிரவேசிக்கும் வாகனங்களை கண்காணிப்பதற்காக நேற்றுமுதல் கொழும்பு மற்றும் மேல் மாகாணத்தை அண்டியுள்ள பகுதிகளில் பொலிஸாரினால் விசேட பாதுகாப்பு வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் காலிமுகத்திடல் பகுதியில் விசேட வாகன தரிப்பிடம் உருவாக்கப்பட்டுள்ள நிலையில் 24 மணித்தியாலமும் போக்குவரத்து பொலிஸார் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

அதேவேளை மதுபோதையில் வாகனம் செலுத்துபவர்கள், வீதி சட்டங்களை மீறுபவர்கள், அதிக வேகமாக வாகனத்தை செலுத்துபவர்கள் ஆகியோர் கைது செய்யப்பட்டு அவர்களுக்கு எதிராக கடும் சட்டங்களை பிரயோகிப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் பொதுமக்களுக்கு அசௌகரியங்களை ஏற்படுத்தும் வகையில் செயற்படுபவர்களை இனங்கண்டு அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்காக கொழும்பு நகரின் பல்வேறு பகுதிகளிலும் புலனாய்வு பிரிவு அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஸ)

# திடீர் விபத்துக்களால் வருடாந்தம் 1.3 மில். பேர் பாதிப்பு

**லோரன்ஸ் செல்வநாயகம்**

நாட்டில் இடம்பெறும் திடீர் விபத்துக்கள் காரணமாக வருடாந்தம் 1.3 மில்லியன் பேர் காயங்களுடன் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்படுவதாக விசேட மருத்துவ நிபுணர் சமித்த சிறிதுங்க தெரிவித்துள்ளார்.

இவ்வாறான அதிகமான திடீர் அனர்த்தங்கள் வீட்டு சுற்றாடலிலேயே இடம்பெற்று வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

விழுதல், விலங்குகளால் கடிபடுதல், மின்சார தாக்கம், தீக்காயங்கள், விஷம் ஏறுதல், குளிக்கச் சென்று நீரில் மூழ்கி ஏற்படும் அனர்த்தம் ஆகியவை இதில் உள்ளடங்குவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

விபத்துக்களற்ற பாதுகாப்பான வருடம் என்ற தொனிப்பொருளில்

06

# முல்லைத்தீவு, புதுக்குடியிருப்பில் 89 கிலோ கஞ்சாவுடன் நால்வர் கைது



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பிரதேசத்திற்குட்பட்ட சுதந்திரபுரம் பகுதியிலிருந்து மோட்டார் சைக்கிளில் கஞ்சா கடத்த முற்பட்ட நால்வர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருகையில்,

கஞ்சா கடத்தப்படுவதாக கடற்படையினருக்கு கிடைத்த தகவலுக்கு அமைய கடற்படையினர் பொலிஸ் விசேடஅதிரடிப் படையினருக்கு தகவல் வழங்கியதை தொடர்ந்து சுதந்திரபுரம் பகுதியில் நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸ் விசேட அதிரடிப்படையினர், மோட்டார் சைககிளில் கஞ்சா கடத்திய நால்வரை கைதுசெய்ததுடன் அவர்கள் பயணித்த மோட்டார் சைககிள்களையும் பறிமுதல் செய்தனர்.

இவர்களிடம் இருந்து 89 கிலோ பொதிசெய்யப்பட்ட கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளன. மூங்கிலாறு பிரதேசத்தைச் சேர்ந்த மூவரும் விஸ்வமடு பிரதேசத்தைச் சேர்ந்த ஒருவரும் இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் கடத்தலுக்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிள்கள் மூன்றும் மீட்கப்பட்டுள்ளன. கைப்பற்றப்பட்ட கஞ்சா மற்றும் சான்று பொருட்களை பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர்.

இவற்றை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

# இலங்கையின் சாகச சுற்றுலா ஜோர்தானில் ஊக்குவிப்பு

ஜோர்தானிலுள்ள இலங்கைத் தூதரகம் மேற்கொண்ட பொருளாதார இராஜதந்திர முயற்சிகளின் ஒரு பகுதியாக, இலங்கையின் சாகச சுற்றுலாவை வெளிப்படுத்தும் கண்காட்சி டிசம்பர் 27ஆம் திகதி அம்மானிலுள்ள கெலெரியா மோலில் நடைபெற்றது. ஜோர்தானில் ஒரு சின்னமான அடையாளமாகக் கருதப்படும் மிகப்பெரிய, உயர்தர கடைத்தொகுதி மோல்களில் ஒன்றான கெலெரியா மோல், கிறிஸ்மஸ் விடுமுறையின் போது கணிசமான மக்களை ஈர்க்கின்றது.

சாகச விளையாட்டுக்களான *Surfing, White Water rafting, Hot Air Ballooning, Zip lining* ஜோர்தானில் இல்லாத கடல் பாலூட்டிகளுடனான ஆழ்கடல் நீச்சல் மற்றும் வனவிலங்குப் பூங்காக்களிலான இயற்கை வாழ்விட சாகசங்கள் போன்ற சாகச விளையாட்டுக்களுக்கு முக்கியத்துவம் அளிக்கும் பல்வேறு பகுதிகளை உள்ளடக்கிய இலங்கையின் இயற்கைக் காட்சிகள் இந்தக் கண்காட்சியில் சித்தரிக்கப்பட்டன.சுற்றுலா ஊக்குவிப்பின் ஒரு பகுதியாக, சிலோன் தேயிலை, சிலோன் அராபிகா கோப்பி, இயற்கை ரப்பர் உற்பத்திகள், இயற்கை ரப்பரில் இருந்து பெறப்பட்ட உடலாரோக்கிய உற்பத்திகள், இயற்கையான தேங்காய் உற்பத்திகள், தென்னை நார் உற்பத்திகள், இயற்கை சவர்க்கார உற்பத்திகள் போன்ற இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்கள், நேச்சர்ஸ் சீக்ரெட், பரக்கா கொஸ்மெடிக்ஸ், ஸ்பா சிலோன் போன்ற இலங்கையின் அழகுசாதனப் பொருட்கள், முருங்கை மற்றும் சோர்சுப் போன்ற உணவுப் பொடிகள், இலங்கையின் கைவினைப் பொருட்கள், கைத்தறிப் பொருட்கள், தங்கொட்டுவ பீங்கான் போன்றன இதன்போது காட்சிப்படுத்தப்பட்டன.

# 50 வீத மாணவர்களுடன் பல்கலைக்கழகங்களை திறக்க நடவடிக்கை

**லோரன்ஸ் செல்வநாயகம்**

பல்கலைக் கழகங்களை ஜனவரி மாதம் முதல் மீண்டும் திறப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாகபல்கலைக் கழகங்கள் மானிய ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க பல்கலைக்கழகத்தின் கொள்ளளவில் 50 வீதமான மாணவர்களை முதற்கட்டமாக கல்வி நடவடிக்கைகளுக்காக அழைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். நாட்டில் நடைமுறையில் உள்ள சுகாதார வழிகாட்டல்களை முறையாகக் கடைப்பிடித்து விரிவுரைகள் மற்றும் பரீட்சை உள்ளிட்ட நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அனுமதி கிடைத்துள்ளதாகவும் பேராசிரியர் சம்பத் அமரதுங்க மேலும் தெரிவித்துள்ளார். (ஸ)

# 2 மாதங்களில் டெங்கு இரு மடங்காக அதிகரிப்பு



நாட்டில் கடந்த இரு மாதங்களுக்குள் டெங்கு நோய் பரவல் இரு மடங்காக அதிகரித்துள்ளதாக சுகாதார அமைச்சின் டெங்கு ஒழிப்பு பிரிவின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர தெரிவித்தார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கடந்த 10 ஆண்டுகளுக்குள் 2017 ஆம் ஆண்டு டெங்கு பரவல் தீவிரமாகக் காணப்பட்டது. 2017 இல் சுமார் 1,80,000 டெங்கு நோயாளர் அடையாளம் காணப்பட்டனர். அதன் பின்னர் இவ்வாண்டில் மீண்டும் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கடந்த நவம்பர் மாதத்தில் 4,561 டெங்கு நோயாளர்கள் இனங்காணப்பட்டனர். எனினும் டிசம்பரில் இந்த எண்ணிக்கை 8,740 ஆக உயர்வடைந்துள்ளது.

இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ள டெங்கு நோயாளர்களின் மூன்றில் இரண்டு மேல் மாகாணத்தை சேர்ந்தவர்களாவர்.

கடந்தாண்டுடன் ஒப்பிடும் போது மரணங்களின் எண்ணிக்கை கனிசமானளவு அதிகரித்துள்ளது. எவ்வாறிருப்பினும் இது ஆரம்ப காலங்களுடன் ஒப்பிடும் போது மிகவும் குறைவாகும்.

கொவிட்19 உள்ளிட்ட வேறு நோய்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு டெங்கு நோய் ஏற்பட்டால் பாரதூரமான விளைவுகள் ஏற்படாது.

எனினும் கர்ப்பிணிகள் டெங்கு நோய்க்கு உள்ளாவது பாதிப்புக்களை ஏற்படுத்தும். எனவே கர்பிணிகள் இது தொடர்பில் விசேட அவதானம் செலுத்த வேண்டும் என்றும் கூறினார்.

# அபிவிருத்தி திட்டங்களின்போது வன வளத்தை பாதுகாக்க Mobile App அறிமுகம்



வீதி அபிவிருத்தித் திட்டங்கள் உட்பட அபிவிருத்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் போது சுற்றுச்சூழலைப் பாதுகாத்து இலங்கையின் வன வளத்தைப் மேம்படுத்தல் மற்றும் நகரங்களை அழகுபடுத்துவதற்காக இரண்டு மில்லியன் மரக்கன்றுகளை நடுதல் உள்ளிட்ட அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக கையடக்க தொலைபேசிகளுக்கான செயலியொன்று Mobile App அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

வீதியின் இருபுறமும் நிழல் பாதுகாப்புக்கான சுற்றாடல் என்ற தொனிப்பொருளில் இந்த செயலி அறிமுகம் செய்யப்பட்டுள்ளதாக கிராமிய வீதிகள் மற்றும் விசேட உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சர் நிமல் லான்சா தெரிவித்தார்.

கிராமிய வீதிகள் மற்றும் விசேட உட்கட்டமைப்பு இராஜாங்க அமைச்சின் கீழ் வீதியின் இருபுறங்கள் மற்றும் பொது இடங்களில் மரக்கன்றுகள் நடும் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

நெடுஞ்சாலைகள் அமைச்சு, வீதி அபிவிருத்தி அதிகாரசபை, அரச வடிவமைப்பு மற்றும் அபிவிருத்திக் கூட்டுத்தாபனம் உட்பட வளப் பங்காளர்கள் இதற்கான பங்களிப்பை வழங்குவர். இந்த கையடக்க தொலைபேசி செயலி, மர நடுகை திட்டத்தை மிகவும் வெற்றிகரமாகவும் எளிதாகவும் ஒழுங்குபடுத்தும் வகையில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

நான்காண்டுகளில் இரண்டு மில்லியன் மரக்கண்டுகள் நடுவதற்கு எதிர்ப்பார்க்கப்பட்டுள்ளதுடன் 2021ஆம் ஆண்டில் சுமார் 100,000 கன்றுகள் நடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் சுபீட்சத்தின் நோக்கு கொள்கைப் பிரகடனத்துக்கமைய பசுமை அபிவிருத்தித் திட்டத்தை மேலும் வெற்றியடையச் செய்யும் நோக்குடன் இந்த செயலி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

# தண்ணீர் தொட்டியில் விழுந்து குழந்தை பலி

**ரமேஷ் ரெஜீனா**

ஒரு வருடமும் மூன்று மாதமும் நிரம்பிய குழந்தையொன்று தண்ணீர் தொட்டியில் தவறி விழுந்து உயிரிழந்துள்ள சம்பவமொன்று நேற்று முன்தினம் (30) ஊவா வெல்லஸ்ச, கோணகங்கார பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குழந்தையை வீட்டுக்குள் நித்திரையாக்கிவிட்டு தாயும் தந்தையும் தோட்ட வேலைக்கு சென்று, இடையிடையே தாயும் தந்தையும் மாறி மாறி உறங்கும் குழந்தையைப் பார்த்துச் சென்றுள்ளனர்.

மதியம் ஒரு மணியளவில் வந்து பார்த்த போது குழந்தை உறங்கிய இடத்தில் காணவில்லை. அப்பகுதி முழுவதும் தேடிய போது குழந்தை

06

## நாணய மாற்று

| நாணயம் | வாங்கும் விலை | விற்பனை விலை |
|---|---|---|
| அவுஸ்திரேலியா டொலர் | 141.83 | 147.84 |
| கனடியன் டொலர் | 153.64 | 159.49 |
| யூரோ | 223.85 | 232.67 |
| ஜப்பான் யென் | 1.7190 | 1.7840 |
| சிங்கப்பூர் டொலர் | 146.13 | 150.84 |
| ஸ்டேலிங் பவுன்ஸ் | 265.27 | 273.66 |
| சுவிஸ் பிராங்க் | 215.03 | 222.69 |
| அமெரிக்க டொலர் | 198.50 | 202.99 |

| மத்திய கிழக்கு | குறித்த விலை | | குறித்த விலை |
|---|---|---|---|
| பஹ்ரின் டினார் | 533.10 | கட்டார் ரியால் | 55.20 |
| குவைத் டினார் | 664.02 | சவூதி ரியால் | 53.51 |
| ஓமான் ரியால் | 522.07 | ஐ.அ. இராச்சியம் டிர்ஹாம் | 54.72 |

# தேர்தல் கால வாக்குறுதிகளை முடிந்தவரை நிறைவேற்றுவேன்

## பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல்



தேர்தல் காலங்களில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை முடிந்த வரை நிறைவேற்றி, நான் பிறந்த ஊரான சீனன் கோட்டையை அழகுபடுத்தி மக்கள் உள்ளங்களில் இடம்பிடிப்பேன் என பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் தெரிவித்தார்.

நகர சபை பிரதேசத்திற்குட்பட்ட சீனன்கோட்டை நௌபல் ஜாபிர் மாவத்தைக்கு காபட் இடும் பணிகளை (28) ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

நிகழ்வில் நகர சபைத் தலைவர் மஸாஹிம் மொஹமட், நகர சபை உறுப்பினர்கள், பிரதேச முக்கியஸ்தர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டனர். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,..கிராமிய வீதிகளின் அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் நௌபல் ஜாபிர் மாவத்தையில் காபட் இடும் பணியை ஆரம்பித்ததையிட்டு நான் பெரு மகிழ்ச்சியடைகிறேன். கடந்த தேர்தல்களில் ஜனாதிபதி தலைமையிலான இன்றைய அரசாங்கத்துக்கு என்னை நம்பி, எனது பிரதேச மக்கள் வாக்களித்து வெற்றியடையச் செய்ததற்கு நன்றிக்கடனாகவே இந்த காபட் இடும் பணியை ஊர் மக்களுக்கு நிறைவேற்றி வருகிறேன்.

நான் வழங்கிய வாக்குறுதிகள் வீண்போகாமல் எனது பாராளுமன்ற உறுப்பினர் பதவி முடிவதற்குள் ஊர் மக்களின் தேவைகளுக்கு மதிப்பளித்து ஊரை அழகுபடுத்துவேன் எனவும் பாராளுமன்ற உறுப்பினர் மர்ஜான் பளீல் மேலும் தெரிவித்தார்.

# பொருளாதாரத்தை உயர்த்தும் செயற்றிட்டம்

*மாத்தளை சுழற்சி நிருபர்*

சமுர்த்தி சௌபாக்கியா வாரத்தை முன்னிட்டு சமுர்த்தி வதிவிட பொருளாதார நுண் நிதி சுய தொழில் மற்றும் வியாபார அபிவிருத்தி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் வசதி குறைந்த குடும்பங்களின் பொருளாதார மேம்பாட்டை உயர்த்த வாழ்வாதார உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாத்தளை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன்போது இப்பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட சமுர்த்தி பயனாளிகள், கித்துள் உற்பத்தியாளர்கள், உட்பட சேதனப் பசளை உற்பத்தியில் ஈடுபட்டவர்களுக்கே இவை வழங்கி வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட மாத்தளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான நாலக்க கோட்டகொட பயனாளிகளுக்கு வாழ்வாதார உபகரணங்களை வழங்குவதையும் கலந்துகொண்ட பயனாளிகளின் ஒரு பகுதியினரையும் படங்களில் காணலாம்.









# தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம்: 834

தொலைபேசி இலக்கம்: 2429429, 2429272, 2429279

பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321


பிலவ வருடம் மார்கழி மாதம் 17ம் நாள் சனிக்கிழமை

ஹிஜ்ரி வருடம் 1443 ஜுமாதல் ஊலா பிறை 27

## குறள் தரும் சிந்தனை



பீலிபெய் சாகாடும் அச்சிறும் அப்பண்டஞ்
சால மிகுத்துப் பெயின்

*மயில் இறகாக இருந்தாலும்கூட அதிகமாக ஏற்றப்பட்டால் வண்டியின் அச்சு முறிகின்ற அளவுக்கு அதற்குப் பலம் வந்து விடும்.*

## உலகம் மீண்டெழ வேண்டுமென்று புத்தாண்டில் உறுதி கொள்வோம்!

புதிய ஆண்டில் உலகம் இன்று காலடி பதித்திருக்கின்றது. நேற்று நள்ளிரவுடன் 2021 ஆம் ஆண்டுக்கு நாம் விடை கொடுத்து விட்டோம். புதிய ஆண்டான 2022 இற்குள் இப்போது பிரவேசித்து விட்டோம். ஒவ்வொருவர் உள்ளத்திலும் புதிய நம்பிக்கைகள், இலட்சியங்கள் உருவாவது இயல்பாகும். உங்கள் ஒவ்வொருவரினதும் இலட்சியங்களில் நன்மையானவை, சிறந்தவை மாத்திரம் நிறைவேற வேண்டுமென்று இன்றைய புத்தாண்டு தினத்தில் தினகரன் வாசகர்களாகிய உங்களை மனதார வாழ்த்துகின்றோம்.

நாம் கடந்து வந்த வரலாற்றை நோக்குமிடத்து 2020, 2021 ஆம் ஆண்டுகள் உலகுக்கு மகிழ்ச்சி நிறைந்ததாக இல்லை என்பதை ஒப்புக் கொள்ளவே வேண்டியுள்ளது. இரு வருடங்களுக்கு முன்னர் சீனாவின் வுஹான் பிரதேசத்தில் முதன் முதலில் கொரோனா வைரஸ் இனங்காணப்பட்டதையடுத்து, உலகின் நிம்மதியே சீர்குலைந்து போனது.

கொரோனா வைரஸானது சீனாவில் மாத்திரம் பரவிய பின்னர் முற்றாக இல்லாதொழிந்து போய் விடுமென்றுதான் ஏனைய உலக நாடுகள் அனைத்தும் எண்ணியிருந்தன. ஆனால் மிகக் குறுகிய காலத்திலேயே கொரோனாவின் அபாயம் எத்தகையதென்பதை உலகம் கண்டு கொண்டது. உலகின் பெரும்பாலான நாடுகளுக்கு காட்டுத்தீ போன்று பரவிய கொரோனா தொற்றானது கடந்த சுமார் இரு வருட காலத்தில் விபரிக்க முடியாத பேரவலத்தை ஏற்படுத்தியிருக்கின்றது.

மில்லியன்கணக்கான மக்கள் உயிரிழந்து போனார்கள். பொருளாதாரம் உட்பட மனிதகுலத்தின் அத்தனை முன்னேற்றங்களையும் ஸ்தம்பிக்கச் செய்து விட்டது கொரோனா தொற்று. அது புதிய புதிய பிறழ்வுகளாகத் திரிபடைந்து உலகெங்கும் கோரத்தாண்டவம் ஆடியிருக்கின்றது. கொரோனா தற்போதுதான் ஓரளவு வீழ்ச்சி நிலைமைக்குச் சென்று கொண்டிருக்கின்றது. இப்போதுதான் நாம் ஓரளவாவது நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றோம். கொவிட் பெருந்தொற்றில் இருந்து மீண்டு விடலாமென்ற நம்பிக்கை உலகுக்கு இப்போதுதான் ஏற்பட்டுள்ளது.

ஒமிக்ரோன் என்ற புதிய பிறழ்வு உலகுக்கு தற்போது அச்சத்தை ஏற்படுத்தியிருந்தாலும் கூட, அதனால் எதிர்பார்க்கப்பட்ட உயிரிழப்புகள் அதிகளவில் இல்லையென்பதனால் நிம்மதி ஏற்பட்டுள்ளது. ஆகவே கொரோனா தொற்றைப் பொறுத்தவரை நாம் பிரவேசித்திருக்கின்ற புதிய ஆண்டானது பாரிய அபாயத்தை விளைவிக்காதென்பதே அனைவரினதும் நம்பிக்கையாகும்.

நிலைமை இவ்வாறிருக்கையில், கடந்த இரு வருட காலத்தில் ஏற்பட்ட பாரிய வீழ்ச்சியில் இருந்து எவ்வாறு மீண்டெழுந்து வருவதென்பதே உலகம் இப்போது எதிர்கொண்டுள்ள முக்கிய சவால் ஆகும். கொவிட் தொற்று காரணமாக உலக நாடுகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகளும், பின்னடைவுகளும் சாதாரணமானவையல்ல. சுருங்கக் கூறின் உலகம் இரு வருட காலத்துக்கு பின்தங்கிப் போய் விட்டதென்பதே உண்மை.

இவ்வாறான பின்னடைவில் இருந்து மீண்டெழுந்து வருவதென்பது இலகுவானதல்ல. உலக நாடுகளின் மனஉறுதியும், கடின உழைப்புமே இங்கு அவசியமாகின்றன. உலக நாடுகள் ஒவ்வொன்றுமே இன்று பொருளாதாரத்தில் வீழ்ச்சியடைந்துதான் கிடக்கின்றன. இலங்கையும் இதற்கு விதிவிலக்கு அல்ல. இந்தப் பின்னடைவுக்கு உலக நாடுகளின் அரசாங்கங்களை குறை கூறுவதால் பயனில்லை; அது நியாயமும் அல்ல.

ஒவ்வொரு நாட்டிலும் ஏராளமான தனியார் நிறுவனங்கள் மூடப்பட்டுக் கிடக்கின்றன. அவற்றில் பெருமளவு நிறுவனங்கள் இன்னுமே மீள ஆரம்பிக்கப்படவில்லை. அங்கெல்லாம் தொழில் புரிந்த இலட்சக்கணக்கான மக்கள் வேலைவாய்ப்பை இழந்துள்ளனர். பெருமளவான குடும்பங்கள் வருமானத்தை இழந்து வறுமையில் சிக்கியுள்ளன. கல்வி, சுகாதாரம், விவசாயம் போன்ற அனைத்துத் துறைகளுமே சரிந்து போய் விட்டன.

அரசாங்கங்களால் கூட ஒரு எல்லைக்கு மேலே என்னதான் செய்ய முடியும்? உலக நாடுகளில் அரசாங்கங்களின் திறைசேரி காலியாகி விட்டதால் மக்களுக்கான நலத்திட்டங்களும் பாதிக்கப்பட்டுள்ளன. தேசிய வருமானமே இழக்கப்பட்டு விட்ட போது, அரசாங்கங்களிடம் பொருளாதாரத்தை எவ்வாறு எதிர்பார்க்க முடியும்? கொவிட் தடுப்புத் திட்டங்களை மேற்கொள்வதற்கே உலக நாடுகள் பலவற்றிடம் பணமில்லாத நிலைமை இன்று உள்ளது.

உலக நெருக்கடி இவ்வாறிருக்கையில், இலங்கை அரசாங்கம் அத்தனை நெருக்கடிகளையும் கச்சிதமாகவே கையாண்டிருக்கின்றது என்றுதான் கூற வேண்டும். கொவிட் கட்டுப்பாட்டுத் திட்டங்களாகட்டும், மக்கள் நலத் திட்டங்களாகட்டும் அரசாங்கம் அத்தனை பணிகளையும் திறம்படவே மேற்கொண்டு வந்துள்ளது. அதன் மூலமே இலங்கையில் கொவிட் தடுப்புப் பணிகளை சிறப்பாக மேற்கொள்ள முடிந்துள்ளது.

கொவிட் தொற்று பரவல் தற்போது ஓரளவு தணிவு நிலைமைக்கு வந்திருக்கின்றது. இனிமேல் நாம் எதிர்நோக்குகின்ற சவால் முன்னைய நிலைமைக்கு மீண்டெழுவதே ஆகும். கடந்த சுமார் இருவருட காலத்தில் கொவிட் அலையின் உச்சத்தையெல்லாம் வெற்றியுடன் கடந்து வந்துள்ள இலங்கை மக்களுக்கு பொருளாதார சவால்களை முறியடித்து மீண்டெழுவதென்பது கடினமாக காரியமாக இருக்கப் போவதில்லை.

அதற்கான மனோதிடமும், பெருமுயற்சியும், திடசங்கற்பமும் உருவாக வேண்டுமென்று அனைவரையும் இன்றைய புத்தாண்டு நன்னாளில் வாழ்த்துகின்றோம்!

editor.tkn@lakehouse.lk

# புதிய நம்பிக்கைகளுடன் புத்தாண்டை வரவேற்போம்!




இறைவன் படைப்புகளில் மிகவும் அழகானது இவ்வுலகம். இறைவனின் படைப்புகளில் மிகவும் மேன்மை வாய்ந்தவர்கள் மனிதர்கள். அழகான இந்த உலகத்தில் மேன்மை வாய்ந்தவர்களாய் வாழ்வதை விட சிறப்பானதொன்று இருக்க முடியாது.

இறைவன் நமக்கு புதியதொரு ஆண்டைப் பரிசாகத் தந்திருக்கிறார். இது இறைவனின் ஆசிர்வாதத்தின் வெளிப்பாடு. புதிய ஆண்டுக்குள் அடியெடுத்து வைப்பதற்கு முன்பதாக நாம் கடந்த ஆண்டுக்காக இறைவனுக்கு நன்றி செலுத்த வேண்டும்.

ஒருவேளை நம்முடைய இதயத்தில் ஒரு கேள்வி எழலாம். கடந்த ஆண்டு மனித குல வரலாற்றிலேயே மறக்க முடியாத ஒரு ஆண்டு. அந்த ஆண்டுக்காக நன்றி செலுத்த வேண்டுமா?

நிச்சயமாக நாம் கடந்த ஆண்டுக்காக நன்றி செலுத்த வேண்டும். கடந்த ஆண்டு நமக்கு வாழ்க்கைப் போராட்டம் நடத்த சொல்லிக் கொடுத்திருக்கிறது; இறைவனை இன்னும் அதிகமாக தேட சொல்லித் தந்திருக்கிறது; இயற்கையை இன்னும் நேசிக்க வேண்டும் என்று சொல்லிக் கொடுத்திருக்கிறது; உறவுகளை தேட சொல்லித் தந்திருக்கிறது; உண்மையான உறவுகளை நமக்குக் காட்டியிருக்கிறது; எங்கள் மீதும் அக்கறையுடைய மனிதர்கள் இந்த உலகில் இருக்கிறார்கள் என்ற நம்பிக்கையை தந்திருக்கிறது; செல்வந்தர்களுக்கு சேர்க்க மட்டுமல்ல செலவு செய்யவும்தான் என்னுடைய பணம் என்பதை சொல்லித் தந்திருக்கிறது.

இன்னும் எத்தனையோ பாடங்களை ஒவ்வொரு மனிதருக்கும் கடந்த ஆண்டு சொல்லித் தந்திருக்கிறது. எனவே கடந்த ஆண்டுக்காக நன்றி செலுத்த வேண்டும். புதிய ஆண்டிலே நாம் நுழையும் போது, நம் ஒவ்வொருவரிடமும் ஒரு எதிர்ப்பார்ப்பு இருக்கும். அந்த எதிர்ப்பார்ப்பு என்னவென்றால், இந்த ஆண்டிலாவது என்னுடைய வாழ்க்கையில் ஒரு மாற்றம் வேண்டும் என்பதாகும்.

இந்த மாற்றம் என்பது எங்கிருந்து வர வேண்டும்? பல வேளைகளிலே இந்த மாற்றம் வேலையின் வடிவில் வர வேண்டும், பண வரவின் மூலம் வர வேண்டும், பிற மனிதர்களிடமிருந்து வர வேண்டும், பதவி உயர்வின் மூலம் வர வேண்டும், அதிர்ஷ்டலாப சீட்டிழுப்பிலே பணம் கிடைப்பதன் மூலம் வர வேண்டும்.

இப்படி நாம் நினைக்கிறோம். உண்மையிலேயே நம்முடைய வாழ்க்கையிலே புதிய ஆண்டிலே மாற்றம் மலர வேண்டுமென்றால் அந்த மாற்றத்தை நம்மிலிருந்து உருவாக்க வேண்டும். நாம் எப்படிப்பட்ட மாற்றத்தை விரும்புகிறோமோ அப்படிப்பட்ட மாற்றத்தை நாம் நம்மிடமிருந்து தொடங்க வேண்டும்.

வருவாயில் நான் மாற்றத்தைக் காண வேண்டும் என்றால், நான் அதற்காகத் திட்டமிட வேண்டும். வருவாயைப் பெருக்க நான் கடுமையாக உழைக்க வேண்டும், திட்டமிட வேண்டும். இப்படி தேவையானவற்றை நான் செய்ய வேண்டும். உலகமே மாற வேண்டும், ஒவ்வொரு மனிதனும் மாற வேண்டும் என்று பிறரை மாற்ற முயற்சிப்பதை விட நான் என்னை மாற்றி, என்னை ஒரு முன்னுதாரணமாக மனிதனாக மாற்றி நான் மாற்றத்தை தொடங்கலாம்.

இப்படி வருகிற ஆண்டிலே மாற்றத்தைத் தேடி அங்கும் இங்கும் அலையாமல் என்னிலிருந்து நான் மாற்றத்தை உருவாக்கி வாழ்ந்தால் நிச்சயமாக இந்த புதிய ஆண்டு ஆசிர்வதிக்கப் பட்ட ஒரு ஆண்டாக அமையும் என்று ஒவ்வொருவரும் திடசங்கற்பம் கொள்வதே சரியானது.

அன்புக்குரியவர்களே! இந்த புதிய ஆண்டிலே மாற்றத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற ஆசை நம்மிடம் இருக்கிறது. அந்த ஆசையை வெளியில் தேடுவதை விட நமக்குள் இருக்கக் கூடிய ஆற்றலைப் பயன்படுத்தி மாற்றத்தை உருவாக்குவோம்!


அருட்தந்தை
**அருண் றெக்ஸ்...**
புனித அன்னை தெரேசா ஆலயம், தல்கஸ்வல


# நாடெங்கும் 100 நகரங்களை அபிவிருத்தி செய்யும் திட்டம்



மக்கள் தேவைக்கேற்ப பிரதமரின் ஆலோசனையின் 100 நகரங்களை அபிவிருத்தி செய்வதற்கான செயற்றிட்டங்கள் நாடு முழுவதும் மேற்கொள்ளப்படவுள்ளன. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கை பிரகடனத்திற்கிணங்க நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில் இந்நகரங்கள் அபிவிருத்தி செய்யப்படும் என நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்தது.

நூறு நகரங்களின் அபிவிருத்தித் திட்டமானது தேவைகளைகளைக் கருத்தில் கொண்டு செயற்படுத்தப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டமாகும். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையின் பேரில் நகர அபிவிருத்தி, திண்மக்கழிவு அகற்றல் மற்றும் சுகாதார நடவடிக்கைகள் இராஜாங்க அமைச்சர் கலாநிதி நாலக்க கொடஹேவாவின் மேற்பார்வையின் கீழ் நூறு நகரங்களின் அபிவிருத்தித் திட்டங்கள் நகர அபிவிருத்தி அதிகாரசபை ஊடாக செயற்படுத்தப்படவுள்ளன.

அரசினால் மக்களுக்கு அளிக்கப்படும் சேவைகளில் முக்கிய சிறந்த செயற்றிட்டமாக இந்த நூறு நகரங்கள் அபிவிருத்தி வேலைத் திட்டத்தில் புத்தளம் மாவட்டத்தின் மாதம்பே மற்றும் தோப்பு நகரமும், அனுராதபுரம் மாவட்டத்தில் அனுராதபுரம் நகரமும், பொலன்னறுவை மாவட்டத்தில் ஜயந்திபுர நகரமும், முதன்மையாகக் கொண்டு அபிவிருத்தி செய்யப்பட்டு இறுதிக் கட்டத்தில் உள்ளன. மேற்படி 04 செயற்றிட்டங்களின் வேலைப்பணிகள் இறுதிக் கட்டத்தில் உள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்தது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கை பிரகடனத்திற்கிணங்க வழங்கப்பட்ட வாக்குறுதிக்கமைய 100 நகரங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டன. மேலும் இந்த செயற்றிட்டம் தொடர்பாக மக்களிடமிருந்து பெறப்பட்ட வேண்டுகோள்களின் அடிப்படையில் மேலும் பல நகரங்கள் இனங்காணப்பட்டன. அது தொடர்பான விடயங்கள் தற்பொழுது ஆராயப்பட்டு வருகின்றன.



### ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கை பிரகடனத்திற்கிணங்க வழங்கப்பட்ட வாக்குறுதிக்கமைய, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆலோசனையில் பணிகள் முன்னெடுப்பு

இவ்வேலைத் திட்டங்களுள் சிலாபம் மாதம்பே வாரச்சந்தையின் நிர்மாணப் பணிகள் நிறைவடைந்துள்ளதாக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் வடிவமைப்பாளர் திருமதி ரசிகா தெரிவித்தார்.



100 விற்பனையாளர்கள் தங்கியிருந்த பழைய வாராந்திர சந்தையில் 08 மீன் மற்றும் இறைச்சி விற்பனை கடைகள் அமைக்கப்பட்டு மேலதிகமாக 160 விற்பனையாளர்கள் தங்கும் வகையில் மீள் அபிவிருத்தி செய்யப்பட்டுள்ளது.

இந்தச் சந்தையில் விற்பனையாளர்கள் 160 பேரைத் தவிர்த்து, பல்வேறு பகுதிகளிருந்தும் விற்பனையாளர்கள் 400 இற்கும் அதிகமானோர் இங்கு வருகை தருவது சிறப்பாகும். சந்தையில் மரக்கறிகள் வாங்குவதற்காக தினமும் 1000 – 1500 வாடிக்கையாளர்கள் வருகை தருகின்றனர்.

இந்த வாராந்த சந்தையின் சிறப்பு என்னவென்றால், காய்கறிகள் மற்றும் பழங்கள் மற்றும் ஆடைகள் மற்றும் இனிப்புகள் போன்ற பல்வேறு அலங்கார பொருட்களும் விற்பனை செய்யப்படும்.

மாதம்பே வாரச்சந்தைக்கு சிலாபம், தம்புத்தேகம, கல்கமுவல, தலதாகமல, அம்பன்பொல நிகவெரட்டியல எஹெதுவெள மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளிலிருந்து வியாபாரிகளும் வாடிக்கையாளர்களும் வருகை தருகின்றனர். அப்பகுதிகளில் பயிரிடப்படும் பழங்கள், காய்கறிகள் இந்த சந்தைக்கு கொண்டு வரப்பட்டு விற்பனை செய்யப்படும். மாதம்பே வாரச்சந்தையின் முக்கிய மரக்கறி வாங்குனராக செயற்படுவது கொழும்பு மெனிங் சந்தையாகும்.

அதனைத் தவிர, மேலும், புதிய வசதிகளில் கழிப்பறை அமைப்புகள், பாதுகாப்பு அறைகள், தண்ணீர்த் தொட்டிகள், உணவகம் மற்றும் 30 வாகனங்கள் நிறுத்தும் இடம் ஆகியவை உள்ளடங்கும். இந்த

### சிலாபம் மாதம்பே வாரச்–சந்தையின் நிர்மாணப் பணிகள் பூர்த்தி

வாராந்த சந்தையின் நிர்மாணப் பணிகள் 67 மில்லியன் ரூபா செலவில் 150 நாட்களில் நிறைவடைந்தன.

இதேவேளை, புத்தளம் மாவட்டத்தில் தோப்புவ அபிவிருத்தித் திட்டப் பணிகள் தற்போது இறுதிக் கட்டத்தில் உள்ளன. மக்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் நோக்கில் அபிவிருத்தி செய்யப்படும் நூறு நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் 25 மாவட்டங்களுக்குள் முதலில் திட்டமிடப்பட்ட 30 திட்டங்களின் பணிகளை விரைவாக முடிக்க அரசாங்கம் உத்தேசித்துள்ளதாக நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இதுவரை நகரங்கள் அபிவிருத்தி செய்யப்படாமல் இருந்த பகுதிகளை மையமாக வைத்து, அபிவிருத்தி திட்டங்களைத் தேர்ந்தெடுப்பதில் கவனம் செலுத்திய அரசுக்கு அப்பகுதி மக்கள் தங்கள் பாராட்டுகளைத் தெரிவித்தனர்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் 'சுபீட்சத்தின் நோக்கு' கொள்கை பிரகடனத்திற்கிணங்க நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரான பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் பணிப்புரையின் பேரில், நகர அபிவிருத்தி, கழிவு அகற்றல் மற்றும் சுகாதார இராஜாங்க அமைச்சர் கலாநிதி நாலக கொடஹேவா, நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சின் செயலாளர் சிறினிமல் பெரேரா, தலைவர் நகர அபிவிருத்தி அதிகாரசபையின், ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் உதய நாணயக்கார, நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர ஆகியோரின் மேறபார்வை மற்றும் வழிகாட்டலின் கீழ் நகர அபிவிருத்தி அதிகாரசபையினால் இந்த அபிவிருத்தி திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.


**டபிள்யூ.கே. பிரசாத் மஞ்சு...**
*(நகர அபவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சரின் ஊடக செயலாளர்)*


# வெள்ளத்தில் மூழ்கியது சென்னை மாநகரம்!

## ஐந்து வருட காலத்தில் பெய்த பெருமழை!

சென்னை மற்றும் புறநகர் மாவட்டங்களில் நேற்றுமுன்தினம் பிற்பகல் தொடங்கிய கனமழை இடைவிடாது கொட்டித் தீர்த்தது. ஐந்து மணி நேரத்தில் 20 செ.மீ (200 மி.மீ) மழை பெய்ததால் சென்னை மற்றும் புறநகர் பகுதிகள் வெள்ளக்காடாக மாறின. சுரங்கப் பாதைகளும், வீதிகளும் மூடப்பட்டன. வீதிகளில் ஓடிய மழை நீரால் போக்குவரத்து முடங்கியது.

போக்குவரத்து நெரிசல் காரணமாக, வாகனங்கள் அணிவகுத்து நின்றன. எதிர்பாராத நிலையில் திடீரெனப் பெய்த கடும் மழையால் மக்கள் கடும் சிரமத்திற்கு ஆளாகினர்.

இந்த மாதம் தொடக்கத்தில் இருந்து மழை இல்லை என்பதால், மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்பியிருந்தனர். இந்நிலையில், தமிழக கடற்கரையோரம் நிலவிய வளிமண்டல மேலடுக்கு சுழற்சி காரணமாக, நேற்றுமுன்தினம் பிற்பகல் முதல் இரவு வரை கனமழை பெய்தது. இடைவிடாது மழை கொட்டித் தீர்த்தது.

கனமழை காரணமாக சென்னையில் பெரும்பாலான வீதிகளில் மழைநீர் குளம் போல் தேங்கியது. மணிக்கணக்கில் வாகனங்கள் அணிவகுத்து நின்றன. இதேபோல அடையாறு, சைதாப்பேட்டை, கிண்டி, திருவான்மியூர், நீலாங்கரை, சோழிங்கநல்லூர், தரமணி, வேளச்சேரி என, சென்னை மற்றும் புறநகர் பகுதிகளிலும் கனமழை காரணமாக வீதிகளில் வெள்ளம் ஓடியது.

கால்வாயில் ஏற்பட்ட அடைப்பு காரணமாக, நேற்றுமுன்தினம் தலைமைச் செயலக செய்தித் தொடர்பு அலுவலகம், செய்தியாளர்கள் அறை, சட்டசபை நிருபர்கள் அறைக்குள்ளும் தண்ணீர் புகுந்தது. வீதியில் தண்ணீர் தேங்கியதால், வாகன சாரதிகள் பெரும் அவதிக்குள்ளாகினர். பணி முடிந்து வீடு திரும்பியவர்கள் நனைந்தபடி சென்றனர். பல இடங்களில் வாகனங்கள் தண்ணீரில் மூழ்கியதால் அவற்றை எடுக்க முடியாத நிலை ஏற்பட்டது. சில மணி நேர மழையில் மக்களின் இயல்பு வாழ்க்கை அடியோடு பாதிக்கப்பட்டது.

ஐந்து ஆண்டுகளுக்கு பின்னர் நேற்றுமுன்தினம் சென்னையில் அதிக மழை பெய்துள்ளது.

# மலையக மக்கள் கௌரவத்துடன் வாழ்வதற்கு அர்ப்பணிப்புடன் உழைத்த அமரர் சந்திரசேகரன்

**அமரர் சந்திரசேகரன் 2000ஆம் ஆண்டு பொதுத்தேர்தல், 2005ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் விஞ்ஞாபனங்களின் போது மக்களிடம் முன்வைத்த பல கோரிக்கைகள் இன்றும் பேசுபொருளாக உள்ளன. அவற்றில் சில தமிழக முற்போக்கு கூட்டணியினால் சாதிக்கப்பட்டவையாகவும் உள்ளன. 'மலையக மக்களின் உணர்வுகளை ஒன்றிணைப்போம்' என சந்திரசேகரன் 2000 ஆம் ஆண்டே பிரகடனம் செய்து இருந்தார். மலையக மக்கள் தேசிய நீரோட்டத்தில் இணைய வேண்டும் என்ற அவரது இலக்கு இன்று நிறைவேறி உள்ளது.**

அவர் எதிர்பார்த்தவாறு மலையகத்திலுள்ள 234 பாடசாலைகளுக்கு இரண்டு ஏக்கர் வீதம் காணிகள் வே.இராதாகிருஷ்ணனின் முயற்சியினால் பெறப்பட்டுள்ளன. மலையகத்திற்கான பல்கலைக்கழகம் பற்றி சில சாதகமான தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவர் வழியுறுத்திய '7 பேர்ச்சஸ் காணி, வீட்டுரிமை' என்பன இன்று நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.



## மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகத் தலைவரும், முன்னாள் அமைச்சருமான அமரர் பெ. சந்திரசேகரன் அவர்களின் 12ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று

நாடற்றவர் என்ற கருத்தாக்கமும் லயன் என்ற குடியிருப்பும் இல்லாது ஒழிக்கப்பட வேண்டும்' என அவர் வலியுறுத்தினார். 2003 இல் நாடற்றவர் முறை ஒழிக்கப்பட்டது. லயன் முறை'களும் படிப்படியாக ஒழிக்கப்பட்டு தனிவீடுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. அவ்வாறே மலையகத்திற்கான பிரதேச சபைகள், பிரதேச செயலகங்களும் அதிகரிக்கப்பட்டுள்ளன.

மலையகத்தில் மாற்றுத் தலைமையொன்று முதன் முதலாக 1989 இல் அறிவு சார்ந்த மலையக இளைஞர்களால் உருவாகியது. மலையகத்துக்கு புதிய அரசியல் தலைமையை வழங்கிய போது, மலையக மக்கள் மட்டுமல்லாது வடக்கு, கிழக்கு மாகாணங்களில் வாழும் தமிழ் மக்களின் பிரச்சினைகளை நன்கு புரிந்தவராக அவர் பரிணமித்தார்.

மலையக சமூகத்தின் தனித்துவத்தை வலியுறுத்திய அவர், இந்தியாவுடனான உறவில் உறுதியாக இருந்தார். நான்கு தடவைகள் மலையக மக்கள் முன்னணி மற்றும் ஐக்கிய தேசிய கட்சிகளின் கீழ் தேர்தலில் பெரும் வெற்றி பெற்று பிரதியமைச்சராக, அமைச்சரவை அமைச்சராக பதவியேற்று மலையக மக்களுக்கு பெரும்பணியாற்றினார். மலையக மக்கள் சமூக ரீதியாக எதிர்நோக்கிய பிரச்சினைகளின் போதும், அடக்குமுறைகளுக்கு எதிரான போராட்டங்களிலும் மலையக மக்களை ஒன்றிணைக்கும் சக்தியாக அவர் விளங்கினார். அவர் முன்னின்று நடத்திய போராட்டங்கள் காரணமாக சிறை செல்லவும் நேரிட்டது.

தற்போது பேசப்படும் மலையக பல்கலைக்கழகம் என்ற கோரிக்கை 2005 ஆம் ஆண்டிலேயே அவரால் அரசாங்கத்திடம் முன்வைக்கப்பட்டது. அக்காலத்தில் அவர் முன்னின்று மலையக பேராசிரியர்களைக் கொண்ட சிந்தனை குழாம் ஒன்றை அமைத்து பல்வேறு வேலைத்திட்டங்களை தயாரித்தார். உதாரணமாக மேலதிக பிரதேச சபைகள், பிரதேச செயலகங்கள், புதிய கிராம சேவகர் பிரிவுகளை ஏற்படுத்துதல், வறுமைக் கோட்டின் கீழ் வாழ்பவர்களுக்கான சமுர்த்தி நிகழ்ச்சித் திட்டம், பாடசாலைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், அரச துறையில் புதிய வேலைவாய்ப்புகள் போன்ற வேலைத்திட்டங்கள் அன்னாரின் சிந்தனைகளின் வழிவந்தவையாகும்.



ஏழு பேர்ச்சஸ் காணிகளுடனான தனிவீட்டுத் திட்டத்திற்கு காரணமாக இருந்த சந்திரசேகரன் தோட்ட வீடமைப்பு பொதுவசதிகள் பிரதி அமைச்சராக இருந்த 1995 – 1999 காலத்தில் ஏறத்தாழ 12000 வீடுகளை நிர்மாணித்தார்.

தமது காலத்தில் 'லயன்' என்ற வார்த்தையை முற்றாக ஒழித்துக் கட்டுவதை நோக்காக கொண்டு அவர் செயற்பட்டார். அமரர் எம்.அருள்சாமியையும் இணைத்து மத்திய மாகாண சபைத் தேர்தலில் வெற்றி பெற வைத்தவர். தொழிற்சங்க தலைவர் த.ஐயாதுரையையும் தம்முடன் இணைத்துக் கொண்டார். பின்னர் கொழும்பு மாவட்ட மக்கள் மத்தியில் மலையக மக்கள் முன்னணியை கட்டியெழுப்ப வேண்டும் என்ற நோக்கில் பெ.இராதாகிருஷ்ணனுக்கு இரண்டு தடவைகள் தேசியப் பட்டியல் ஊடாக பாராளுமன்ற பிரதிநிதித்துவத்தை வழங்கி பிரதியமைச்சராக்கினார்.

ஒக்டோபர் 2000 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுடன் செய்து கொள்ளப்பட்ட தேர்தல் கூட்டு உடன்படிக்கையின்படி ஐ.தே.கட்சி வழங்கிய மூன்று வேட்பாளர்கள் நியமன வாய்ப்பில், பதுளையில் போட்டியிட ஏ.அரவிந்தகுமாரை அனுப்பினார். அவர் நுவரெலியாவில் போட்டியிட்டு வெற்றி பெற்றார். மனோகணேசனை அரசியல் ரீதியாக வளர்த்தெடுக்க வேண்டும் என்ற தொலைநோக்கு சிந்தனையில் கொழும்பு மாவட்டத்தில் போட்டியிட ம.ம. முன்னணிக்கு கிடைத்த நியமனத்தை வழங்கினார். மனோகணேசனையும் பழனி திகாம்பரத்தையும் தேசிய அரசியலில் பிரகாசிக்க செய்தவர் சந்திரசேகரன்.

அவர் இந்திய மத்திய அரசுடன் தொடர்புகளை வலுப்படுத்திக் கொண்டார். தமிழக அரசியல் கட்சி தலைவர்களுடன் நல்லுறவை பேணினார். இந்திய வீடமைப்புத் திட்டம் மலையக மக்களை நோக்கியும் விஸ்தரிக்கப்பட வேண்டும் என்ற முனைப்புடன் இந்திய முன்னாள் பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்து அதற்கான வேண்டுகோளை முன்வைத்தார்.

மலையக சமூகத்தின் பொருளாதாரப் பிரச்சனைகள் பற்றிய ஆழ்ந்த புரிந்துணர்வு அவரிடம் இருந்தது. நாட்டில் வாழும் அனைத்து இன மக்களும் சமத்துவமான அரசியல், சமூக, பொருளாதார உரிமைகளை பெற்று வாழ வேண்டும் என்ற சிந்தனையுடன் செயற்பட்டார்.

மத்திய மாகாண சபை உறுப்பினராக பணியாற்றி 1994 ஆம் ஆண்டு பொதுத்தேர்தலில் மலையக மக்கள் முன்னணியின் மண்வெட்டி சின்னத்தில் போட்டியிட்டு 23,453 வாக்குகளை பெற்று பாராளுமன்றத்துக்கு அவர் தெரிவான போதுஈ அன்றைய அரசாங்கத்தை அமைப்பதில் ஒரு பிரதான சக்தியாக விளங்கினார்.

அன்றைய அவசரகாலச் சட்டத்துக்கு ஆதரவளிப்பதிலிருந்து விலகி தனது மனச்சாட்சிக்கு இணங்கிச் செயற்பட்டார். 2010 ஜனவரி 1 ஆம் திகதியன்று அவரது திடீர் மரணச் செய்தியை கேட்க நேர்ந்த போது முழு தமிழ் சமூகத்துக்கே பேரதிர்ச்சியாக அமைந்திருந்தது.

'மலையகம் பல்வேறு கருத்தியல்களின், பல தரப்பினரின் அபிலாஷைகளது மோதல் களமாகவே திகழ்ந்திருக்கிறது. இந்தப் பன்முக போக்கை, மலையக அரசியல், சமூக, கலாசார வெளியில் உருவாகி வரும் மாறுபட்ட சிந்தனைப் போக்குகளை, மாறிச் செல்லும் தடங்களை நுட்பமாக அறிந்து வைத்திருந்த ஒரு அரசியல் போராளியின் மறைவு மலையகத்தின் எழுச்சிமிகு வரலாற்றுச் செல்நெறியில் கவிந்து போய் விட்ட கருநிழலாக துயரத் தோற்றம் தருகிறது' என்கிறார் மலையக ஆய்வாளர் மு.நித்தியானந்தன்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவராகச் செயற்பட்ட இருபது ஆண்டு காலப் பகுதியில் அவரது இலட்சியப் பாதையில் இணைந்து பற்றுறுதி கொண்டு பயணித்தவர்கள் மிகப் பலராவர். யதார்த்த நடைமுறைக்கு ஒவ்வாத விமர்சனங்களை வீசியவர்கள் சமுதாயத்திலிருந்து ஒதுங்கிப் போனார்கள். இந்தக் காலப் பகுதிகளில் அவர் சந்தித்த சவால்கள் பல, எதிர்கொண்ட சோதனைகள் இழப்புகள் அநேகம். அவற்றையெல்லாம் ஒரு தலைவனின் துணிவோடும், தீர்க்கதரிசனத்தோடும் அவர் வெற்றிகரமாகக் கையாண்டார். அந்த உயர்குணம் கொண்ட அரசியல்வாதியின் மறைவு மலையக சமுதாயத்திற்கு மட்டுமல்ல முழு இலங்கைக்கும் பேரிழப்பாகும்.

**எச்.எச்.விக்ரமசிங்க...**

# தைப்பொங்கல் பண்டிகையை தமிழ்நாட்டில் கொண்டாட தயாராகின்றார் பிரதமர் மோடி!

**இந்திய ஆளும் கட்சியான பாரதீய ஜனதா கட்சி இம்முறை தமிழர் திருநாளான தைப்பொங்கல் விழாவை தமிழ்நாட்டின் பண்டைய சிறப்பு மிக்க நகரமான மதுரையில் கொண்டாடவிருக்கின்றது. மிகக் கோலாகலமாக நடைபெறவிருக்கின்ற பா.ஜ.கவின் தைப்பொங்கல் விழாவிலே இந்தியப் பிரதமர் நரேந்திரமோடி பிரதம விருந்தினராகப் பங்கேற்கவுள்ளார்.**

இதற்கான ஏற்பாடுகள் இப்போதிருந்தே நடைபெற்று வருகின்றன. தமிழர் கலைகலாசாரங்கள் மீதும் இலக்கியங்கள் மீதும் மிகுந்த பற்று கொண்டவரான நரேந்திர மோடி தைப்பொங்கல் விழாவுக்கு தமிழகம் வருகை தருவது சிறப்பானதாக நோக்கப்படுகின்றது.

மதுரையில் பா.ஜ.க சார்பில் இம்மாதம் 12 ஆம் திகதி நடைபெறும் தைப்பொங்கல் திருவிழாவில் பிரதமர் நரேந்திரமோடி பங்கேற்க உள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளதை தமிழக மக்கள் வரவேற்றுள்ளனர்.

இது தொடர்பாக தமிழக பா.ஜ.க தலைவர் அண்ணாமலை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் பொங்கல் விழா பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

'தமிழர் திருநாளான தைப்பொங்கல் பண்டிகையை ஒட்டி, தமிழக பா.ஜ.க சார்பில் 'மோடி பொங்கல்' நிகழ்ச்சி ஜனவரி 12 ஆம் திகதி மதுரையில் நடைபெற உள்ளது. இந்நிகழ்ச்சியில் பிரதமர் நரேந்திர மோடி கலந்து கொண்டு சிறப்பிக்க உள்ளார். இந்நிகழ்ச்சியினை ஒருங்கிணைந்து சிறப்பான முறையில் நடத்துவதற்கு மாநில பொதுச் செயலாளர் கரு.நாகராஜன் தலைமையில் குழு அமைக்கப்படுகிறது.

இவ்வாறு அண்ணாமலை கூறியுள்ளார்.

திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் மற்றும் பாரதியாரின் கவிதைகள் மீது மிகவும் அபிமானம் கொண்டவராக பிரதமர் நரேந்திர மோடி உள்ளார். இந்நிலையில் தமிழ் மக்களின் பாரம்பரிய பண்டிகையை சிறப்பிக்கும் நோக்கிலேயே அவர் இம்முறை பொங்கல் பண்டிகையை தமிழர்கள் வாழும் மாநிலமான தமிழ்நாட்டில் கொண்டாடவிருக்கின்றாரென்பது குறிப்பிடத்தக்கது.





# வடக்கு மண்ணில் பிறந்து, பசறை த.ம.வியின் உயர்வுக்காக உழைத்த ஆசிரியர் விக்னேஸ்வரன்

**பதுளை பசறை தமிழ் மகாவித்தியாலயத்தில் (தேசிய பாடசாலை) 'விக்கி சேர்' என்று எல்லோராலும் அன்போடு அழைக்கப்படும் கணேசன் விக்னேஸ்வரன் அவர்கள் தனது முப்பத்திரண்டு வருட கால அரசாங்க சேவையில் இருந்து கடந்த 23.12.2021 அன்று ஓய்வு பெற்றார்.**

யாழ்ப்பாணம், காரைநகர் ஆயிலி பிரதேசத்தில் கணேசன் பரமேஸ்வரி தம்பதிகளுக்கு 14.03.1962 அன்று மகனாகப் பிறந்த விக்னேஸ்வரன் தனது ஆரம்பக் கல்வியை காரைநகர் சிவஞான ஓதியார் வித்தியாலயத்தில் கற்று இடைநிலை மற்றும் உயர்தர கற்கைகளை காரைநகர் கல்லூரியிலும் கற்றுத் தேர்ந்தார்.

01.09.1989 இல் ஆசிரியர் நியமனம் பெற்று லுணுகலை சோலன்ஸ் தமிழ் வித்தியாலயத்தில் ஆரம்பித்த இவரது மலையக சமூகத்திற்கான கல்விச்சேவை முப்பத்து இரண்டு வருடங்களாக இங்கேயே தொடர்ந்து இங்கேயே நிறைவு பெறுகிறது.

ஊவா மாகாணத்தில் மிகவும் பின்தங்கியதொரு பெருந்தோட்டப் பிரதேசமாக பசறை பிரதேசத்தை குறிப்பிடலாம். அவர் நியமனம் பெற்று வந்த காலப்பகுதியில் இங்கு நிலைமை மிகவும் மோசமாகவே இருந்தது. ஆனாலும் அவரிடமிருந்த தியாக சிந்தனை மற்றும் மலையக சமூகத்தின் கல்வி வளர்ச்சி மீதிருந்த அக்கறையே இன்றுவரை இவரை இங்கே தக்க வைத்திருந்தது.

சோலன்ஸ் தமிழ் வித்தியாலயத்தில் மூன்று வருடங்களும் பின்னர் சுவின்டன் தமிழ் மகாவித்தியாலயத்தில் அதிபராக ஏறத்தாழ ஐந்து மாதங்கள் சேவையாற்றி, பசறை கோணகலை தமிழ் மகாவித்தியாலயத்திற்கு 01.11.1991 அன்று மாற்றலாகினார். இங்கு சேவையில் இருக்கும்போதே பலாலி ஆசிரியர் பயிற்சிக்கலாசாலைக்கு வணிகக்கல்வி பாடநெறிக்கான ஆசிரியர் பயிலுனராக தெரிவு செய்யப்பட்டு மூன்று வருட பயிற்சி நெறியை பூர்த்தி செய்து பயிற்றப்பட்ட ஆசிரியராக மீண்டும் கோணகலை தமிழ் மகாவித்தியாலயத்தில் இணைந்தார். அங்கிருந்து மாற்றலாகி 07.03.1995 அன்று பது/பசறை தமிழ் மகாவித்தியாலயத்தில் தனது சேவையை ஆரம்பித்தார்.

பசறை தமிழ் மகாவித்தியாலயத்திற்கும் இவருக்குமான தொடர்பு அற்புதமானது. இவர் குடும்பத்துடன் செலவழித்த காலத்தை விட பாடசாலையுடன் கழித்த நாட்களே அதிகம். பல்துறை ஆளுமை கொண்ட இவர் இங்கு ஆற்றிய சேவைகளும் நிலைநாட்டிய சாதனைகளும் அதிகம். ஒவ்வொரு பாடத்திற்கும் பிரத்தியேகமாக பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்கள் இல்லாத அந்த காலத்தில் குறைந்த அடிப்படை வசதிகளுடன் தனக்கு வழங்கப்பட்ட அனைத்து பாடங்களையும் திறம்பட கற்பித்தார். 1997 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தரம் வணிகத்துறையில் மூன்று பாடங்களையும் கற்பித்து ஊவா மாகாணத்தில் சிறந்த பெருபேற்றை பெற்றுக் கொடுத்ததற்காக ஊவா மாகாண கல்வித் திணைக்களத்தினால் சிறந்த கற்பித்தலுக்குரிய விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டார்.



32 வருட அரச சேவையிலிருந்து ஓய்வு

வணிகத்துறையில் பயிற்சிபெற்ற ஆசிரியராக இருந்தபோதிலும் க.பொ.த உயர்தர மாணவர்களுக்கு இந்து நாகரிக பாடத்தையும் குறிப்பிட்ட காலம் வரை போதித்துள்ளார். இணைப்பாடவிதான செயற்பாடுகளிலும் இவரது பங்களிப்பு அளப்பரியது. நாடகங்கள், கூத்துகள், நடனங்கள் என இவரது நெறியாள்கையில் மேடையேறிய பலர் இன்று சமூகத்தில் நல்ல நிலைகளில் உள்ளனர்.

1997 இல் தேசிய இளைஞர்கள் சேவை மன்றத்தினால் நடாத்தப்பட்ட போட்டிகளில் இவரால் பயிற்றுவிக்கப்பட்ட பது/பசறை தமிழ் மகா வித்தியாலய நடனக்குழு தேசிய மட்டத்தில் முதலாமிடத்தை சுவீகரித்துக் கொண்டது.

ஜோன் த சில்வா போன்ற பெரும் அரங்கொன்றில் பின்தங்கிய பெருந்தோட்ட மாணவர்களுக்கு அவர் பெற்றுக்கொடுத்த அங்கீகாரம் இப்பிரதேச வரலாற்றில் பொன் எழுத்துக்களால் பதியப்பட வேண்டியது. பாடசாலை களப்பயணங்களின்போது இவரது பங்களிப்பும் பழைய மாணவர்களால் இன்றளவும் ஞாபகப்படுத்தப்படுகிறது.

மேலும் பாடசாலையூடான ஆன்மீக எழுச்சிக்கு வித்திட்ட இவரது சமயத் தொண்டுக்கு சான்றாக பது/ பசறை தமிழ் மகா வித்தியாலய முன்றலில் அமைந்துள்ள ஸ்ரீ சரஸ்வதி ஆலயத்தினை குறிப்பிடலாம். இவ்வாலயத்தை இங்கு நிறுவுவதற்கு முன்னோடியாக செயற்பட்டவர்களுள் இவரும் பிரதானமான ஒருவராக திகழ்ந்துடன் ஆலயத்தின் இயக்கத்திற்காக உடலாலும் பொருளாலும் இவர் செய்த திருப்பணிகள் எண்ணிலடங்காதவை.

மிகவும் கண்டிப்பான ஒரு ஆசிரியரான இவர் மாணவர்களது கல்வி வளர்ச்சியை போலவே ஒழுக்க விழுமியங்கள், ஒழுகலாறுகள் மற்றும் சூழல் நேய பணிகளின் மீதான ஈடுபாட்டை வளர்ப்பதில் செயற்பட்டவர்.

பசறை தமிழ் மகாவித்தியாலயத்தின் ஒவ்வொரு வளர்ச்சிப்படியிலும் உணர்வால் ஒன்றிவிட்டிருந்த இவரது நீண்ட கல்விச்சேவைக்கு சிரம் தாழ்த்தி நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றனர் இப்பிரதேச மக்கள்.

**நடராஜா மலர்வேந்தன்...**
(லுணுகல நிருபர்)

## தேசிய பாதுகாப்பிற்கு...

(02ஆம் பக்கத் தொடர்)

தேர்தல் விஞ்ஞாபனம் தொடர்பாக குறிப்பிட்ட அவர், தேசிய பாதுகாப்பினது பெறுபேறுகள் சாதகமாகவோ அல்லது பாதகமாகவோ அமைந்தாலும் அதற்கு பாதுகாப்பு செயலாளர் என்றவகையில் தானே பொறுப்புக்கூற வேண்டும் என தெரிவித்தார், தேசிய பாதுகாப்பு தொடர்பான கட்டளை, அதிகாரம், பொறுப்பு என்பன தனது தோளிலேயே சுமத்தப்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டார்.

இலங்கை தனியார் பாதுகாப்பு சேவை நிறுவனங்களின் முக்கியஸ்தர்கள் மத்தியில் தொடர்ந்து உரையாற்றிய அவர், கொவிட்19 தொற்று காரணமாக தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் நாடு முழுவதும் வளர்ச்சியைக் காட்டும் தொழில் துறையாக இத்துறை மாறிவருவதை அவர் சுட்டிக்காட்டினர். பொறுப்புகளை ஏற்கத் தயாராகும் மனித மூலதன முதலீட்டில் அறிவு, திறன் அபிவிருத்தி என்பன மிக முக்கியமான காரணிகளாக அமையும் என தெரிவித்தார். இந்த நிகழ்வில் இலங்கை பாதுகாப்பு சேவை வழங்குநர்கள் சங்கத்தின் தலைவர், உறுப்பினர்கள் உட்பட சங்கத்தின் நிர்வாகிகள், அதிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## 61 எண்ணெய்த் தாங்கிகள்...

செய்யப்படவுள்ளதாக எரிசக்தி அமைச்சர் உதய கம்மன்பில நேற்று (31) தெரிவித்தார்.

அமைச்சு அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன் மூலம் திருகோணமலை எண்ணெய் தாங்கி கட்டமைப்பிலுள்ள 99 எண்ணெய்த் தாங்கிகளுள் 85 எண்ணெய் தாங்கிகளின் நிர்வாகம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் வசம் கிடைக்குமென அவர் தெரிவித்தார்.

இலங்கை பெற்றோலிக் கூட்டுத்தாபனத்துக்கு நேரடியாக கிடைக்கும் 24 தாங்கிகள் மற்றும் இலங்கை பெற்றோலிக் கூட்டுத்தாபனத்தின் துணை நிறுவனங்களினூடாக பெறப்படும் 61 தாங்கிகளுடன் மொத்தம் 99 தாங்கிகளுள் 85 எண்ணெய்த் தாங்கிகள் கூட்டுத்தாபனத்துக்கு கிடைப்பதுடன் அதில் 14 எண்ணெய்த் தாங்கிகள் மட்டுமே ஐ.ஓ.சி நிறுவனத்துக்கு கிடைப்பதாக அமைச்சர் தெரிவித்தார்.

அவற்றில் 14 தாங்கிகள் மாத்திரம் ஐஓசியின் 49 சதவீத பங்குகளை கொண்ட Trinco Petrolium நிறுவனத்துக்கு இன்னும் 50 வருடங்களுக்கு குத்தகைக்கு விடப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது என்றார்.

இந்தியாவுடன் செய்து கொள்ளப்பட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 99 எண்ணெய் தாங்கிகளில் 24 தாங்கிகள் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்திடம் இலங்கை அரசாங்கத்தினால் கையளிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 1987ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட அபிவிருத்திக்கான கூட்டு ஒப்பந்தத்திலிருந்து 24 எண்ணெய் தாங்கிகள் மீட்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

இந்த நிறுவனம் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் துணை நிறுவனமாகும். பணிப்பாளர் சபையில் 07 பேரில் 04 பேர் பெற்றோலிய கூட்டுத்தாபனத்தினாலேயே நியமிக்கப்படுவர். தலைவர் பதவி பெற்றோலிக் கூட்டுத்தாபனத்துக்கே உரித்தாகும். அதேபோன்று கணக்காளர் நாயகத்தினால், கணக்காய்வு செய்யப்படும் பாராளுமன்ற கோப் குழுவுக்கு நிறுவனத்தின் உயரதிகாரிகளை அழைத்து நிறுவனம் தொடர்பில் கேள்விக்குட்படுத்தவும் முடியும்.

பாராளுமன்றத்தில் விடயதானத்துக்குப் பொறுப்பான அமைச்சரிடம் கேள்வி கேட்கக்கூடியவாறு முன்மாதிரி நிறுவனமாக இந்த நிறுவனம் நிறுவப்படும். 1987 மற்றும் 2003 ஒப்பந்தங்களின் கீழ் இந்தியாவின் கட்டுப்பாட்டிலிருந்த திருகோணமலை எண்ணெய்த் தாங்கி வளாகம் மீண்டும் எமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரக் கிடைத்தமை வரலாற்று வெற்றியாகவே கருதுகிறோம்.

எப்பொழுதும் சோக மயமான செய்திகளைக் கேட்டுக்கொண்டே இருக்கும் நம் நாட்டு மக்களுக்கு நற்செய்தியைக் கொண்டு வர முடிந்ததில் மகிழ்ச்சி அடைகிறோம்.

எனது கையொப்பத்துடன் காணி அமைச்சரின் கையொப்பத்துடன் அமைச்சரவைப் பத்திரத்தை ஜனாதிபதியின் செயலாளருக்கு அனுப்பி வைத்ததன் பின்னரே இந்த ஊடகவியலாளர் சந்திப்பில் நான் கலந்து கொண்டேன்.

இந்த விடயம் எதிர்வரும் ஜனவரி 03 ஆம் திகதி நடைபெறவுள்ள அமைச்சரவை கூட்டத்தில் ஆராயப்படவுள்ளது. அமைச்சரவையின் அனுமதி கிடைத்ததும் ஒப்பந்தம் செய்துகொள்வதற்கான திகதியொன்று தீர்மானிக்கப்படும். அதன் பின்னரே எனக்கு அங்கு சென்று தேசியக் கொடியை ஏற்ற முடியுமென்றும் அமைச்சர் உதய கம்மன்பில நேற்று தெரிவித்தார்.

## புது மகிழ்வும் புது நிமிர்வும்...

அடுத்த ஆண்டில் பிறந்து விடும் அரசியல் தீர்வென பொய்கள் நிறைந்த கதைகள் பலவும் பேசுவர், ஆனாலும் அடுத்து வரும் ஆண்டில் எமது மக்களின் கனவுகளில் முடிந்தளவு முனேற்றம் காணவே உழைப்போம் நாமென உறுதி கொண்டு உண்மையை மட்டும் பேசுகின்றோம்!

புத்தாண்டின் புது மகிழ்வையும், புது நிமிர்வையும் எவரும் தாம்பாளதட்டில் ஏந்தி எமது மக்களுக்குதாமாக கொண்டு வந்து தரப்போவதில்லை. மாறாக, எமது மக்களே தமது கனவுகள் நோக்கிய வெற்றியின் பாதையை தம் கைகளில் எடுக்க வேண்டும்.அனுபவம், ஆற்றல்,ஆளுமை நிறைந்த அரசியல் தலைமைக்கு போதிய ஆணை வழங்கி, அரசிலுரிமை, அபிவிருத்தி, அன்றாட இடர் தீர்ப்பு, இவைகள் மூன்றும் இணைந்த எமது மதி நுட்ப அரசியல் வழிமுறையை ஏற்று,எமது மக்கள் இன்னமும் அதிகமாக அணிதிரண்டு வரவேண்டும்.

ஆண்டு மலர்வில் தமிழர் வாழ்வு மீண்டு நிமிரட்டும்.

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்பது போல் சகல மக்களும் சமவுரிமை பெற்று வாழட்டும்.இவ்வாறு புத்தாண்டு வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

## பொலிஸாருக்கு அவப்பெயரை....

அறிக்கை வெளியிட்டுள்ளனர்.

பெல்வத்த பால்மா பொருட்களை கொள்வனவு செய்வதற்கு பொதுமக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தமைக்கான காரணத்தை கண்டறியுமாறு மேல் மாகாணத்திற்கு பொறுப்பான சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோனுக்கு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் குறித்த கடையில் பால் மா விநியோகம் செய்வதற்கு ஒரு கவுண்டரை மட்டும் பயன்படுத்தியதால் நீண்ட வரிசைகள் ஏற்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

இதன்படி, இது தொடர்பில் உரிய நிறுவனத்திற்கு அறிவிக்கப்பட்டதுடன், விற்பனை கவுண்டர்களின் எண்ணிக்கையை மேலும் அதிகரிக்கவும், நேற்று பொதுமக்களுக்கு பால் மாவை விநியோகிக்கவும் நடவடிக்கை எடுக்க பெல்வத்த நிறுவனம் இணக்கம் தெரிவித்தது.

அதன்படி, சட்டவிரோதமாக வந்து பால் மா விற்பனை நிலையங்களுக்கு சீல் வைத்துள்ளனர் என்ற குற்றச்சாட்டை நிராகரிப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## தண்ணீர் தொட்டியில் ...

(02ஆம் பக்கத் தொடர்)

தண்ணீர் தொட்டியில் உயிரிழந்த நிலையில் கிடந்துள்ளது. அதனைத் தொடர்ந்து, சிசுவின் பிரேத பரிசோதனை நேற்று (31) மொனராகலை மாவட்ட பொது வைத்தியசாலையில் நடைபெற்றது. சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கோணகங்கார பொறுப்பதிகாரி எல்.டி. சதீஷ்குமார மேற்கொண்டுள்ளார்.

## திடீர் விபத்துக்களால்...

(02ஆம் பக்கத் தொடர்)

தகவல் திணைக்களத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் விளக்கமளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். ஆஸ்பத்திரிகளில் தங்கியிருந்து சிகிச்சை பெற்று வருபவர்களில் 5 பேருக்கு ஒருவர் இவ்வாறு திடீர் விபத்துக்கு உள்ளானவர்களாவர் என அவர் குறிப்பிட்டார். (ஸ)

## 200 மில்லியன்...

(02ஆம் பக்கத் தொடர்)

இந்த கையிருப்பை அடைய முடிந்திருப்பதாக அவர் தமது டுவிட்டரில் தெரிவித்திருந்தார். அதேநேரம் இந்தத் தொகையை 2021ஆம் ஆண்டு முடியும் வரையில் தங்க வைத்துக்கொள்ள முடியுமென அஜித் நிவாட் கப்ரால் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் கடந்த காலங்களில் தொடர்ந்தும் நிலவி வந்த டொலர் பற்றாக்குறைக் காரணமாக நாட்டின் பொருளாதாரத்தில் பாரிய தாக்க நிலை ஏற்பட்டு வந்தது.

இதனையடுத்து விரைவில் டொலர் கையிருப்பை 03 பில்லியன் டொலர்களாக உயர்த்தப் போவதாக ஆளுநர் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

நவம்பர் மாதம் இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பு 1.58 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது.

2019 நவம்பரில் அரசாங்கம் பதவியேற்றபோது, நாட்டின் வெளிநாட்டு கையிருப்பு 7.5 பில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்தது.

இந் நிலையிலேயே இந்த அதிகரிப்பும் இடம்பெற்றுள்ளதென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## 10 பில். டொலர்களை...

தற்போது ராஜபக்ஷ அரசாங்கத்திற்கு பத்து பில்லியன் அமெரிக்க டொலர்களை (ஒத்திவைக்கப்பட்ட வட்டி) கடனாக வழங்கவேண்டும் என குறிப்பிட்டுள்ள அவர், அல்லது சீனாவிற்கு இளைய சகா ஒருவர் கிடைக்கும் நிலையை எதிர்கொள்ளவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். பிரதமர் நரேந்திர மோடி அரசாங்கம் பல வெளிவிவகார கொள்கைகளில் தோல்வியடைந்துள்ளது, இலங்கை இன்னொன்றாக இருக்கவேண்டாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஜனவரியில் சம்பள அதிகரிப்பு...

சம்பள பிரச்சினையைத் தீர்ப்பதற்கான சுற்றுநிருபம் இதுவரை வெளியிடப்படவில்லையென இலங்கை ஆசிரிய சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் ஊடகமொன்றுக்கு தெரிவித்தார். எனவே, குறித்த சுற்றுநிருபம் எதிர்வரும் 5ஆம் திகதிக்குள் வெளியிடப்பட வேண்டும் எனவும் அவர் கோரிக்கை விடுத்தார்.

## நீர்வீழ்ச்சியில் நீராட சென்ற...

எனினும், காணாமல் போன மூவரில் சிறுமி ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ள நிலையில், சடலம் அவிசாவளை வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. உயிரிழந்தவர் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்டவர் என பொலிஸார் தெரிவித்தனர்.

ஹெந்தலை மற்றும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 14 மற்றும் 29 வயதுடைய இருவரை கண்டுபிடிப்பதற்கான தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

குமாரி நீர்வீழ்ச்சியில் நேற்று முன்தினம் மதியம் 3 இளைஞர்கள் மற்றும் 5 சிறுமிகள் குளித்துக் கொண்டிருந்த போது கனமழை காரணமாக நீர்வரத்து அதிகரித்தது. இதன்போது 14,16 ஆகிய வயதுகளையுடைய இரண்டு சிறுமிகளும் 29 வயதுடைய யுவதியொருவரும் காணாமல்போயிருந்தனர்.

இதனையடுத்து பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் பிரதேச வாசிகள் இணைந்து மேற்கொண்ட நடவடிக்கையின் போது சிறுமியின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது.

## நம்பிக்கை மிகு புத்தாண்டாக...

சீரழிந்த சூழ்நிலையிலிருந்து கூட்டு முயற்சியின் மூலம் நாட்டைக் கட்டியெழுப்ப முடியும் என்பதை நாங்கள் மீண்டும் வலியுறுத்துகிறோம்.

தேசிய பேரழிவு ஏற்பட்டுள்ள இத்தருணத்தில் குறுகிய அதிகார வெறிக்குப் பதிலாக தூய்மையான மக்கள் சார்பு வேலைத்திட்டத்தில் இறங்குமாறு இந்த நாட்டின் பிரஜைகளின் தலைமுறை என்ற வகையில் மீண்டும் அரசாங்கத்தை கேட்டுக் கொள்கிறோம்.

உலகின் பல்வேறு நாடுகள் பல்வேறு பேரழிவுகளுக்கு முகம் கொடுத்து எவ்வாறு அந்தத் துன்பங்களில் இருந்து எழுந்து நிற்கின்றன என்பதைப் பற்றி சிந்திக்க வேண்டிய நேரம் வந்துவிட்டது.மேலும் இந்த நாட்டின் இரண்டு கோடியே இருபது இலட்சத்துக்கும் அதிகமான மக்களின் மற்றும் எதிர்கால சந்ததியின் பெயரால் பொறுப்புடன் செயல்படுவதற்கான முழுமையான வாய்ப்பு வந்துள்ளது என்பதையும் மீண்டும் நினைவுபடுத்துகிறோம்.

இந்த துரதிர்ஷ்டவசமான காலத்தில் உலகில் வாழும் அனைத்து மக்களுக்கும் புதிய சிந்தனையின் படிப்பினையை இயற்கையே அமைதியாக நமக்குக் கற்றுத் தந்துள்ளது. மேலும் இது பற்றி உறுதியாக சிந்தித்து புத்தாண்டை ஒரு புதிய தொடக்க உணர்வை அடைந்து கொள்ள எம்மை மாற்றிக்கொள்ள வேண்டும் என்றும் நாங்கள் நம்புகிறோம்.

இலங்கையின் அனைத்து அன்புக்குரிய மக்களுக்கும் மீண்டும் ஒரு தேசமாக எழுச்சி பெறுவதற்கான உன்னத அபிலாஷைகளை அடைவதற்கான வலிமையும் தைரியமும் கிடைக்க பிரார்த்திக்கின்றோமென்றும் அவர் தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## சட்டத்துக்கு முரணாக...

மற்றும் காணி உத்தியோகத்தர்களுக்கு எதிராக குறிப்பிட்ட சிலரால் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன.

இது தொடர்பில் நேற்று முன்தினம் (30) மாலை ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அண்மைக்காலமாக மாந்தை கிழக்குப் பிரதேச செயலகத்தின் காணி முகாமைத்துவத்திற்கு எதிராக விஷமத்தனமான கருத்துக்கள் பரப்பப்பட்டு வருகின்றன. இதில் எந்த விதமான உண்மை தன்மைகளும் இல்லை. இது தொடர்பில் பிரதேச செயலகத்துடன் அல்லது சம்பந்தப்பட்ட அதிகாரிகளை தொடர்பு கொண்டு அறிந்து கொள்ள முடியும்.

அளவுக்கதிகமான காணிகளை அபகரித்து வைத்திருக்கும் தனிப்பட்டவர்களின் காணிப்பிணக்குகள் தொடர்பில் பிரதேச செயலகத்தினால் நடவடிக்கை எடுக்கப்படும் நிலையில் அவர்களே இவ்வாறான விஷமத்தனமான கருத்துக்களை பரப்பி வருகின்றார்கள். வெளிப்படுத்தல் உறுதிகள் மூலம் பெருந்தொகையான காணிகளை ஆக்கிரமித்து வைத்திருப்பவர்கள் மற்றும் பொருத்தமற்ற முறையிலே காணி ஆவணங்களை பெற்றுள்ளவர்கள் இவ்வாறான கருத்துக்களை பரப்பி வருகின்றார்கள்.

இவ்வாறான செயற்பாடுகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுப்பது தொடர்பிலும் ஆலோசித்து வருகிறோம் என தெரிவித்துள்ளார்.

## துறைமுகத்தில் தேங்கியுள்ள...

அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களுக்கு தட்டுப்பாடு ஏற்படவில்லை என்று அவர்கள் தெரிவித்ததாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

சந்தையில் செயற்கைத் தட்டுப்பாட்டை ஏற்படுத்தி அரிசியின் விலையை 5 ரூபாவினால் அதிகரிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆனால் புறக்கோட்டை மொத்தச்சந்தையில் அரிசி கையிருப்பு இருப்பதைக் காணலாம். உலக ஸ்திரமற்ற நிலையில் எமது நாடு எதிர்நோக்கும் சூழலின் பாதகமான விளைவுகளால் மக்கள் பிரச்சினைகளை எதிர்நோக்காமல் இருப்பதற்கு நாம் செயற்பட வேண்டிய இத்தருணத்தில் சில தரப்பினர் தவறான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர். இந்த இடத்திற்கு யார் வேண்டுமானாலும் வந்து அரிசி உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களை பெற்றுக் கொள்ளலாம். எவ்வாறாயினும், லங்கா சதொச விற்பனை நிலையங்களின் ஊடாக மக்களுக்கு தொடர்ந்து நிவாரணங்களை வழங்குவோம் என்றும் அமைச்சர் கூறினார்.

துறைமுகத்தில் தேங்கிக் கிடக்கும் அத்தியாவசியப் பொருட்களை சந்தையில் தட்டுப்பாடு ஏற்படாமல் விடுவிப்பதற்கு தேவையான டொலர்களை வழங்குவதற்கான ஏற்பாடுகளை அரசாங்கம் மேற்கொண்டுள்ளது. என்ன நடந்தாலும், மக்களின் இறையாண்மை, சுதந்திரம் மற்றும் தொழில் பாதுகாப்பு ஆகியவற்றைப் பாதிக்கும் முடிவுகளை எடுத்து, சர்வதேசத்திற்குச் செல்ல நாங்கள் தயாராக இல்லை. மக்களுக்குத் தேவையான வசதிகளை எந்த வகையிலும் வழங்குவதற்கு நாங்கள் பாடுபடுவோம் என்பதை வலியுறுத்த விரும்புகின்றோம் என்றும் அமைச்சர் கூறினார்.

இதற்கமைய புறக்கோட்டை மொத்த வர்த்தக நிலையத்தில் அமைச்சருடன் கலந்துரையாடிய வர்த்தகர்கள், தற்போதுள்ள கையிருப்புக்கள் மற்றும் எதிர்காலத்தில் பெறப்படவுள்ள இருப்புக்கள் தொடர்பில் அமைச்சருக்கு விளக்கமளித்தார்.

இதனைத்தொடர்ந்து பொருட்களை தட்டுப்பாடு இன்றி மக்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அமைச்சர் வலியுறுத்தினார்.

## உள்நாட்டு மதுபானங்களுக்கு...

2022 ஆம் ஆண்டு ஏப்ரல் முதலாம் திகதி முதல் நாடு முழுவதும் உள்ள முழு சந்தையிலும் விற்கப்படும் அனைத்து மதுபான போத்தல்களுக்கும் இந்த பாதுகாப்பு ஸ்டிக்கரை ஒட்டுவதற்கு எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்துள்ளார்.

## தடைகளை முறியடித்து...

உலகளாவிய தொற்று நிலைமையால் கடந்தாண்டில் இலங்கை முகம் கொடுத்த சவால்கள் பலவாகும். சமூக மற்றும் பொருளாதார ரீதியிலான சவால்களை வெற்றி கொள்வதற்கு

ஒரு நாடு என்ற ரீதியில் அனைவரும் ஒன்றிணைந்து நிறைவேற்றிய அர்ப்பணிப்பை நன்றியுடன் நினைவுகூர்கிறேன்.

ஒரு அரசாங்கம் என்ற ரீதியில் நாம் மக்களின் பாதுகாப்புக்காகவே கடந்தாண்டில் முன்னுரிமை வழங்கியிருந்தோம். தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையை வெற்றிகரமாக செயற்படுத்தியதனூடாக உங்கள் அன்பிற்குரியவர்கள் உள்ளிட்ட ஆயிரக்கான நாட்டு மக்களின் உயிரை பாதுகாக்க எமக்கு முடிந்தது.

நாட்டில் இவ்வாறான எவ்வித சவால்களும் காணப்படாத காலப் பகுதியில் கைவிடப்பட்ட பல திட்டங்களை நாம் செயற்படுத்தி அவற்றை கடந்த காலங்களில் மக்களின் பயன்பாட்டிற்காக கையளித்துள்ளோம்.

தொற்று நிலைமைக்கு மத்தியிலும் அந்த எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கையையும் இடைநிறுத்தாது, மக்களின் வாழ்க்கை நிலையை கட்டியெழுப்பி அபிவிருத்தி ஒளியை முழு நாட்டிற்கும் பரப்புவதே எமது அரசாங்கத்தின் எதிர்கால இலட்சிய மாகும்.

அதற்காக சமூக பொருளாதாரம் மற்றும் அரசியல் ரீதியாக எம் மத்தியில் காணப்படும் பல்வேறு தடைகளை முறியடிக்க வேண்டும். ஒருவரையொருவர் குற்றம் சாட்டுவதற்கு பதிலாக சரியானதை தெரிவுசெய்து அதற்காக செயற்படுவதன் ஊடாக தற்போது காணப்படும் பல்வேறு பிரச்சினைகளை வெற்றிகரமாக நிறைவேற்ற முடியும்.

நாம் நாட்டின் பிரச்சினைகளை விமர்சிப்பவர்களல்ல நடைமுறைச் சவால்களுக்கான தீர்வுகளை உங்களுக்கு வழங்குபவர்கள். அதற்காக நீங்கள் அனைவரும் எதிர்பார்க்கும் புதிய பாதை இன்று உதயமாகும் புத்தாண்டில் வெளிப்படுத்தப்படும்.

நாம் அனைவரும் ஒன்றிணைந்து தடைகளை முறியடித்து வாழ்வை வெல்லும் ஆண்டாக இப்புத்தாண்டை உருவாக்குவோம். அதற்கு ஒரு அரசாங்கம் என்ற ரீதியில் மக்களுக்கு பலமாக விளங்குவதற்கு உறுதியாக அர்ப்பணிப்புடன் செயற்படுவதை நான் நம்பிக்கையும் தெரிவிக்கின்றேன்.

இப்புத்தாண்டில் இலங்கை மக்கள் அனைவரதும் புதியஎதிர்பார்ப்புகளும் பிரார்த்தனைகளும் நிறைவேற வாழ்த்துகிறேன் என்றும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## 2022ஆம் ஆண்டில் ...

ஜனவரி, ஏப்ரல், மே மற்றும் நவம்பர் மாதங்களில் பௌர்ணமி போயா விடுமுறைகள் வெள்ளி அல்லது திங்கட்கிழமைகளிலும் தைப் பொங்கல், சுதந்திர தினம் மற்றும் தீபாவளி என்பன வெள்ளி அல்லது திங்கட்கிழமைகளிலும் வந்துள்ளன.

தமிழ்,சிங்களப் புத்தாண்டு, போயா மற்றும் புனித வெள்ளி ஆகியவை ஒன்றன் பின் ஒன்றாக வருவதால் ஏப்ரல் மாதத்தில் ஐந்து நாட்கள் நீண்ட வார இறுதி காணப்படுகிறது.

இதுதவிர, மே தினம், ஹஜ், கிறிஸ்மஸ் தினங்கள் மற்றும் செப்டெம்பர் மற்றும் ஒக்டோபர் மாத போயா விடுமுறைகள் ஞாயிற்றுக்கிழமைகளில் வந்துள்ளன. தொடர்ந்து வரும் திங்கட்கிழமைகளில் விடுமுறை அறிவிக்கும் வழக்கமான நடைமுறையை மேற்கொண்டால் நீண்ட வார இறுதி நாட்கள் காணப்படும்.

## 24 வயதுக்கு கீழுள்ள...

2022 ஆம் ஆண்டு திருத்தங்களை செய்ய தீர்மானித்துள்ளதால், இந்த மாற்றத்தை நடைமுறைப்படுத்த தீர்மானித்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார். புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான சட்டத்தில் திருத்தங்கள் செய்யப்பட்ட பின்னர், மேலும் சில மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

தற்போது நடைமுறையில் உள்ள சட்டத்திற்கு அமைய புகையிலையை பிரசாரம் செய்தல், பயன்படுத்துதலை ஊக்குவித்தல், அனுசரணை வழங்குதல் என்பன தடை செய்யப்பட்டுள்ளன.

புகையிலை தயாரிப்புகளை சமூக ஊடகங்கள் வாயிலாக பிரசாரம் செய்வதை புதிய சட்டத்தின் கீழ் தடை செய்ய எதிர்பார்த்துள்ளோம். இதனை தவிர சமூக வலைத்தளங்களில் பகிரப்பட்டுள்ள புகையிலை தயாரிப்புகள் சம்பந்தமான அனைத்து விளம்பரங்களையும் நீக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் சமாதி ராஜபக்ச குறிப்பிட்டுள்ளார்.

## புது வருடத்தை நம்பிக்கை,...

நாட்டின் மீதும் எமது சமூகத்தின் மீதும் கடந்த ஆண்டு ஏற்படுத்தியிருந்த தாக்கத்தை நாம் திரும்பிப் பார்க்க வேண்டும். எதிர்காலப் புத்தெழுச்சிக்காக நாம் உறுதியுடன் இருக்க வேண்டுமென்று நான் நினைக்கிறேன்.

இந்தச் சவால்களைத் தொடர்வதற்கும் வெற்றிகொள்வதற்கும், மக்களை மையமாகக் கொண்ட பொருளாதாரத்தை வலுப்படுத்துவதற்கும் அரசாங்கம் முன்னெடுத்துவரும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு, புதிய ஆண்டு வாய்ப்பளிக்கும் என்று நான் நம்புகிறேன்.

தொற்றுப் பரவல் காரணமாக முடங்கியுள்ள பொருளாதாரம், இயல்பு வாழ்க்கை என்பன இதன் மூலம் பாதுகாக்கப்படும். அதற்காகத் திட்டமிடப்பட்டுள்ள வேலைத்திட்டங்களை, புதிய பொதுமைப்படுத்தலின் கீழ் செயற்படுத்த எம்மால் முடியும். தன்னம்பிக்கை, அர்ப்பணிப்பு மற்றும் ஒற்றுமை ஆகியவற்றின் மூலமே அவ்வாறான எழுச்சியை நோக்கிப் பயணிக்க முடியும். வெற்றிகொண்ட சவால்களைப் போன்றே, பெற்றுக்கொண்ட அனுபவங்களும் இப்புத்தாண்டில் நம்மை ஊக்குவிக்கும்.

உலகளாவிய தொற்றுப் பரவல், பொதுமக்களின் அபிலாஷைகளை அடைவதற்கான முன்னேற்றத்தை மோசமாகப் பாதிக்கச் செய்துள்ளது. இவ்வாறான நிலைமையிலும், தேசிய பாதுகாப்பு மற்றும் சகவாழ்வு என்பன நிலைநாட்டப்பட்டுள்ளன. பல புதிய சீர்த்திருத்தங்கள் உருவாக்கப்படுகின்றன.

செயலற்றிருந்த அரச மேம்பாட்டுத் திட்டங்கள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை மீண்டும் செயற்படுத்தவும் அவற்றைப் பொதுமக்களின் பயன்பாட்டுக்குக் கொண்டுசெல்லவும் தற்போதைய அரசாங்கத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

கொவிட்19 தொற்றுப் பரவல் காரணமாக இலங்கை மக்களின் வாழ்க்கையில் ஏற்படுத்தப்பட்டிருந்த பாதக நிலைமைகளைச் சீர்செய்வதற்கு அரசாங்கம் என்ற வகையில் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள், உலகளாவிய ரீதியில் பாராட்டுகளைப் பெற்றிருக்கின்றன.

தொற்றுப் பரவலுக்கு மத்தியில் நீங்கள் தற்போது அனுபவித்துவரும் சுதந்திரம், இந்நாட்டு மக்களின் மகத்தான தியாகத்தின் பிரதிபலனாகும் என்பதை மகிழ்ச்சியுடன் குறிப்பிட்டுக்கொள்கிறேன்.

மக்களைப் பாதிப்படையச் செய்யும் அடிப்படையற்ற அரசியல் போராட்டங்கள், நாட்டை நேசிக்கின்ற பெரும்பான்மையான மக்களால் நிராகரிக்கப்பட்டு உள்ளமையானது, அரசாங்கத்தின் மீது அம்மக்கள் கொண்டுள்ள நம்பிக்கையை உறுதி செய்துள்ளது.

கடந்த காலம் முதல் தொடர்ந்து பேணப்பட்டு வருகின்ற இராஜதந்திர உறவுகளை மேலும் பலப்படுத்திக்கொண்டே புதிய வெளிநாட்டுத் தொடர்புகளையும் கட்டியெழுப்பக் கிடைத்துள்ளமை, எமக்குக் கிடைத்த தனித்துவமான முதலீடாகவே நான் பார்க்கிறேன்.

மலர்ந்துள்ள புத்தாண்டை, மக்களுக்கான "சுபீட்சத்தின் நோக்கு" கொள்கை திட்டத்தை அடைந்து கொள்வதற்காக அர்ப்பணித்து, மாற்றத்துடன்கூடிய புத்தாண்டாக மாற்ற அணிதிரளுமாறு நான் அழைப்பு விடுக்கின்றேன்.

மலர்ந்துள்ள புத்தாண்டு, உங்கள் அனைவருக்கும் ஆரோக்கியமானதும் தைரியமிக்கதுமான புத்தாண்டாக அமைய வேண்டுமென்று பிரார்த்திக்கிறேன் என்றும் ஜனாதிபதி தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

## பொது இடங்களில் இனி...

பொது இடங்களில் புகைப்பிடிப்பவர்கள் தொடர்பில் எந்தவொரு நபருக்கும் தகவல் வழங்க முடியும்.

இதேவேளை, எதிர்காலத்தில் புகையிலை மற்றும் மதுபானம் தொடர்பான சட்டத்தில் திருத்தம் மேற்கொள்ளவுள்ளதாக புகையிலை மற்றும் மதுசாரம் தொடர்பான தேசிய அதிகார சபையின் தலைவர் வைத்தியர் சமாதி ராஜபக்ஷ கொழும்பில் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் உரையாற்றும்போது தெரிவித்துள்ளார்.

## தொழிற்சங்க போராட்டம்...

2022 ஆம் ஆண்டுக்கான வருடாந்தர இடமாற்ற பட்டியல் இதுவரை தயாரிக்கப்படவில்லையென அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் ஊடக குழு உறுப்பினர் வைத்தியர் ஹங்சமால் வீரசூரிய தெரிவித்துள்ளார். இந்த பட்டியல் தயாரிப்பு பணிகள் சுகாதார அமைச்சினால் மேற்கொள்ளப்பட வேண்டும் என அவர் வலியுறுத்தியுள்ளார்.

# மாவத்தகமை பகுதியில் போதை மாத்திரைகளுடன் இருவர் கைது

**மாவத்தகம தினகரன் நிருபர்**



மாவத்தகம பகுதியில் மாணவர்களை இலக்காக கொண்டு போதை கலந்த 25 இலட்சம் பெறுமதியான 16 ஆயிரத்திற்கும் மேற்பட்ட போதை பக்கற்றுகள் மாவத்தகம பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

குருநாகல் மாவட்ட ஆயுர்வேத மருத்துவ ஆணையாளர் அலுவலகத்தின் அனுமதியின்றி தயாரிக்கப்பட்டு, பாடசாலை, தனியார் வகுப்புக்களுக்குச் செல்லும் மாணவர்கள் பயன்படுத்தும் வகையில் 25 இலட்சம் ரூபா பெறுமதியான லேபல் அடிக்கப்பட்ட 16 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பக்கற்றுகள் என மாவத்தகம பொலிஸார் தெரிவித்தனர். பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து இவற்றை விற்பனை செய்த ஒருவரும் பாவித்த ஒருவரும் கைது செய்யப்பட்டுள்ளனர். மாவத்தகம நகரில் முன்னெடுத்த சுற்று வளைப்பின் போது இந்த போதை பொருள் தொகை கைபற்றப்பட்டுள்ளன.

## கடையாமோட்டை பாடசாலைக்கு ரூ. 3 இலட்சம் நிதி ஒதுக்கீடு

**புத்தளம் தினகரன் நிருபர்**

மதுரங்குளி கடையாமோட்டை தேசிய பாடசாலைக்கு கல்பிட்டி பிரதேச சபை உறுப்பினர் கே.எம்.எம். பைஸர் மரிக்கார் மூன்று இலட்சம் ரூபாவை நிதியொதுக்கீடு செய்துள்ளார்.

கடையாமோட்டை தேசிய பாடசாலையில் நீண்ட காலமாக குறைபாடாக காணப்பட்ட பிரதியிடும் இயந்திரம் போதாமை காரணமாக பாடசாலையின் அதிபர் மற்றும் ஆசிரியர் குழாம் கல்பிட்டி பிரதேச சபை உறுப்பினர் கே.எம்.எம். பைஸர் மரிக்காரிடம் விடுத்த வேண்டுகோளின் பேரிலே அவருக்கு ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து பிரதியிடும் இயந்திரம் கொள்வனவு செய்வதற்காக மூன்று இலட்சம் ரூபா நிதியை பெற்றுக் கொடுத்துள்ளார்.

இதற்கான பூர்வாங்க வேலைத்திட்டம் இடம்பெற்று வருகின்றன.



வெலிமடை தள வைத்தியசாலையின் வேண்டுகோளுக்கிணங்க வெலிமடை வை. எம். எம். ஏ. பேரவையின் கிளையினால் முதல் தடவையாக இரத்ததானம் வழங்கும் நிகழ்வு வெலிமடை பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பேரவையின் தேசியத் தலைவர் சஹீட் எம். ரிஸ்மி மற்றும் வெலிமடை தள வைத்திசாலையின் வைத்திய அதிகாரி எல். பி ஆர். மனோகரி உள்ளிட்டரோர் கலந்து கொண்டனர்.

(படம்: மாவத்தகம தினகரன் நிருபர்)

## அல் ஹிகம் இஸ்லாமிய கல்லூரியின் முதலாவது பட்டமளிப்பு விழா

**திறப்பனை தினகரன் நிருபர்**

அநுராதபுர மாவட்ட நாச்சியாதீவு அல் ஹிகம் இஸ்லாமிய கல்லூரியில் கற்று மௌலவி ஆலிம் பட்டம் பெறும், மற்றும் அல் குர்ஆனை மனனம் செய்த ஹாபில்களுக்கான கல்லூரியின் முதலாவது பட்டமளிப்பு விழா எதிர்வரும் ஜனவரி 09 ஞயிறு கல்லூரி வளாகத்தில் அதிபர் மௌலவி உவைசுல் கர்னி தலைமையில் இடம் பெறவுள்ளது.

கடந்த 08 வருடங்களாக இக் கல்லூரியில் இஸ்லாமிய கற்கை நெறியை பூர்த்தி செய்த மாணவர்களை கௌரவித்து பட்டம் வழங்கும் இவ் விழாவின் போது விசேட பேச்சாளர்களாக அஷ் செய்க் மௌலவி உமர்தீன், அஷ் செய்க் எஸ்.எச்.எம்.பளீல் (நளீமி) ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளதோடு, பிரதேசத்தின் அரசியல்வாதிகள், முக்கியஸ்தர்கள், பள்ளி நிர்வாகிகள், நலன் விரும்பிகள், கிராம உத்தியோகத்தர்கள், பொலிஸ் உத்தியோகத்தர்கள், பெற்றோர், பழைய மாணவர், முன்னாள் கல்லூரி நிர்வாகிகள், ஊர் ஜமாஅத்தார் என பலர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். ஜனவரி 09 மு.ப 08.30 க்கு ஆரம்பமாகும் விழா நண்பகல் 12.00 மணியுடன் நிறைவுக்கு வரவுள்ளதோடு, முற்று முழுதாக சுகாதார வழிமுறைகளை பேணி நிகழ்வை நடாத்தி முடிக்க கல்லூரி நிர்வாகம் திட்டமிட்டுள்ளதாக கல்லூரி நிர்வாக குழு செயலாளர் தில்ஷான் (நளீமி) தெரிவித்தார்.

இந் நிகழ்வில் 08 மாணவர்கள் ஆலிம் இஹாபில்களாக பட்டம் பெற்று வெளியேறவுள்ளதாக நிர்வாக தலைவர் ஏ.சி. அப்துல் வாஹிட் மௌலவி தெரிவித்தார்.

## தென் மாகாணத்தில் 11 பாடசாலை விளையாட்டு மைதானங்கள் அபிவிருத்தி

**மாத்தறை தினகரன் நிருபர்**

தென் மாகாணத்தில் 11 பாடசாலைகளின் விளையாட்டுத் திடல்களை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக தென் மாகாண பாடசாலைகளின் விளையாட்டுத்துறை பணிப்பாளர் ஆர். எம். கிருஷான் துமிந்த தெரிவித்தார். இதன் படி ஒவ்வொரு பாடசாலைக்கும் 32 இலட்சம் ரூபா வீதம் 352 இலட்சம் ரூபா, விளையாட்டு அமைச்சின் மூலம், தென் மாகாண கல்வி அமைச்சுக்கு கிடைத்திருப்பதாக பணிப்பாளர் கிருஷான் துமிந்த தெரிவித்தார்.

தென்மாகாண கல்விச் செயலாளர் ரஞ்சித் யாப்பா, தென்மாகாண கல்விப் பணிப்பாளர் நிமல் திசாநாயக ஆகியோரின் வேண்டுகோளுக்கிணங்கவே இந்நிதி உதவி கிடைத்துள்ளது.


திகதி 30.12.2021 வியாழக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB NATIONAL LOTTERIES

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் :4632
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 10,573,190.00
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 9 3 2 1 3 3
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.14,280,635.00

கொவிசெத Govisetha
சீட்டிழுப்பு இலக்கம் :2927
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.5,621,420.00
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள் 27 41 61 69
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 62,529,501.60

Mega POWER மெகா பவர் கோடி 10
சீட்டிழுப்பு இலக்கம் 980
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.2,886,840.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.164,071,478.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து O
சுப்பர் இலக்கம் 26
வெற்றி இலக்கங்கள் 29 36 45 76

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் :662
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.3,305,120.00
ஆங்கில எழுத்து W
வெற்றி இலக்கங்கள் 16 56 72 80
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.90,606,866.00

ஜாதிக சம்பத JATHIKA SAMPATHA
சீட்டிழுப்பு இலக்கம் :1191
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ.2,217,300.00
வெற்றி இலக்கினம் மிதுனம்
வெற்றி இலக்கங்கள் 1 2 0 1 0 2
இப்பொழுது ஜாதிக சம்பத புதன் மற்றும் சனி கிழமைகளில் மாத்திரமின்றி திங்கள் மற்றும் வியாழக் கிழமைகளிலும் உங்களுக்கு அதிர்'டத்தை கொண்டு வருகின்றது.
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.11,404,216.00

30.12.2021 - தேசிய லொத்தர் சபை உருவாக்கிய மொத்த வெற்றியாளர்கள் எண்ணிக்கை 600,706
பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்த பரிசுத்தொகை ரூ.24,603,870.00
ரூ. 2,000,000.00 பரிசு 01 ரூ. 100,000.00 பரிசு 26

- ரூ. 5 லட்சத்துக்கு அதிகமான பரிசுகள் அரசாங்க வரி விதிகளுக்கு உட்படும்.
- பரிசு தொகையை பெற்றுக்கொள்வதற்கு தேசிய அடையாள அட்டை கட்டாயமானதாகும்.
- வெற்றி பெரும் லொத்தர் சீட்டு செல்லுபடியாகும் காலமானது சீட்டிழுக்கும் தினத்தில் இருந்து 6 மாத காலம் வரையிலாகும்.

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416
இலக்கம் 32, தேஷமான்ய N.W.J. முதலிகே மாவத, கொழும்பு 01











# நயினாதீவில் மினி சூறாவளி ஆறு குடும்பங்கள் பாதிப்பு





**யாழ்.விஷேட நிருபர்**

யாழ்ப்பாணம் நயினாதீவு வடக்கு பகுதியில் நேற்று முன்தினம்(30) வீசிய மினி சூறாவளி தாக்கத்தினால், ஆறு குடும்பங்களைச் சேர்ந்த 14 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக, யாழ்ப்பாண மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் உதவிப் பணிப்பாளர் என் .சூரியராஜ் தெரிவித்துள்ளார். யாழ் மாவட்டத்தில் நேற்று முன்தினம் காலையிலிருந்து மழையுடன் கூடிய காலநிலை நிலவி வருகின்றது.

இந்நிலையில் நயினாதீவு வடக்கு ஜே 35 கிராம சேவகர் பிரிவில் மாலை வீசிய மினி சூறாவளியின் தாக்கத்தினால் ஆறு குடும்பங்களைச் சேர்ந்த 14 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் மூன்று வீடுகளும் சேதமடைந்துள்ளன.

மேலும் இச்சேத விபரங்கள் தொடர்பில் அப்பகுதி பிரதேச செயலகத்தினூடாக விவரங்கள் சேகரிக்கப்பட்டு, கொழும்பு அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படவுள்ளது.

# வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களின் கவனயீர்ப்பு போராட்டம்

**சாவகச்சேரி தினகரன் நிருபர்**




முல்லைத்தீவு மாவட்டத்தின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்களால் முல்லைத்தீவில் நேற்று முன்தினமும் (30) கவனயீர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. கடந்த 2017 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 8ஆம் திகதி ஆரம்பித்த தொடர் கவனயீர்ப்பு போராட்டம் 1757 ஆவது நாளாக தொடர்ந்து இடம்பெற்று வருகின்ற நிலையில், நேற்று முன்தினம் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் போராட்டம் இடம்பெறும் கொட்டகைக்கு முன்பாக, கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் 'எங்கே எங்கே உறவுகள் எங்கே',' குற்றவாளிகளை சர்வதேச குற்றவியல் நீதிமன்றில் நிறுத்து' , 'வேண்டும் வேண்டும் நீதி வேண்டும்','சர்வதேசமே பதில் சொல்', 'மரண சான்றிதழும் வேண்டாம் நட்ட ஈடும் வேண்டாம்' என்ற பல்வேறு கோஷங்களை எழுப்பியவாறும் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாதைகளை தாங்கியவாறும் போராட்டம் நடத்தினர்.

இப் போராட்டம் இடம்பெறும் இடத்துக்கு அண்மையாக 15க்கும் மேற்பட்ட புலனாய்வாளர்கள் பிரசன்னமாகியிருந்ததோடு போராட்டத்தில் ஈடுபட்டவர்களை புகைப்படம் எடுத்து கண்காணிக்கும் செயற்பாட்டிலும் ஈடுபட்டனர் .

# இனங்களுக்கிடையில் சமத்துவமிக்க ஆண்டாக இவ்வாண்டு மலரட்டும்

**-காதர் மஸ்தான் எம்.பி**



இன்று புத்தாண்டை வரவேற்று கொண்டாடும் அனைவருக்கும் என் இனிய புது வருட நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றேன் என வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தான் புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். அவ் வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,..விடைபெறும் ஆண்டு விட்டுச் செல்லும் தடங்களில் பல துயரங்கள் நிரம்பிக் கிடக்கின்றன.

உலகெலாம் தலைவிரித்து தாண்டவமாடும் கோவிட் 19 தாக்கம் எம்மை விட்டு பூரணமாக அகலாத நிலையில் 2021ஆம் ஆண்டு எம்மை விட்டு பிரிந்து செல்கிறது. நாடுகளுக்கிடையேயான போக்குவரத்து, வணிகம் எல்லாம் எதிர்பாராத வகையில் பின்னடைவை சந்தித்துள்ளது.

ஆயினும் அழிவுக்குள்ளும் ஆசிர்வாதமாய் இந்தக் கோவிட் 19 கருணையும் மனித நேயத்தையும் எம்மத்தியில் ஆழமாகப் பதிந்துள்ளதை நாம் மறுதலித்து விட முடியாது.

உலகெலாம் பேரவலம் நிகழ்த்திய கொடிய யுத்தங்கள் எல்லாம் தற்பொழுது ஓய்வெடுத்துள்ளதுடன் மனித குலத்தின் ஆத்மாவின் பெறுமதியை உலகு தற்பொழுது உணரத் தலைப்பட்டுள்ளது.

பிறக்கும் வருடத்தில் சிறக்கும் வாழ்வை யாவரும் தொடட்டும் என மனதார வாழ்த்துகிறேன்.

# முல்லைத்தீவு மக்களுக்கு பாதுகாப்போடு உதவித் திட்டங்கள்; விரிவுப்படுத்த இராணுவ தளபதி பணிப்பு

முல்லைத்தீவு மக்களுக்கு சிறந்த பாதுகாப்பை வழங்கி அவர்களுக்கு இயன்ற வழிகளில் உதவ வேண்டும் என பாதுகாப்பு பதவி நிலை பிரதானியும் இராணுவ தளபதியும் பசுமை விவசாயத்திற்கான நடவடிக்கை மத்திய நிலையத்தின் தலைவருமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

முல்லைத்தீவு பாதுகாப்பு படைத் தலைமையகத்திற்கு புதன்கிழமை (29) விஜயம் மேற்கொண்டிருந்த இராணுவ தளபதி, முல்லைத்தீவு பாதுகாப்பு படைத் தலைமையகத்தின் கீழ் பணியாற்றும் படையினருக்கான வருடப்பிறப்பு சிறப்புரையில் இவ்வாறு தெரிவித்தார்.

தொடரும் உரையில்,

முல்லைத்தீவு மக்களின் சிறந்த பாதுகாப்பை உறுதிசெய்து, அவர்களுக்கு இயன்ற வழிகளில் உதவ வேண்டும். ஏனெனில் அவர்களில் பெரும்பாலானோர் மீன்பிடித் தொழிலை நம்பி, பல சவால்களுக்கு மத்தியில் வாழ்கின்றனர். எனவே, அவர்களுக்கான சமூக நிவாரணப் பணிகளை மேலும் விரிவுபடுத்துங்கள் என அறிவுரை வழங்கினார்.





மேலும் முல்லைத்தீவு மக்களை போதைப்பொருள் பாவனை போன்ற சட்டவிரோத செயற்பாடுகளில் ஈடுபட இடமளிக்காமல் பாதுகாக்கும் அதேநேரம், அவர்களுக்கான நிதி உதவிகள், மதஸ்தலங்களை புனரமைத்தல், விளையாட்டு மைதான வசதிகளை மேம்படுத்தல், பொதுச் சேவைகளை வலுப்படுத்தல் என்பவற்றிற்காக படையினர் முன்னெடுத்து வரும் சேவைகளை பாராட்டியதோடு அவற்றை விரிவுப்படுதுதன் அவசியத்தையும் ஜெனரல் ஷவேந்திர சில்வா எடுத்துரைத்தார்.

## சாவகச்சேரியில் கொரோனா தொற்றால் முதியவர் மரணம்

**சாவகச்சேரி விசேட நிருபர்**

சாவகச்சேரி நுணாவில் மேற்கு பகுதியைச் சேர்ந்த முதியவர் ஒருவர் கொரோனா தொற்றுக் காரணமாக புதன்கிழமை (29) உயிரிழந்துள்ளார்.

கொரோனா தொற்றால் வீட்டில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த 79 வயதான முதியவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

# புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் மகாவித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள்

**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**



முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு வள்ளிபுனம் மகாவித்தியாலய மாணவர்கள் 78 பேருக்கு கற்றல் உபகரணங்களும் பெற்றோர்களுக்கு உலர் உணவு பொதிகளும் நேற்று முன்தினம் (30) வழங்கி வைக்கப்பட்டன.

இராணுவத்தினரின் ஏற்பாட்டில், கொழும்பு பிலிவர்ச் ஈஸ்ரன் தேவாலய பங்குத்தந்தைகளின் ஒழுங்கு படுத்தலில் பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. வள்ளிபுனம் மகாவித்தியாலயம் பாடசாலை அதிபர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், முல்லைத்தீவு மாவட்ட பாதுகாப்பு படை கட்டளை தளபதி மேஜர் ஜெனரல் சஞ்சஜ வணசிங்க, புதுக்குடியிருப்பு பிரதேச செயலாளர் எஸ்.ஜெயகாந், வலயக்கல்வி அலுவலக அதிகாரிகள், படைத்துறை அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# யாழ்ப்பாண பல்கலை முன்னாள் நூலகரின் நினைவுப் பேருரையும்,புத்தகங்கள் கையளிப்பும்

**யாழ். விஷேட நிருபர்**

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் நூலகர் அமரர் ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தத்தின் இரண்டாம் ஆண்டு நினைவு நிகழ்வும், நினைவுப் பேருரையும் (30) வியாழக்கிழமை பல்கலைக்கழக நூலகக் கேட்போர் கூடத்தில் நினைவு கூரப்பட்டது.

இந்நிகழ்வில் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, சிரேஸ்ட உதவி நூலகர் கலாநிதி மைதிலி விசாகரூபன் ஆகியோர் அஞ்சலியுரை ஆற்றினர்.சிரேஸ்ட உதவி நூலகர் சி.கேதீஸ்வரன் இணையவழி கூட்டுறவுப் பட்டியலாக்கம் பொது நூலகங்களுக்கான சாதக நிலைமைகள்' என்னும் தலைப்பில் நினைவுரையாற்றினார்.



அமரர் ஸ்ரீகாந்தலட்சுமி அருளானந்தம் தன்னார்வத்தோடு தனிப்பட சேகரித்த பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட நூல்களும், ஏராளமான தமிழரின் தொன்மைசார் மரபுரிமை அரும் பொருள்களும் யாழ்ப்பாண பல்கலைக்கழக நூலகத்துக்குக் கையளிக்கப்பட்டன. குடும்பத்தினரால் கையளிக்கப்பட்ட பொருள்களை துணைவேந்தர் பேராசிரியர் சி.சிறிசற்குணராஜா, முன்னாள் துணைவேந்தரும், பேரவை உறுப்பினருமான வாழ்நாள் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, பதில் நூலகர் திருமதி கல்பனா சந்திரசேகர் ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

# முல்லைத்தீவில் உயிருக்கு போராடும் காட்டுயானை

**புதுக்குடியிருப்பு விசேட நிருபர்**

முல்லைத்தீவு குமுழமுனை மேற்கு கரடிப்பூவர் கிராமத்தில் உடல் நிலை பாதிக்கப்பட்ட யானை ஒன்று உயிருக்கு போராடிய நிலையில் விவசாய நிலையத்தில் வீழ்ந்துள்ளது.



சுமார் மூன்றரை வயதுடைய குட்டியானை வாய்காயத்தினால் பாதிக்கப்பட்ட நிலையில் கடந்த சில நாட்களாக உணவு உட்கொள்ள முடியாத நிலையிலுள்ளது.

யானை வீழ்ந்துள்ள சம்பவம் தொடர்பில் வனஜீவராசிகள் திணைக்களத்திற்கு கிராம மக்கள் தகவல் கொடுத்துள்ளார்கள். நேற்று காலை சம்பவ இடத்திற்கு விரைந்த வனஜீவராசிகள் திணைக்களம் மற்றும் வனஜீவராசிகள் திணைக்களத்தின் கால்நடை மருத்துவர் டி.கிரிதரன் தலைமையிலான மருத்துவ குழுவினர் சிகிச்சையளித்துள்ளார்கள்.

குமுழமுனை கரடிபூவர் கிராத்தில் யானை வேலி இல்லாத நிலையில் காட்டுயானையின் தொல்லையினால் நாளாந்தம் விவசாயிகள் அழிவினை சந்தித்து வருவதாக தெரிவித்துள்ளார்கள்.

# இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு எதிராக மயிலிட்டியில் போராட்டம்

**யாழ். விஷேட நிருபர்**



மயிலிட்டி பகுதியில் இந்திய மீனவர்களின் அத்துமீறல்களுக்கு எதிராக நேற்று (31) போராட்டமொன்று மேற்கொள்ளப்பட்டது.

வலி.வடக்கு மீனவர் சமாசம் மற்றும் மயிலிட்டி கடற்றொழிலாளர் சங்கங்களின் ஏற்பாட்டில் நேற்று காலை 10 மணியளவில் மயிலிட்டி துறைமுகத்தில் ஒன்றுகூடிய மீனவர்கள் இந்திய மீனவர்களின் அத்துமீறலுக்கு எதிராக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

'அத்துமீறுகின்ற இந்திய மீனவர்களை கைது செய்', 'கைது செய்கின்ற படகுகளை அரசுடைமையாக்கு' போன்ற கோஷங்களை எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கொட்டும் மழையிலும் கடற் தொழிலாளர்கள் இந்த போராட்டத்தை நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

# பூநகரி பிரதேச சபையின் புதிய தவிசாளராக சிறீரஞ்சன்

**பரந்தன் குறூப் நிருபர்**

பூநகரி பிரதேச சபையின் புதிய தவிசாளராக, இலங்கை தமிழரசு கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் முழங்காவில் தேசிய பாடசாலையின் பிரதி அதிபருமான சிறீரஞ்சன் நேற்று(31) காலை 9.30 மணிக்கு தனது கடமைகளை பொறுப்பேற்றுக் கொண்டார்.



இந்நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன், கரைச்சி பிரதேச சபையின் தவிசாளர் வேழமாலிகிதன், பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் உபதவிசாளர் கயன், பூநகரி பிரதேச சபையின் உபதவிசாளர் எமிலியாம்பிள்ளை, தமிழரசுக் கட்சியின் கிளிநொச்சி கிளையின் செயலாளர் விஜயன், பூநகரி பிரதேச சபையின் உறுப்பினர்கள், தமிழரசுக் கட்சியின் செயற்பாட்டாளர்கள் சபையின் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கின் குரல்



## கிணறுகளில் மீன் இடும் நிகழ்வு

**காரைதீவு குறூப் நிருபர்**

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் டெங்கு நுளம்புகளின் பெருக்கத்தை கட்டுப்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுவருகிறன.

காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் தஸ்லீமா வசீர் தலைமையில் இத்திட்டம் கிராம பிரிவுதோறும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதன்படி நேற்று காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தினால் காரைதீவு சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக பிரிவில் உள்ள கிணறுகளில் மீன் இடும் நிகழ்வுகள் இடம்பெற்றது. இப்பிரிவிலுள்ள சில வீட்டுக் கிணறுகளில் டெங்கு குடம்பிகள் காணப்பட்ட கிணறுகளை இனங்கண்டு மீன்கள் இடப்பட்டதுடன்.டாக்டர் தஸ்ஸீமா வசீர் பொது சுகாதார பரிசோதகர்கள் அதிகாரிகளால் இப்பிரதேச பொதுமக்களுக்கு டெங்கு நுளம்பு தொடர்பான அறிவுரைகளும் வழங்கப்பட்டது.

மேலும் இவ்வேலைத்திட்டத்தில் சுகாதார வைத்திய அதிகாரிபொது சுகாதார பரிசோதனையாளர்கள் நுளம்பு கள தடுப்பு பிரிவினர்கள் ஆனுவுகு பலரும் கலந்து கொண்டனர் வேலைத்திட்டத்தை முன்னெடுத்தனர்.

## மூதூர் பொது விளையாட்டு மைதான புனரமைப்பு பணிகள் ஆரம்பம்

**மூதூர் தினகரன் நிருபர்**

விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷவின் 05 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் மூதூர் பொது விளையாட்டு மைதான புனரமைப்பு அபிவிருத்திப் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

மூதூர் பிரதேச சபையின் பராமரிப்பில் உள்ள இம்மைதானம் பாடசாலைகள் விளையாட்டுக் கழகங்கள் மற்றும் அரச அரச சார்பற்ற பொது அமைப்புக்கள் என பல்வேறுபட்ட விளையாட்டுடன் கூடிய பொது நிகழ்வுகளுக்காகவும் பெரிதும் பயன்படுத்தப்பட்டு வருகின்றது

அத்தியாவசிய நிர்மாண வேலைகளை மேற்கொள்ளவும் விளையாட்டு வீரர்கள் ஆடை மாற்றுவதற்கான தனியான அறைகளும் அமைக்கப்பட்டு மின்சார இணைப்பு நீர் மலசலகூட வசதிகளுடன் ஏனைய அபிவிருத்திகளை மேற்கொள்ள உள்ளதாகவும் மூதூர் பிரதேச சபை தவிசாளர் எம்.எம்.ஏ. அரூஸ் தெரிவித்தார்.

# திருமலை பொது வைத்தியசாலைக்கு ஒதுக்கப்பட்ட உத்தேச 50 ஏக்கர் காணி

### கிழக்கு ஆளுநர் அனுராதா யஹம்பத் கள ஆய்வு





திருகோணமலை பொது வைத்தியசாலையை வேறு இடத்துக்கு இடமாற்றம் செய்ய அரசாங்கம் தீர்மானித்துள்ளதையடுத்து (30) காலை கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தலைமையிலான குழுவினர் உரிய பிரதேசத்துக்கு சென்று கள ஆய்வுகளை செய்தனர்.

சர்தாபுர பகுதியில் புதிய மருத்துவமனையை கட்டுவதற்கு ஏற்றதென அண்மையில் கொழும்பில் நடைபெற்ற சந்திப்பில் கருத்து தெரிவிக்கப்பட்டது. அதற்காக 50 ஏக்கர் காணியை ஒதுக்க திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தக் காணியை சுகாதார அமைச்சின் செயலாளரிடம் விரைவில் கையளிக்க தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சமன் தர்சன பாண்டிகோராளவுக்கு ஆளுநர் இதன் போது பணிப்புரை விடுத்தார்.

இதில் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கபில நுவன் அத்துகோரள, திருகோணமலை மாவட்ட செயலாளர் சமன் தர்ஷன பாண்டிகோரள, முன்னாள் மாகாண அமைச்சர் ஆரியவதி கலபத்தி, ஆளுநரின் செயலாளர் எல்.பி. மதநாயக்க, சுகாதார அமைச்சின் அதிகாரிகள் மற்றும் திருகோணமலை வைத்தியசாலையின் பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

# மட்டக்களப்பில் மூத்த முன்னோடி விவசாயிகளுக்கு கௌரவம்

**கல்லடி குறூப் நிருபர்**

சர்வதேச விவசாயிகள் தினத்தை முன்னிட்டு மட்டக்களப்பு மண்முனை மேற்கு விவசாயிகள் அபிவிருத்தி சங்கத்தின் ஏற்பாட்டில் விவசாயப் புரட்சியாளர்கள் எனும் நாமம் சூட்டி மூத்த முன்னோடி விவசாயிகளை கௌரவிக்கும் நிகழ்வு வவுணதீவு உழவர் சந்தியில் இடம்பெற்றது.

சங்கத்தின் தலைவர் ஆர். குணாநிதி தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட செயலாளருமான கே.கருணாகரன், மண்முனைமேற்கு பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர், விதை நடுகைப் பொருள் அபிவிருத்தி நிலைய பிரதி விவசாய பணிப்பாளர் ஆர்.சிவனேசன், உறுகாம நீர்பாசன திட்ட பொறியியலாளர் ஏ.விஸ்ணுரூபன், வவுணதீவு பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி ஜி.எஸ். பிரியங்கர மற்றும் பட்டிருப்பு, கல்குடா மட்டக்களப்பு பிரதேச தமிழ் விவசாயிகள் அமைப்பினர், கைத்தொழில் விவசாய சம்மேளன பிரதிநிதிகள், விவசாயிகள் என பலர் கலந்து கொண்டிருந்தனர்.

சுகாதார நடைமுறைகளை பின்பற்றி நடைபெற்ற இந்நிகழ்வில் விவசாயிகளின் கலை நிகழ்வுகளும் இடம்பெற்றதுடன், இதன்போது 12 மூத்த முன்னோடி விவசாயிகளுக்கு பொன்னாடை போர்த்தி மகுடம் அணிவித்து நினைவுப் பரிசில்களும் அதிதிகளால் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.

மாவட்டத்தில் இடம்பெற்ற சர்வதேச விவசாயிகள் தினக் கொண்டாட்டங்களில் வரலாற்றில் முதல் தடவையாக மூத்த முன்னோடி விவசாயிகள் கௌரவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மின்விளக்குகளால் அலங்கரிக்கப்பட்ட மட்டக்களப்பு நகரம்





**மட்டக்களப்பு விசேட நிருபர்**

புதிய ஆண்டை வரவேற்பதற்காக மட்டக்களப்பு நகரின் பல இடங்களில் மின் விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டுள்ளன. மட்டக்களப்பு நகரின் இதயமெனக் கருதப்படும் காந்திப் பூங்கா அருகில் உள்ள நகர மணிக்கூட்டுக் கோபுரம் மற்றும் கோட்டைமுனைப் பாலம் என்பன மாநகரசபையினால் அலங்கரிக்கப்பட்டு வருடப்பிறப்பை சிறப்பாக வரவேற்றனர்.

## மூதூரில் கெப் வாகன விபத்து

**கந்தளாய் தினகரன் நிருபர்**



திருகோணமலை மாவட்டத்தின் மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் சிறியரக கெப்வாகனமொன்று விபத்துக்குள்ளானதில் சாரதியும் உதவியாளரும் உயிர் தப்பியுள்ளனர்.

இவ்விபத்துச் சம்பவம் வியாழக்கிழமை (30) மாலை இடம்பெற்றுள்ளதாக மூதூர் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

திருகோணமலை மட்டக்களப்பு பிரதான வீதியூடாக மீன்களை ஏற்றிக் கொண்டு பயணித்த வாகனம் இவ்வாறு விபத்துக்குள்ளானதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர். சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மூதூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## இறக்காமம் தவிசாளருக்கெதிரான குற்றச்சாட்டுக்கள் அடங்கிய மகஜர் கையளிப்பு



இறக்காமம் பிரதேச சபைத் தவிசாளர் ஜெமீல் காரியப்பருக்கெதிரான குற்றச்சாட்டுக்கள் அடங்கிய மகஜர் கிழக்கு ஆளுநர் அனுராதா யஹம்பத்திடம் சமர்ப்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இது தொடர்பான மகஜர் ஒன்றை தேசிய காங்கிரஸ் கட்சியின் பிரதேச அமைப்பாளர் சட்டத்தரணி கே எல் சமீம் ஆளுநரின் பிரத்தியேகச் செயலாளர் திரு.சாலுகவிடம் வியாழக்கிழமை (30) கையளித்துள்ளார். குறித்த மகஜரில் அரசின் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதில் தடை ஏற்படுத்தி வருகின்றமை, கடந்த பத்து மாதங்களாக சபை நிதி வீணடிக்கப்பட்டுள்ளமை தொடர்பாகவும் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன் இது தொடர்பிலான சட்ட நடவடிக்கையை துரிதப்படுத்துமாறும் வலியுறுத்தி மகஜரை சமர்ப்பித்துள்ளனர்.

## சமுர்த்திப் பயனாளிகளுக்கு வாழ்வாதார உதவிகள்

**திருக்கோவில் தினகரன் நிருபர்**

அம்பாறை திருக்கோவில் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 22 கிராம சேவையாளர் பிரிவுகளில் தெரிவு செய்யப்பட்ட 165 சமுர்த்திப் பயனாளி குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன. திருக்கோவில் பிரதேச செயலக சமுர்த்தி தலைமை முகாமையாளர் பி.பரமானந்தம் தலைமையில் இந்நிகழ்வு இடம்பெற்றது.

நாட்டு மக்களின் வாழ்வாதாரத்தினை மேம்படுத்தும் நோக்குடன் அருணுலு அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் ஊடாக சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் ஊடாக இவ் வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இவ் வாழ்வாதார உதவிகளுக்காக சுமார் 70 இலட்சம் ரூபா நிதி சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தினால் ஒதுக்கீடு செய்யப்பட்டு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இவ் வாழ்வாதார உதவிகள் வழங்கும் நிகழ்வில் திருக்கோவில் பிரதேச செயலாளர் ரீ.கஜேந்திரன், உதவிப் பிரதேச செயலாளர் கே.சதிசேகரன், உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.அனோஜா, சமுர்த்தி திட்ட முகாமையாளர் பி.கமலேஸ்வரன், சமுர்த்தி முகாமையாளர்கள் மற்றும் சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

## புளியடிச்சோலை சிறுமி கடத்தல் விவகாரம்; கண்டுபிடிக்க நடவடிக்கை எடுக்க கோரிக்கை

**கந்தளாய் தினகரன் நிருபர்**

திருகோணமலை மூதூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியடிச்சோலை கிராமத்தைச் சேர்ந்த 13 வயதான மாணவி கடத்தப்பட்ட விவகாரம் தொடர்பில் மூதூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியை பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தொடர்புக் கொண்டு சம்பந்தப்பட்ட சிறுமியை உடனடியாக கண்டுபிடித்து, சம்பந்தப்பட்டவர்களுக்கு கடுமையான தண்டனை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என கேட்டுக் கொண்டுள்ளார்.

புளியடிச்சோலை கிராமத்தைச் சேர்ந்த சிறுமி கடத்தப்பட்டு 20 நாட்கள் கடந்தும் சிறுமி கண்டுபிடிக்கப்படவில்லை. இதன்போது குறித்த சிறுமியை கடத்தியதாக சந்தேகிக்கப்படும் நபரின் உறவினர் ஒருவரை கைது செய்து விசாரித்து வருவதாகவும் விரைவில் சம்பந்தப்பட்ட நபரை கைது செய்து சிறுமியை மீட்டுத்தருவதாகவும் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கூறியதாக மனோகணேசன் தெரிவித்தார்.

இச்சிறுமியை 07 இரவு அக்கிராமத்தைச் சேர்ந்த செல்வநாயகம் உதயன் (24) என்பவரினால் கடத்திச் செல்லப்பட்டுள்ளாரென மூதூர் பொலிஸ் நிலையத்தில் 08 அன்று முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

## நாட்டின் பல பகுதிகளில் மோட்டார் சைக்கிள் திருடிய நபர் கைது

நாட்டின் பல்வேறு பகுதிகளில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் ஒருவரை எப்பாவல பொலிஸார் கைது செய்துள்ளனர்.

பொலன்னறுவ மின்னேரிய பகுதில் வைத்து சந்தேக நபரை பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர். எப்பாவல பகுதியில் சில தினங்களுக்கு முன்னர் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் திருட்டுச் சம்பவம் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாடு ஒன்றினை அடுத்து விசாரணைகளை மேற்கொண்டு வந்த நிலையிலேயே சந்தேக நபரை எப்பாவல பொலிஸார் கைது செய்துள்ளதுடன் 06 சிறிய ரக மோட்டார் சைக்கிள்களையும் கைப்பற்றியுள்ளனர். கைது செய்யப்பட்டவர் மின்னேரிய பகுதியை வசிப்பிடமாக கொண்ட 67 வயதுடயவர் என்பதுடன் இதற்கு முன்னரும் 17 மோட்டார் சைக்கிள்களை திருடிய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த நிலையில் சிறைச்சாலையிலிருந்து தப்பிச் சென்றவர் என்பது ஆரம்பகட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை எப்பாவல பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

விசாரணைகளின் பின்னர் சந்தேக நபர் தமுத்தேகம நீதிமன்றில் ஆஜர் படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## காத்தான்குடியில் புதிய அலுவலகம் திறந்து வைப்பு

**புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்**

சமுர்த்தி வேலைத்திட்டத்தினை கிராம மட்டத்தில் வலுப்படுத்தும் வகையில் சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களை வலப்படுத்தும் வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதன் ஒரு அங்கமாக சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் அலுவலகங்கள் திறக்கப்பட்டு வருகின்றன.

இத் திட்டத்தின் காத்தான்குடி பிரதேச செயலகப் பிரிவின் புதிய காத்தான்குடி தெற்கு 167சி கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள அலி சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பு அலுவலகம் (30) வியாழக்கிழமை பிரதேச செயலாளர் யு.உதய சிறீதரனால் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் காத்தான்குடி பிரதேச செயலக சமுர்த்தி முகாமைத்துவ பணிப்பாளர், திட்ட முகாமையாளர், வலய முகாமையாளர், கிராம உத்தியோகத்தர், அபிவிருத்தி உத்தியோகத்தர் உட்பட சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்பு கூட்டம்

**ஒலுவில் விசேட நிருபர்**

எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய அனர்த்த அபாயத்தினை குறைக்கும் முகமாக அரசாங்கத்தினால் அனர்த்த குறைப்பு செயற்த்திட்டத்தினை சிறந்தமுறையில் கொண்டு செல்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாகஇஅம்பாறை மாவட்ட பதில் அரசாங்க அதிபர் வீ. ஜெகதீசன் தெரிவித்தார். அம்பாறை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ ஒருங்கிணைப்புக் கூட்டம் வியாழக்கிழமை (30) அம்பாறை பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் எம்.ஏ.சீ.எம். றியாஸ் தலைமையில் நடைபெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில் மாவட்டத்தின் நிலையான அபிவிருத்தியுடன் அனர்த்த குறைப்பு செயற்திட்டத்தினையும் முன்னெடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய கிராமங்கள் தோறும் காணப்படுகின்ற அனர்த்த முகாமைத்துவ தொண்டர் குழுவினரையும் மற்றும் இளைஞர்களையும் வழிப்படுத்துவதற்கான செயற்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. அனர்த்தங்களிலிருந்து மக்களையும் அவர்களது உடமைகளையும் பாதுகாக்க சரியான முன்னெச்சரிக்கை ஏற்பாடுகளை அரசு முன்னெடுத்துள்ளது.

மழை காலங்களில் வெள்ளம் ஏற்படா வண்ணம் வடிகான்களை துப்புரவு செய்வதோடு வெள்ளநீர் வடிந்தோடக் கூடிய வகையில் சீரமைக்கப்பட வேண்டுமென்றார்.

அபாயகுறைப்பு வேலைத்திட்டம் தொடர்பாக பொலிஸார் முப்படைகள் திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் வெளிக்கள உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு விளக்கமளிக்கப்பட்டது.




# மலையகத்தில் காணி பிரித்து கொடுப்பது என்பது வெறும் அரசியல் நாடகம்

## இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான்



ஹட்டன் விசேட நிருபர்

மலையகத்தில் காணி பிரித்து கொடுப்பது என்பது வெறும் அரசியல் நாடகம். கடந்த 10 வருட காலமாக வேறு அரசாங்கங்கள் தான் ஆட்சியில் இருந்தது. காணிகளை சுலபமாக பிரித்து கொடுக்க முடியுமென்றால் ஏன் காணிகளை பிரித்து கொடுக்கவில்லை. மக்களை ஆசைக் காட்டி மோசம் செய்கின்ற செயல். என்னை பொறுத்தவரையில் நாட்கூலி நிலையிலிருந்து மாறி திறந்த முறைமைக்கு வர வேண்டும் என தோட்ட வீடமைப்பு மற்றும் சமூக வலுவூட்டல் ராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.

நோர்வூட் பிரதேச சபைக்குட்பட்ட 33 கிராம சேவகர் பிரிவுகளில் வாழும் மக்களுக்கு அரச சேவையினை இலகுபடுத்துவதற்காக அம்பகமுவ கோரளை பிரதேச செயலக உப காரியாலயம் ஒன்று நேற்று உத்தியோகப்பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது .அதில் கலந்து கொண்டு பிரத்தியேகமாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

கடந்த இரண்டு வருடங்களாக கொரோனா தொற்று பரவல் காரணமாக நாடு மிக மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது. மக்கள் வாழ்வாதார ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் அதிருப்தியாக தான் இருக்கிறார்கள். நாம் அதனை ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆகவே பிறக்கின்ற வருடத்தில் மக்களின் சுமைகளை எவ்வளவு குறைக்க முடியுமோ அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். அதேவேளை சம்பள பிரச்சினைக்கு ஒரே தீர்வு கூட்டு ஒப்பந்தம் தான் என்பதனை நான் தெளிவாக கூறியிருக்கிறேன். நிறைய பேர் அதனை வேண்டாம் என்றார்கள். சமீபத்தில் நான் கேள்விப்பட்டேன் அது மீண்டும் கொண்டு வர வேண்டும் என்று ஒரு சிலர் தெரிவிக்கிறார்கள். இன்னும் ஒரு சிலர் வேண்டாம் என்ற நிலைப்பாட்டிலேயே இருக்கிறார்கள். இன்று தொழிற்சங்க கூட்டமைப்பு என்ற ஒன்றும் உள்ளது. நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டியது கூட்டு ஒப்பந்தம் வேண்டுமா? வேண்டாமா? என்று தான் என அவர் தெரிவித்தார்.

ராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான மருதபாண்டி ராமேஸ்வரன், எஸ்.பி.ரத்நாயக்க, நோர்வூட் பிரதேச சபைத்தலைவர் கே.கே.ரவி, மஸ்கெலியா பிரதேச சபைத்தலைவர் செம்பகவள்ளி மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் மாவட்ட பிரதேச செயலாளர்கள், உட்பட கிராம சேவகர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டிருந்தனர்.

# மலையகத்தில் எரிவாயு கடைகள் பூட்டு மண்ணெண்ணெய்க்கும் தட்டுப்பாடு

ஹட்டன் விசேட நிருபர்

மலையகத்தில் உள்ள பிரதான நகரங்களில் கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக கேஸ் விற்பனை நிலையங்கள் பூட்டப்பட்டுள்ளதுடன், பல எண்ணெய் நிரப்பு நிலையங்களில் மண்ணெண்ணை தட்டுப்பாடும் நிலவி வருகிறது. எரிவாயு மற்றும் மண்ணெண்ணை தட்டுப்பாடு காரணமாக பொது மக்கள் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வருகின்றனர்.

ஹட்டன் ,கொட்டகலை, தலவாக்கலை உள்ளிட்ட பிரதான நகரங்களில் எரிவாயு இல்லாததன் காரணமாக எரிவாயு விற்பனை நிலையங்கள் மூடப்பட்டுள்ளன. பல குடும்பங்கள் மண்ணெண்ணை அடுப்புக்கு மாறிய போதிலும் தற்போது மண்ணெண்ணைக்கும் தட்டுப்பாடு நிலவுகிறது.

புத்தாண்டினை கொண்டாடுவதற்காக நேற்று(31) காலை மண்ணெண்ணை பெற்றுக்கொள்வதற்காக பலர் எண்ணை நிரப்பு நிலையங்களுக்கு வருகை தந்த போதிலும் மண்ணெண்ணை இல்லாததன் காரணமாக ஏமாற்றத்துடன் திரும்பி சென்றனர். ஒரு சில எண்ணை நிரப்பு நிலையங்களில் மாத்திரம் மண்ணெண்ணை பெற்றுக்கொடுக்கப்பட்டதன் காரணமாக பெரும் எண்ணைக்கையிலானவர்கள் மண்ணெண்ணை பெற்றுக்கொள்வதற்காக வருகை தந்திருந்தனர்.எண்ணை நிரப்பு நிலையங்களில் அதிக பட்சம் 5 லீற்றர் மாத்திரமே பெற்றுக்கொடுக்கப்பட்டது.

இதே வேளை ஒரு சில பகுதிகளில் கேஸ் பெற்றுக்கொள்ள முடியாததன் காரணமாக வெற்று சிலிண்டர்களை மாற்று உபயோகத்திற்காக பயன்படுத்தப்பட்டிருந்தமையும் காணக்கூடியதாக இருந்தன.

எது எவ்வாறான போதிலும் இன்று பிறந்துள்ள புத்தாண்டுக்காக மக்கள் ஆயத்தமாகும் நிலையில், மண்ணெண்ணை மற்றும் கேஸ் ஆகியவற்றை பெற்றுக்கொள்வதற்காக அலைந்து திரிய வேண்டியுள்ளமை கவலைக்குரியது என பலரும் தெரிவிக்கின்றனர்.

# புதிய நம்பிக்கைகளும் உற்சாகமும் பிறக்கட்டும்

## செந்தில் தொண்டமான் விடுத்துள்ள புத்தாண்டு வாழ்த்து



புத்தாண்டில் புதிய நம்பிக்கைகளும் உற்சாகமும் பிறக்கட்டும் என இ.தொ.காவின் உபதலைவரும், பிரதமரின் இணைப்பு செயலாளருமான செந்தில் தொண்டமான் வெளியிட்டுள்ள புத்தாண்டு வாழ்த்து செய்தியில் தெரிவித்துள்ளார்.

இனம், மதம், மொழி, நாடு என எல்லா எல்லைகளையும் கடந்து உலகெங்கும் உள்ள மக்கள் கொண்டாடுகின்ற நாளாக புத்தாண்டு அமைந்திருக்கிறது. ஒவ்வொருவருக்கும் வளர்ச்சியும், உத்வேகத்தையும் தருவதற்கு இப்புத்தாண்டு நம்பிக்கைகளை விதைக்கட்டும்.

புத்தாண்டு அனைவருக்கும் நிம்மதியையும், மகிழ்ச்சியையும் தருகிற வளமான ஆண்டாக திகழட்டும் என அவர் விடுத்துள்ள வாழ்த்து செய்தியில் கூறியுள்ளார்.

### இறக்குவானை பாதைக்கு

# காபட் இட ரூ.120 கோடி நிதி ஒதுக்கீடு

பலாங்கொடை தினகரன் நிருபர்

ஒரு இலட்சம் காபர்ட் பாதைகளை புனரமைக்கும் வேலைத் திட்டத்தின் கீழ் இறக்குவானை தேர்தல் தொகுதியில் 40 கிலோமீட்டர் தூர பாதைகளை புனரமைக்க 120 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்ததை அடுத்து, இறக்குவானை தொகுதி பாதை அபிவிருத்திக்காக மட்டும் இந்த நிதியினை பெற்றுக் கொள்ள முடிந்ததாக இரத்தினபுரி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் திருமதி. முதிதா பிரிசான்தி டி சொய்சா தெரிவித்தார். வெலிகேபொல யடிபஸ்கமுவ பாதையின் நான்கு கிலோமீட்டர் தூரத்தை புனரமைக்க ஒன்பது கோடி ரூபாவும், கொடகவெல பிபிலேகம பாதையின் ஐந்து கிலோமீட்டர் தூரத்தினை புனரமைக்க 11 கோடி ரூபாவும், பலவின்ன மொரகஹ குறுக்குப் பாதையின் 3 கிலோ மீட்டர் தூரத்தினை புனரமைக்க நான்கு கோடி ரூபாவும், இறக்வானையிலிருந்து ராமகோரள வரையுள்ள ஏழு கிலோமீட்டர் தூர பாதைக்காக 21 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும்பல பாதைகள் இந்நிதி மூலம் காப்பர்ட் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் தெரிவித்தார்.

# இரத்தினபுரியில் விளையாட்டு மைதானம், உடற்பயிற்சி ஆசிரியர்கள் இல்லாத தமிழ்ப் பாடசாலைகள்

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

இரத்தினபுரி மாவட்டத்தின் பெரும்பாலான தோட்ட பகுதி தமிழ் பாடசாலைகள் விளையாட்டு மைதான வசதியின்றி காணப்படுகின்றன. பாடசாலைகளுக்கு உடற்பயிற்சி மற்றும் விளையாட்டு ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்படுகின்றன. என்றாலும் இப்பகுதியில் உள்ள தோட்டப் பிரதேச பாடசாலைகள் புறக்கணிக்கப்படுவதாக கவலை தெரிவிக்கப்படுகிறது.

இதனால் திறமையான மாணவர்கள் இருந்தும் அவர்களின் விளையாட்டுத் திறன்களை வளர்க்கவும் ,வெளிப்படுத்தவும் வாய்ப்பின்றி இருப்பதாக பாடசாலை நிர்வாகங்கள் கவலை தெரிவிக்கின்றன. தமிழ் அரசியல் தரப்பினர்கள் இப்பாடசாலைகளுக்கான விளையாட்டு மைதானங்களை பெற்று கொடுக்க முயற்சிகளை காலத்துக்கு காலம் மேற்கொண்டிருந்த போதிலும் தோட்ட நிர்வாகங்களின் ஒத்துழையாமை காரணமாக அம்முயற்சிகள் சாத்தியமாகவில்லை.

எனவே தேசிய மட்டத்தில் ஆரோக்கியமான அரசியல் நகர்வுகளுடன் அனைத்து தோட்டப் பாடசாலைகளுக்கும் விளையாட்டு மைதானம் பெற்றுக் கொள்ளக் கூடியதான முயற்சிகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென பாடசாலை நிர்வாகங்கள் வேண்டுகோள் விடுக்கின்றன.

# புத்தாண்டு மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் மகிழ்வையும் மதிப்பையும் பெற்றுத்தர வேண்டும்

- திருமதி அனுஷியா சிவராஜா

மலர்ந்திருக்கும் புத்தாண்டு மலையக பெருந்தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் மகிழ்வையும் மதிப்பையும் பெற்றுத்தர இறைவனை பிரார்த்திக்கின்றோம். இந்த ஆண்டில் காலடி எடுத்து வைக்கும் பெருந்தோட்ட தொழிலாளர் குடும்பங்களுக்கு எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் பெருமிதமடைகின்றோம் என இ.தொ.கா பிரதித் தலைவர் திருமதி. அனுஷியா சிவராஜா தமது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் தமது வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது:

பெருந்தோட்ட மக்கள் ஏனையோரைப் போல சகல சலுகைகளையும் உரிமைகளையும் பெற்று வாழ வேண்டும் என்பதே எமது அபிலாஷைகளாகும். நிரந்தரமான குடியிருப்புக்கள், போதிய நிலம் ஆகியவற்றை இவர்களும் பெற்று நிம்மதியான வாழ்வைத் தொடர வேண்டும் என்பதற்காகவே எமது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தொடர்ச்சியாக பாடுபட்டு வருகின்றது. சகல முயற்சிகளுக்கும் வெற்றி பெறுவதற்காக நாம் தொடர்ந்து பாடுபட இப்புத்தாண்டில் திடசங்கற்பம் கொள்வோமாக.

உறுதியும் கட்டுப்பாடும் உள்ள சமூகமாக மலையக மக்கள் திகழும் போது அவர்களின் உரிமைகளை வென்றெடுக்க முடியும் என்பதில் நாம் நம்பிக்கை உடையவர்களாக இருக்கின்றோம். அனைவருக்கும் எமது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகட்டும் என கூறுயுள்ளார்.

# 2022ம் ஆண்டு நம்பிக்கை நிறைந்த ஆண்டாக அமைய வேண்டும்



பிறக்கின்ற ஒவ்வொரு புத்தாண்டும் மாற்றங்களையும், முன்னேற்றங்களையும் தரவேண்டும் என்ற எதிர்பார்ப்பு ஒவ்வொருவருக்குள்ளும் உண்டு. மலையக சமூகத்தின் மாற்றத்திற்காகவும், ஏற்றத்திற்காகவும் தம்மை அர்ப்பணித்திருக்கும் இ.தொ.கா எத்தனை சவால்களை எதிர்கொண்டாலும்

இடைவிடாது பாடுபடும் என்பதை இப்புத்தாண்டில் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன் என இ.தொ.கா. பொதுச் செயலாளரும், தோட்ட வீடமைப்பு மற்றும் சமுதாய உட்கட்டமைப்பு வசதிகள் ராஜாங்க அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தமது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அவர் தனது புத்தாண்டுச் செய்தியில் மேலும் தெரிவித்துள்ளதாவது :

எமது மலையக மக்கள் இடர்களை எதிர்கொள்ளும் போதும், சவால்களை சந்திக்கின்ற போதும் அரணாகக் காத்து நின்று துயர் துடைத்து பாதுகாத்து வந்திருக்கின்றோம். இந்த வரலாற்றுப் பணியை நாம் மேற்கொண்டிருப்பதை வரலாறு சான்றுபடுத்தும். இதன் காரணமாகவே தெளிந்த சிந்தனையோடும் கொள்கைப்பற்றோடும் மக்கள் எம்பின்னால் அணிவகுத்து நிற்கின்றனர். இன்று எம்மக்கள் அனைவருக்கும் சலுகைகள்,உரிமைகள், வசதி வாய்ப்புகள் அத்தனையும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் அரசியல் சாணக்கியத்தாலும் தொழிற்சங்க போராட்டங்களாலும் பெறப்பட்டவை என்பதை எவரும் மறந்து விட முடியாது.

2022ம் ஆண்டு நம்பிக்கை வலுவூட்டும் ஆண்டாகவும், மலையக மக்களின் தேவைகளை நிறைவேற்ற வழிகாட்டும் ஆண்டாகவும் திகழவேண்டும். இம்மக்களின் தேவைகளிலும் அவர்களது முயற்சிகளிலும் நாம் கைகொடுப்போம். புதிய ஆண்டில் மலையகமெங்கும் மகிழ்ச்சி பரவட்டும்.

இதேவேளை இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள்.. இவர்களின் எதிர்பார்ப்புகள், விருப்பங்கள் இவ்வாண்டிலேயே நிறைவேற்றப்பட வேண்டும். இந்த ஆண்டு இளைஞர்களுடைய ஆண்டு. புதிய சகாப்தத்தை படைக்கப் போகும் இவ் அரசாங்கம் இளைஞர்களின் எண்ணங்களை நிறைவேற்றி நம்பிக்கை வலுவூட்டும் ஆண்டாக இந்த ஆண்டை நாம் எதிர்பார்க்கின்றோம்.

இளைஞர்கள் மத்தியில் புதிய யுகத்தைப் படைக்கப் போவது உறுதி. வரலாற்றில் இளைஞர்கள் ஒரு போதும் தவறு இழைக்கக் கூடாது என்பதை இப்புத்தாண்டு செய்தி மூலம் தெரிவித்துக் கொள்கின்றேன். ஒளிமயமான எதிர்காலம் உங்களுக்கும் உங்கள் குடும்பத்திற்கும் மலர வேண்டும்.

# பசறையில் சுகாதார பிரிவினர் பரிசோதனை

பதுளை தினகரன் விசேட நிருபர்

பசறை நகரிலுள்ள வெதுப்பகங்கள், தேநீர் கடைகள், பல சரக்கு கடைகள் ஆகியனவற்றை பசறை சுகாதார வைத்திய அதிகாரி மற்றும் சுகாதார பிரிவினர்கள் இணைந்து நேற்றைய தினம் (31) சோதனைக்கு உட்படுத்தினர்.

இதன்போது காலாவதியான பொருட்களை அந்தந்த கடைகளிலேயே மண்ணெண்ணை ஊற்றி எறித்ததோடு ,காலாவதி லேபல்கள் ஒட்டப்படாத பொருட்களையும் சுகாதார பிரிவினர் கைப்பற்றினர். இதன்போது கடை உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட உள்ளதாகவும் சுகாதார பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

# வீதியோரங்களில் உள்ள யானைகளுக்கு உணவு வழங்குவதால் ஆபத்து

இரத்தினபுரி சுழற்சி நிருபர்

உடவளவை எம்பிலிப்பிட்டிய ஹம்பேகமுவ காட்டுப் பிரதேசங்களில் உள்ள வீதிக்கு வரும் யானைகளுக்கு உணவு பொருட்களை வழங்க வேண்டாம் என வனபரிபாலன திணைக்கள அதிகாரிகள் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

பாதுகாப்பு மின் வேலிகளை தாண்டி சில யானைகள் வீதியோரமாக வந்து நிற்கும்போது, பொது மக்கள் மற்றும் உல்லாசப் பயணிகள் உணவுப் பொருட்களை வழங்கி வருகின்றன. இதனால் பொது மக்களுக்கு மாத்திரமன்றி யானைகளுக்கும் உயிர்ச் சேதங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது.

யானைகளால் பொதுமக்கள் தாக்கப்பட்டு உயிர் சேதங்கள் ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் அதிகம் உள்ளது. இந்நிலைமைகளின் போது பொது மக்கள் உயிராபத்துக்களை எதிர் நோக்கும் அதே வேளை பாதுகாப்பதற்காக யானைகள் மீது துப்பாக்கி பிரயோகங்கள் செய்தமையினால் அநேக சந்தர்ப்பங்களில் யானைகள் உயிரிழந்துள்ளதாகவும் இவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

# தேயிலை உரத்தின் விலை அதிகரிப்பினால் தேயிலை உற்பத்தியாளர்கள் பாதிப்பு

பலாங்கொடை தினகரன் நிருபர்

ஒரு வருடத்திற்கு பின்னர் பலாங்கொடை பிரதேசத்தின் தேயிலை விவசாயிகள் சிலருக்கு கடந்த 29 ஆம் திகதி தேயிலைக்கான உரம் கிடைத்துள்ள போதிலும், 50 கிலோ உரமூடையின் விலை 8000 ரூபா என விவசாயிகள் தெரிவித்தனர்.

இந்த விலை உயர்வு முன்னைய விலையை விட ஐந்து மடங்கு அதிகமாகும்.

ஒரு வருடத்திற்கு முன்னர் 1500 ரூபாவுக்கு விற்கப்பட்ட 50 கிலோ உரமூடை தற்போது ஐந்து மடங்காக விலை அதிகரித்துள்ளதால் தேயிலை உற்பத்தியாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

# மக்களுக்கும் சிறந்த வாழ்க்கை சூழலை ஏற்படுத்தும் ஆண்டாக அமைய வேண்டும்

-மருதபாண்டி ரமேஸ்வரன் எம்.பி

தலவாக்கலை குறூப் நிருபர்

பிறக்கும் புத்தாண்டு இலங்கை மக்களுக்கு சம உரிமையையும் சம அந்தஸ்தையும் வழங்கி நாட்டு மக்கள் அனைவருக்கும் சிறந்த வாழ்க்கை சூழலை ஏற்படுத்தும் ஆண்டாக அமைய வேண்டும் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிதிச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ரமேஸ்வரன் விடுத்துள்ள புதுவருட வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனது வாழ்த்து செய்தியில் மேலும் தெரிவிக்கையில்.

கொவிட்19 தொற்று இந்த உலகிலிருந்து முற்றாக ஒழிய நாம் பிரார்த்தனைகளை மேற்கொள்வோம். பஞ்சம்,பசி,பட்டினி என்பவற்றிற்கு விடிவு தேடி புதிய வாழ்வின் ஏக்கங்களை கண்களில் சுமந்து இலங்கை வந்து குடியேறியவர்களே இந்திய வம்சாவளி தமிழ் மக்கள். உழைப்பை மட்டுமே மூலதனமாகக் கொண்டு வாழ்வின் இருள் நீக்கி ஒளி பெற்ற ஒரு பெரும் சமுதாயமாக, வரலாற்று மாற்றத்துடன் வாழ்ந்து வருகின்றார்கள். இந்நாட்டின் சகல முன்னேற்றத்திற்கும் இந்திய வம்சாவளி மக்கள் தமது பங்களிப்பினை பெருமளவில் செலுத்தியிருக்கின்றார்கள்.



உழைக்கும் வர்க்கமாகிய தோட்ட தொழிலாளர்கள் இந்நாட்டின் பொருளாதாரத்திற்கு முதுகெலும்பாக இருந்து வருகின்றார்கள். எந்தவொரு காலகட்டத்திலும் இந்நாட்டுக்கு உழைப்பாளிகளாக இருந்திருக்கின்றார்களே தவிர நாட்டுக்கு எந்தவிதமான பாதகத்தையும் ஏற்படுத்தியதில்லை. இவர்கள் இதுவரையிலும் அனைத்து உரிமைகளையும் பேரம் பேசும் சக்திகளினால்தான் பெற்றிருக்கின்றார்கள். எனவே இந்த புதிய வருடத்தில் சகல உரிமைகளுடன் வாழ்வதற்கும், மக்கள் வாழ்க்கையில் இவர்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கும் ஒன்றிணைந்து உழைப்போம்.

நமது பலம், ஒற்றுமை என்பவற்றை நிலைநிறுத்தி நாம் தலைநிமிர்ந்து ஏனையோருக்கு நிகராக வீறுநடை போட பிறக்கும் புத்தாண்டில் உறுதி கொள்வோம். இன்றைய சூழ்நிலையில் கொவிட் 19 தொற்றிலிருந்து எம்மையும் எமது உறவினர்களையும் ,நண்பர்களையும் பாதுகாத்துக் கொள்வதற்காக நாம் சுகாதார நடவடிக்கைகளை பின்பற்ற வேண்டும் என்றும் வாழ்த்து செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# இளைஞர்களின் தவறான பாதை மாறுதலுக்கு துணையாக அமையும் வளர்ப்பு பிராணிகள்

**இன்றைய கால இளைஞர்களின் அதிக நாட்டமும் ஈடுபாடும் கையடக்க தொலைபேசிகளில் சிக்கிக் கிடக்கின்றது. போதைவஸ்து, சமூக ஊடக பிரசன்னம் என்று வழிதவறும் போது அதிலிருந்து வெளியேற ஒரு ஊக்கியின் தேவை அவசியமாகிறது. அவ்வாறான ஒரு விடயம் தான் செல்லப்பிராணிகளின் வளர்ப்பு. அதிலும் இன்று பெரும்பாலானவர்களின் கவனம் திசை திரும்பாமல் இருக்க புறா வளர்ப்பு ஒரு சிறந்த மருந்தாக அமைகின்றது என்று ஸ்ரீலங்கா ரேசிங் பிஜன் பெட்ரேசன் தலைவர் தாஹீர் முஹமட் இஸ்மாயீல் (சூட்டி நானா) போட்டிப் புறாக்களை வளர்ப்பதில் நீண்ட கால அனுபவ வரலாற்றைக் கொண்டவர். இதன் மூலம் 200 க்கும் மேற்பட்ட விருதுகளையும் பரிசுகளையும் வென்றவர். சமூக இயக்கச் செயற்பாடுகளிலும் ஈடுபாடு உடையவர். ஐந்தாவது வயதில் இருந்தே புறா வளர்ப்பில் நாட்டம் கொண்டு தனக்குள் இருக்கும் திறமையை அடையாளப்படுத்திக் கொண்டவர். 500க்கும் மேற்பட்ட புறாக்களை வளர்த்து வருகின்றார். அவர் தினகரன் பத்திரிகைக்கு வழங்கிய செவ்வி.**

**நேர்காணல்**
**இக்பால் அலி**

**கேள்வி:– உங்களது ஆரம்ப புறா வளர்ப்பு பற்றிக் கூறுவீர்களா?**

**பதில்:–** 1976களில் பிறந்தவன். என்னை அறிந்த காலம் முதல் புறா வளர்க்கின்றேன். முதலாம் வகுப்பு படிக்கும் காலத்தில் இருந்து இயல்பாகவே புறாவின் மீது நாட்டம் கொண்டு வளர்க்க ஆரம்பித்தேன். புறா வளர்க்கின்ற ஆற்றல் இருந்த போதிலும் முறையான வளர்ப்பனை மேற்கொள்ளத் தெரியாது. அக்குறணை 7 மைல்கல் என்ற இடத்தில் சகோதரர் நவாஸ் புறா வளர்த்தார். அவரிடம் சென்று கெஞ்சி 5 ரூபா அல்லது 10 ரூபா வைக் கொடுத்து புறாவை வாங்கி வந்து வளர்ப்பேன்.

நான் ஒன்பதாம் தரம் படிக்கும் காலத்தில் சொண்டு நீண்ட புறா வந்தது. அந்தப் புறா போட்டிக்குத்தான் பயன்படுத்துவது என்று தெரியாது. ஆனாலும் பாடசாலைக் காலத்திலும் அதற்குப் பிறகும் இயன்றளவு புறாக்கள் வாங்கி வளர்ப்பது எனது அன்றாட செயற்பாடுகளில் பிரதான ஒன்றாகவே இருந்து வந்துள்ளது. இயல்பாகவே எனக்குள் இந்த புறா வளர்க்கின்ற ஆற்றலை எனது நண்பர்களுடைய நெறிப்படுத்தலில் அதற்கான கூடுகளையும் உணவுகளையும் வழங்குவதில் வளப்படுத்திய பாங்கிலும் அதிலிருந்து தனியான புறா வளர்ப்பு பணியை சுயமாகவே ஆர்வத்துடன் கற்று அதற்குத் தேவையான மருத்துவ உதவிகளையும் செய்து வருகின்றேன்.

**கேள்வி:– உங்கள் ஸ்ரீலங்கா ரேசிங் பிஜன் பெட்ரேசன் உருவானது பற்றி கூறுவீர்களா?**

**பதில்:–** நண்பர்களோடு கதைத்துக் கொண்டிருக்கும் போது புறாக்களை எடுத்துச் சென்று பறக்க விடுவோம். எப்படி எந்நேரத்தில் வீடு வந்து சேர்கிறது என்று பார்ப்பது எங்களுக்கொரு சந்தோசமான பொழுதுபோக்கு விளையாட்டாக இருந்தது. 2010 ஆம் ஆண்டில் சப்ரின் அஸீஸ் அவர்களுடைய மச்சான் சிறிய பையன். எங்கள் வீட்டுக்கு புறா பார்க்க அடிக்கடி வருவார். அவர் என்னிடம் இருவரின் புறாக்களையும் தம்புள்ளைக்கு எடுத்துச் சென்று விடுவோமா என்றதும், எடுத்துச் சென்று பறக்க விட்டோம். என்னுடைய இரு புறாக்களும் வந்தன. அதற்குப் பிறகு 2010 களில் நண்பர்களான சப்ரின், அனீஷ, அஜ்மீர். பெரோஸ்இ சியாட் மற்றும் என்னுடைய புறாக்களை மஹியங்கனைக்கு எடுத்துச் சென்று பரீட்சார்த்தமாக பறக்க விட்டோம். இதில் வெற்றி பெறுபவருக்கு சிறிய கிண்ணம் ஒன்றை வாங்கி கொடுப்போம் என்று தீர்மானித்துக் கொண்டோம். அந்தப் போட்டியில் என்னுடைய புறா தான் முதலிடம் பெற்றது. 7 ஆம் மைல் கல்லடியில் வீதியில் எல்லோரும் கூடிக் கதைத்துக் கொண்டிருந்த போது அந்த விருதினை வீதியிலேயே வைத்துத் தந்தார்கள். அப்பொழுதுதான் நண்பர் சப்ரீன், நமக்கென ஒரு சங்கத்தை அமைத்தால் என்ன என்று ஆலோசனை முன் வைத்தார். அதற்கு ஏற்ப கண்டி மாவட்ட புறா வளர்ப்புச் சங்கம் என்ற பெயரில் செயற்பட ஆரம்பித்தோம்.

2011ல் நாங்கள் உத்தியோகபூர்வமாக தம்புள்ளையிலிருந்து ஒரு போட்டி வைத்தோம். அதில் சப்ரினுடைய புறா முதலாம் இடம் வந்தது. இரண்டாவதும், மூன்றாவதும் என்னுடைய புறாக்கள் தான் வந்தன. அதன் பின்னர் நண்பர் அஜ்மீர் இச் சங்கத்தின் அனுசரணையாளராக இணைந்து கொண்டார். அவருக்கு இச்சங்கத்தின் தலைமைத்துவப் பதவி வழங்கப்பட்டது. நாங்கள் நடத்தும் புறாப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு பெறுமதியான பரிசில்கள் வழங்குவோம். இப்போட்டியில் வெற்றிபெறும் நபருக்கு பரிசு கொடுக்க வேண்டும் எனில் எங்களுக்கு பணம் அன்பளிப்பாக தந்துதவும் முழுத் தொகையினையும் போட்டியில் வெற்றி பெற்றவருக்கே கொடுத்து விடுவோம்.

தற்போதை நடப்பு ஆண்டுக்கான புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு வருடமும் அங்கத்தவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவார்கள். தற்போது அதற்கான விண்ணப்பம் கோரியுள்ளோம். ஆர்வம் உடையவர்கள் இணைந்து கொள்ள முடியும். அங்கத்தவர் பணம் சிறிய தொகையே அறவிடப்படுகின்றது. அன்றாடம் சிறு தொழில்களில் ஈடுபடும் பிள்ளைகள் தான் புறா வளர்ப்பில் ஈடுபடுகின்றார்கள்.

**கேள்வி:– நீங்கள் 1995 களில் புறா வளர்ப்பு வியாபார முயற்சிகளிலும் ஈடுபட்டுள்ளீர்கள். அது பற்றி கூறமுடியுமா?**

**பதில்:–** உண்மையிலேயே நான் இதை ஒரு பொழுது போக்காகவே செய்தேன் என்றாலும் ஒரு காலத்தில் வியாபாரமாகவும் செய்தேன் என்பதையும் சொல்லத்தான் வேண்டும். சிறு பராயத்தில் புறா வளர்ப்பை எனது தேடல், பொழுது போக்கு மற்றும் ஆத்ம திருப்திக்காக செய்து வந்தேன். ஆனாலும் காலப் போக்கில் இதற்கான கேள்விகளும் அதிகரித்தன. மிக அழகான முறையில் புறாக்களை காட்சிப்படுத்தி விற்பனை செய்தேன். 1995களில் அக்குறணை 7ம் மைலில் புறா வளர்ப்பு கடை திறந்தேன். மனதிற்கு ஆறுதலளிக்கும் பொழுதுபோக்கு சாதனமாக புறா இருந்தமையால் அக்குறணையில் புறா வளர்ப்பாளர் உருவானார்கள்.

இதனை நான் மிருக வைத்தியரின் சான்று மற்றும் பிரதேச சபையின் பதிவுகளை எடுத்து அரச அங்கீகாரத்துடன் தான் செய்து வந்தேன். அதிகளவு மிருக வைத்தியருடன் நெருங்கிப் பழகியுள்ளேன். அந்த வகையில் பறவைகள் பற்றிய அனைத்து சிகிச்சை முறைகளையும் நான் தானாகவே செய்வேன். நான் சிறு வயது முதல் புறாவுடன் வளர்ந்ததால் தானாக அதன் அறிகுறிகளை அவதானித்து கற்றுக் கொண்டேன். ஒரு புறா இறந்தவுடன் அது எக்காரணத்திற்கான இறந்துள்ளது என்பதை ஆராய்ந்து பார்ப்பேன்.

இப்பிரதேசத்திலுள்ள மிருக வைத்தியர் ஏதேனும் பிரச்சினைகள் என்றால் என்னுடன் ஆலோசனை பெற்றுக் கொள்வார். நான் ஆரம்பத்தில் வளர்த்த புறா 22 வருடங்களாக இருக்கின்றது. இந்த விடயத்தில் புறா வளர்ப்பாளர் சமூக மட்டத்தில் பெரும் வரவேற்பு இருக்கிறது

**கேள்வி:– இலங்கையில் புறா வளர்ப்பு பற்றி கூற முடியுமா?**

**பதில்:–** இலங்கையில் கணிசமாளவு மக்கள் புறா வளர்ப்பில் ஈடுபட்டுள்ளனர். குறிப்பாக இலங்கையில் 4000 பேர் அளவில் புறா வளர்ப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றார்கள். முதலில் போட்டியை செய்து காட்டியது அக்குறணையில் தான். இப்போது நாடளாவிய ரீதியில் எல்லா இடங்களிலும் செய்கின்றார்கள்.

அக்குறணை சமீபத்திலுள்ள பௌத்த விஹாரைகளுக்குச் சென்று பௌத்த சமயத் தலைவர்களுடன் இணைந்து புறாக்கள் பறக்க விடுகின்றோம். அவர்களையும் இந்தப் பொழுது போக்கு புறா வளர்ப்பு முயற்சிகளில் ஈடுபட விழிப்புணர்வூட்டுதல்களைச் செய்து வருகின்றோம்.

**கேள்வி:–இதன் நன்மைகள் என்ன?**

**பதில்:–** தந்தை ஒருவர் என்னிடம் புறா தாருங்கள் என்று கேட்டார். ஏன் படிக்கின்ற பிள்ளைக்கு புறா வாங்கி கொடுக்கப் போகின்றீர்கள் என வினவினேன். வேறு எதாவது செய்யுங்கள் என்றேன். ஆனால் அதற்கு என் மகனிடம் எந்நேரமும் கையில் கையடக்க தொலைபேசிதான் இருக்கிறது. இல்லா விட்டால் வீதிகளில் கூட்டாளிமார்களுடன் சேர்ந்து சுற்றித் திரிகிறான். இதனால் போதைவஸ்துப் பாவனைக்கு உட்படலாம் என்ற அச்சம் இருக்கிறது என்று கூறிவிட்டு வாங்கிச் சென்றார். இதனால் அவர்களுடைய பார்வை எல்லாம் புறா வளர்ப்பதில் முழுக் கவனம் செலுத்தி அவர்களுக்குரிய பாதையினை காட்ட வேண்டி இருக்கிறது.

படிப்போடு பொழுதைக் கழிப்பதற்காக இதில் கவனம் செலுத்தி நேரத்தைக் போக்குவதற்கான சூழல் இருக்கிறது.

**கேள்வி:– உங்கள் சங்கத்தின் நிர்–வாகம் பற்றி கூற முடியுமா?**

**பதில்:–** இச்சங்கத்தின் ஆரம்பத் தலைவர் எம். சிபான், கடந்த நடப்பு வருடத் தலைவர் எம். எச். எம். அஜ்மீர் தற்போதைய நடப்பு வருடத் தலைவராக எம். டி. எம். இஸ்மாயீல் நான் தெரிவு செய்யப்பட்டுள்ளேன். உப தலைவர் எம். பி. பி. சமான், செயலாளர் சம்ரின் அஸீஸ், உப செயலாளர் எம். டி. எம். முப்ஹிம், பொருளாளர் எம். ருசான், உதவிப் பொருளாளர் எம். லுத்துப்புல்லாஹ், இணைப்பாளர் பர்னாஸ் பாசில், இணைப்பாளர் ஜே. எம். இம்ரான், இணைப்பாளர் எம் நிஸாமி, உறுப்பினர்கள் எம். எஸ். எம். சாஹிம், எம். ஜே. ஏ. முஹமட், ஏ. எச். பாசி, எம். ஆர். எம். ரிசான், எம். எச். எம். ரம்சான், சிந்துஜன், எம். என். எம். பலாஹ் ரிகாஸ் இஸ்மாயில், தினேஸ். எம். ஆர்ஷhட், ஏ. ஏ. அஸாம், ரிமாஸ் கான் ஆகியவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.













# புதுப்புனல்

ஷம்ஸ் பாஹிம்



## தைபிறந்தால் வழிபிறக்குமா ?

தைமாதம் பிறக்கிறது
கதிரவன் வருகைக்காகவும்
தைமகளின் வருகைக்காகவும்
காத்திருக்கின்றோம் நாங்களும்.

காத்திருந்தஎமக்கு
காலனவனும் கை கொடுக்கவில்லை
கானம் இசைத்த குயில்களும்
கானம் இசைக்க மறுத்ததேனோ.

வயல் வெளிகளும் பச்சைப்பசேலென
காட்சிதந்தவேளை
நாங்களும் புரித்துப் போய்நிற்க
கானல் நீராய் ஓடியதுஎம்கனவுகள்.

வானமும் பொறுக்கமுடியாமல்
கொட்டித் தீர்த்ததுமழையாக
வயல் நிலங்களும் காட்சியளித்தன
வெள்ளக் காடாக.

கடவுளுக்கும் பொறுக்கமுடியலையோ
நாங்கள் படுகின்ற வேதனை சோதனை
எரிகின்ற நெருப்பில் எண்ணை ஊற்றுவது
போன்று நம் வாழ்வு.

தைபிறந்தால் வழி பிறக்கும் என்றோம்
எங்கள் கனவுகளும் நனவாக
தைமகளின் வருகைகாண கண்கள்
மறுத்ததேனோ கனவுகள் பொய்த்ததேனோ

**தம்பிப்பிள்ளை நடேஸ்**



## ஒரு துளி நீர்

சீரிப்பாயும்
ஓர்துளி
நீர்தான்உயிர்!

உயிர் பிறப்பிலும்
முதல்வருவதும்
நீர்தான்

உயிர் பிரிகையில்
வழிவதும்
நீர்தான்!

அழுகை ஆனந்தம்
வருவதும்
நீர்தான்
அதை
அடக்கமுனைபவர்
விடுவதும்
நீர்தான்

காதல் சாதலானால்
வருவதும்
நீர்தான்
கண்போல்
காத்தகுழந்தை
இறந்தால் வருவதும்
நீர் தான்!

நீருக்கென்ன
அவ்வளவு மகிமை
நீரின்றி நிமிடம்கூட
வாழ முடியாத
ஜன்மமிது!

**தோப்பூர் எஸ் சிராஜ்தீன்**
நற்பிட்டிமுனை .



## தருவாக மாறுதல்

பார்க்கச் சகியாது
உடன் வயது முதிர்ந்த
தருவாக மாறுகிறேன்

தார்ச் சாலை மருங்கில்
சென்று கொண்டிருக்கிறேன்
கோடை வெயிலின்
தாங்கொணா வெம்மையில்
ஒதுங்க சிறு நிழலின்றி
அலைந்து திரிந்தனர் பாதசாரிகள்

அவர்களின் அந்தரிப்பை
தவித்த வாய்க்கு
மிடரு நீர் கிடைத்தது போல்
என் கீழாக வந்து காலாறினர்
அத்தோடு பறவைகளும்
சடைத்த கிளைகளில் வந்து தங்கின

பகல் ஒரு கொடியைப்
போல்வளர்ந்து மாலையாகி
விடுறது

இப்படியே நின்றிருந்தால்
வீடு செல்வது சாத்தியமாகாது
பாதசாரிகள் யாருமற்ற தருணம்
மரத்திலிருந்து வெளியாகிறேன்

எனக்குள் தங்கியிருந்த பறவைகளை
என்ன செய்வதென்று புரியவில்லை
வேறு போக்கிடமற்று
பின்னால் வருகின்றன பறவைகள்

**ஜமீல்**



## நல்லதாய் ஒரு சிந்தனை!

அன்பு அது பெரும்
ஆல விருட்சம்
அயலானிடம் அன்புவை

இறைவனுக்கு அது பொருத்தம்
அன்புக்குள் அனைத்தும் அடங்கும்
அதுதான் அனைத்தையும் வென்றிடும்

ஆயுதம்!
சிந்தனை சிறப்பாக இருந்தால்
சந்தோஷம் நிறைந்திருக்கும்
பொறாமைச் சிந்தனை உன்னை
தீயில் பொசுக்கிவிடும்

மென்மையான உள்ளத்தோன்
நற்சிந்தனையின் இருப்பிடம்!
சிந்திக்கத் தெரியாதவன்
இவ்வுலகில் எவனுமிலான்

சிந்திக்க மறுப்பவனைத்தான்
இங்கு காண முடிகிறது
சற்றே ஓரமிருந்து விழிகளை மூடு
எல்லாம் புரியும் உனக்கு!

நேசிப்பைவிட சிறந்தது
எதுவுமில்லை எண்ணிப்பார்
அண்டை வீட்டாரை ஒருதடவை
நேசித்துப்பார்; நிச்சயம்
ஆண்டவன் கூட உன்னுடன்
எப்போதும் இருப்பான்!

உறவுக்குப் பகைவரின்
வாழ்க்கை என்றும்
நரகம் தான்!

எல்ல உயிரிடத்தும்
நேசம் இருந்தால்
இறைவன் கூடப் பக்கம் தான்!

பகை என்பது கூட
பொறாமைக் குணம்தான்
பொறாமை என்பது
பெரு நெருப்புக் குண்டம்தான்
மீண்டெழ முடியாது
அதனுள் வீழ்ந்து விட்டால்!

**ஈழத்து நான்**

## சந்திப்பு



மேகமும் குளிரும்
சந்தித்தபோதுதான்
மழைதரும் வான்
முகில் கருவாகும்
நேற்றும் இன்றும்

சந்தித்தபோதுதான்
நல்லதொரு விடியல்
உண்டாகும்.

கண்ணோடு கண்
சந்தித்தபோதுதான்
வளரும் காதல் பயிராகும்!!

வானும் சூரியனும்
சந்தித்தபோதுதான்
விடியல் உதித்தது பூமியிலே

நிலவும் இரவும்
சந்தித்தபோதுதான்
அழகு பெருகியது இருளினிலே!!

நட்பு எனும் போர்வையில்
நல் மனங்களின் சந்திப்பிலே
கல் மனங்கள் சேர்கையில்
முள் தைத்திடும் நெஞ்சத்தை!!

மனிதனோடு மனிதன் சந்திப்பு
மாறியது மனமும் குணமும்
மனிதன் என்றும் மனிதனாக
மனிதத்துடன் என்றும்
மாறாது வேண்டும்!!

**றிப்கா அன்ஸார்,**
சாய்ந்தமருது

## வகவத்தின் பரவசமான பவளவிழா

நெகிழ்ந்திடும் நெஞ்சமுடன்
கவிமணி நஜ்முல் உசைனின்
ஆளுமையுள்ள தலைமையில்
செயலாளர் இளநெஞ்சனோடு
இணைந்ததாய் இதயங்களை
வென்றிடும் நிகழ்வானது

புன்னகை மிளிர்ந்திடும்
வதனமதைக் கொண்ட
பொறுப்பான பொருளாளரோடும்
எமதானது என்ற உரிமையுடன்
ஏனைய உறுப்பினர்களோடும்
இனிதாக இயங்கியது வகவம்

ஸ்தாபகத் தூண்களில் ஒருவராய்
சத்திய எழுத்தாளர்
“நாகூரான” நாகூர் கனியும்
இதமாக வீசிடும் தமிழ்தென்றலும்
முதுசங்களில் ஒருவராம்
கலைவாதியோடும்
மேலும் பல கவிவாளர்களும்

காவலரண்களாய் கண்ணென
காத்து வளர்த்தனரே
வலம்புரி கவிதா வட்டத்தையே
வளர்பிறையென நாளும்
வளர்ந்து வரும் வகமதில்
தரம் வாய்ந்தோரை
தகுதி வாய்ந்தோரைக்
கொண்டு
இனமத பேதமின்றியே
இலக்கியத்துறையில்
காலம் கடந்தும்
தடம் பதித்து வாழும்
இலக்கிய விற்பன்னர்கள்
இன்னுயிர் நீத்தாலும்
நோன்மதி நாளதனில்
ஞாபகமாய் அவரவர்
நாமம் சூடி
கவியரங்குகள் நடாத்தி
பெருமை படுத்தியது வகவம்

மூத்த பாவலர்களின்
மறைந்த படைப்பாளிகளின்
பாரம்பரியம் தெரிந்த
பண்பட்ட தலைமைகளில்
உற்றமும் சுற்றமும்
உசாத்துணையாகிட
அந்த நல்லோர்களின்
நாமம் நாடறிந்திட
அரங்கேறியது நினைவேந்தலாய்

தடைகள் பலதாண்டி
சரித்திரம் படைத்து வரும்
வகவக் கவியரங்கம்
அரங்கேற மேடை
தேடிடும் இளங்கவிகளை
வாஞ்சையோடு அரவணைத்தே
வழிகாட்டி நின்றதோடு
வாகை சூடிடவும் வைத்தது

வாழும் யாழ் பாடிகளாய்
வகவக் கவிஞர்கள்
நாளும் புகழ் சேர்த்திட
நலமே வளர்ந்தது
வலம்புரி கவிதா வட்டம்

பைந்தமிழால் கவிபாடி
பரவசமாய் பவளவிழா
காணும் இவ்வேளையிலே
நூற்றாண்டுகள் பலகண்டு
தலைமுறை வாயிலாய்
தமிழ் வளர்த்திடும்
ஆர்வலர்களாய்

நம் சமூகமாகிட
நிறைமனதோடு
நிறைவானவளை
நிதம் வேண்டுகின்றேன்

காலங்கள் கடந்திடினும்
வகவக் கவியரங்கின்
புகழ் மேதினியில்
மேலும் மிளிர்ந்திடுமே

ஆன்றோர்களின்
அயரா முயற்சியினால்
தலைநகரில் தாராள
மனதோடு தமிழினை வளர்த்திடவும்
படைப்பாளிகளை
படைப்பாற்றல் மிக்கவர்களை
பாங்காய் அரங்கேற்றியது

வலம்புரி கவிதா விட்டம்
இன நல்லுறவிற்கு
இனியதோர் எடுத்துக் காட்டாய்
தலைநகர் கொழும்பினில்
தகுதிவாய்ந்தோரைக் கொண்டு
தரமானதாய் இயங்கிடும்
வகவக் கவியரங்கம்
காலப் பெயர்ச்சியில்
கடிகார முள்ளாய் நின்றிட
மீள் எழுச்சி பெற்றது

பீனிக்ஸ் பறவையாய்
கவி வாணவர்களின்
கலையம்சம் நிரம்பிய
கவிதைகளோடு
ஆரம்பமாகியது
முதல் நிகழ்வாய்
ஆரம்பமாகிய கவியரங்கின்
பிரதம அதிதியாக
பிரதம ஆசிரியர்
செந்தமிழ்ச் செல்வர்
செந்தில் வேலவர்
ஐயா அவர்கள்

பவளவிழா காணும்
வகவக கவியரங்கிலும்
கலந்து சிறப்பித்தது
விசேட நிகழ்வானது

நூறாவது கவியரங்கத்தையும்
விமரிசையாய் நிகழ்த்திடவே
வகவகத்தின் ஆர்வலரே
வாஞ்சையோடு தாங்களையே
வரவேற்று நிற்கின்றோம்.

**மலாய்க்கவி டிவங்சோ**
(வகவத்தின் பவளவிழா
நிகழ்வில் வாசித்தது)

# சர்வதேச செய்திகள்

## ரஷ்யா மீதான தடைகள் பற்றி பைடனை எச்சரித்தார் புடின்

உக்ரைன் விவகாரத்தில், அமெரிக்கா ரஷ்யா மீது புதிய தடைகளை விதித்தால் அது இரு நாடுகளுக்கும் இடையில் உள்ள உறவுமுறை கடுமையாக பாதிக்கும் என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனை எச்சரித்துள்ளார்.

இருநாட்டு ஜனாதிபதிகளுக்கும் இடையில் கடந்த வியாழக்கிழமை கிட்டத்தட்ட ஒரு மணி நேரம் நடந்த தொலைபேசி அழைப்பில், புடின், பைடனை மேற்கூறியபடி எச்சரித்தார்.

இதில் அமெரிக்காவுக்கும், ரஷ்யாவுக்கும் இடையே அடுத்த மாதம் இடம்பெறவுள்ள பாதுகாப்புத் தொடர்பான பேச்சுவார்த்தையில் மொஸ்கோ உறுதியான முடிவுகளை எதிர்பார்ப்பதாக புடின் அமெரிக்க ஜனாதிபதியிடம் கூறினார்.

அதே அழைப்பில் ரஷ்யா, உக்ரைன் மீது படையெடுத்தால்,



அமெரிக்காவும், அதன் கூட்டாளி நாடுகளும் தக்க பதிலடி கொடுக்கும் என கூறியுள்ளார் ஜோ பைடன்.

உக்ரைனின் கிழக்கு எல்லையில் சுமார் ஒரு இலட்சத்துக்கும் அதிகமான ரஷ்ய துருப்புகள் நிலை நிறுத்தப்பட்டுள்ளதாக உக்ரைன் அதிகாரிகள் கூறுகின்றனர். ஆனால் ரஷ்ய தரப்போ தன் நாட்டு எல்லைக்குள் தன் துருப்புகளை எங்கு வேண்டுமானாலும் நகர்த்திக் கொள்ள தங்களுக்கு சுதந்திரமுள்ளது என்கிறது. மேலும் உக்ரைன் மீது படையெடுக்க எந்தவித திட்டமும் இல்லை என்றும் மறுத்துவருகிறது.

உலகின் இரு முக்கிய நாட்டு ஜனாதிபதிகள் பேச்சு வார்த்தை நடத்துவது இந்த மாதத்தில் இது இரண்டாவது முறை என்பது நினைவுகூரத்தக்கது.

உக்ரைன் மற்றும் ரஷ்யாவுக்கு இடையிலான பதற்றம் புதியதல்ல. 2014 உக்ரைனின் கிரிமியா தீபகற்பத்தை ரஷ்யா தனது ஆட்புலத்திற்குள் இணைத்தது. இதனைத் தொடர்ந்து கிழக்கு உக்ரைனில் ஆரம்பிக்கப்பட்ட பிரிவினைவாத போராட்டத்தில் சுமார் 14,000 பேர் கொல்லப்பட்டதோடு அங்கு அடிக்கடி மோதல்கள் இடம்பெறுகின்றன.

உக்ரைனுக்குள் ரஷ்யா மீண்டும் துருப்புகளை அனுப்பினால் ரஷ்யா மீது கடுமையான பொருளாதார தடைகளை விதிப்பதாக அமெரிக்கா மற்றும் அதன் ஐரோப்பிய கூட்டாளி நாடுகள் எச்சரித்துள்ளன.

## ஒரு வாரமாகக் கடலில் தத்தளித்த அகதிகளை இந்தோனேசியா மீட்பு



இந்தோனேசியா, கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த 100க்கும் அதிகமான ரொஹிங்கிய அகதிகளை மீட்டுள்ளது.

அகதிகளுக்கு அடைக்களம் வழங்குமாறு இந்தோனேசியர்களும், மனித உரிமைக் குழுக்களும் விடுத்த வேண்டுகோளுக்கு அரசாங்கம் செவி சாய்த்தது.

28 நாட்களுக்கு முன் பயணத்தை ஆரம்பித்த அகதிகள், மரப்படகின் இயந்திரம் பழுதானதால், நடுக்கடலில் தத்தளித்தனர். ஒரு வாரத்துக்கு முன் அகதிகள் படகைப் பார்த்த இந்தோனேசிய மீனவர்கள், அதிகாரிகளுக்குத் தகவல் தெரிவித்தனர்.

அகதிகளுக்குத் தேவையான உணவு, தண்ணீர், உடைகள் வழங்கப்பட்டன. மோசமான வானிலையும், அலையின் சீற்றமும் மீட்பு முயற்சிகளுக்குச் சவாலாய் அமைந்துள்ளன. இந்நிலையில் நேற்று இந்த அகதிகள் இந்தோனேசிய கரைக்கு அழைத்து வரப்பட்டனர். சிறுவர்கள் மற்றும் பெண்களை பெரும்பான்மையாகக் கொண்ட இந்த அகதிகள் கடும் மழைக்கு மத்தியில் படகுகளில் இருந்து இறக்கப்பட்டு பஸ்களில் ஏற்றப்பட்டனர்.

தற்போது மேற்கொள்ளப்பட்டிருக்கும் சுகாதார நடவடிக்கை அடிப்படையில் 50 பெண்கள் மற்றும் 47 சிறுவர்கள் உட்பட 105 அகதிகளும் 10 தொடக்கம் 14 நாட்கள் வரை தனிப்படுத்தப்படுவார்கள் என்று அகதிகளுக்கான ஐ.நா உயர்ஸ்தானிகர் அலுவலகத்தின் ஒக்டினா அபன்டி செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

## தடையை மீறி ஈரான் ஏவுகணை சோதனை



ஐ.நா தடையை மீறி செயற்கைக்கோளை விண்ணில் செலுத்தும் ரொக்கெட் ஒன்றை ஈரான் சோதித்துப் பாா்த்துள்ளது.

இமாம் கோமேனி ஏவுதளத்திலிருந்து அந்த ரொக்கெட் வெற்றிகரமாக செலுத்தப்பட்டது. இது, ஈரான் விஞ்ஞானிகள் நிகழ்த்தியுள்ள மற்றுமொரு சாதனையாகும் என்று அந்நாட்டு அரச ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

பீனிக்ஸ் பறவை என பொருள்படும் 'சிமோா்க்' என்று பெயரிடப்பட்ட ரொக்கெட் சோதித்துப் பாா்க்கப்பட்டதாகவும், 3 கருவிகளை எடுத்துக்கொண்டு அந்த ரொக்கெட் தரையிலிருந்து 470 கி.மீ. செலுத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ரொக்கெட் சோதனை நடைபெற்றதை ஈரான் அதிகாரிகள் உறுதிப்படுத்தினாலும், அது எடுத்துச் சென்ற கருவிகள் புவியின் சுற்று வட்டப் பாதையில் வெற்றிகரமாக செலுத்தப்பட்டதா என்பது குறித்த விபரங்களை அவா்கள் வெளியிடவில்லை.

ஈரான் அணு ஆயுதம் தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருவதாக அமெரிக்கா, இஸ்ரேல் உள்ளிட்ட நாடுகள் கூறி வந்தன.

அந்த அணு ஆயுதங்களை ஏந்தி, வெகு தொலைவில் உள்ள நட்பு நாடுகளைத் தாக்கும் வகையிலான பலிஸ்டிக் வகை ஏவுகணைகளையும் அந்த நாடு மேம்படுத்துவதை அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் எதிா்த்து வந்தன.

அதையடுத்து, அந்த வகை ஏவுகணைகளை ஈரான் தயாரித்து, சோதனை செய்வதற்கு ஐ.நா. பாதுகாப்பு சபை தடை விதித்தது. மேலும், ஈரானின் அணு ஆயுதத் தயாரிப்பு திட்டத்தைத் தடுத்து நிறுத்துவதற்காக அந்த நாட்டின் மீது கடும் பொருளாதாரத் தடைகள் விதிக்கப்பட்டன.

ரொக்கெட்டில் பயன்படுத்தப்படும் தொழில்நுட்பங்கள் அனைத்தும், நீண்ட தொலைவு பலிஸ்டிக் வகை ஏவுகணைகளுக்கும் பயன்படும் என்பதால், ரொக்கெட் சோதனைகளை மறைமுகமான பலிஸ்டிக் ஏவுகணை சோதனைகளாக அமெரிக்கா கருதி வருகிறது.

இதனால், ஒவ்வொரு ரொக்கெட் சோதனையின்போதும் அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையே பதற்றம் அதிகரித்து வருகிறது.

## உலகில் முதல் முறை தினசரி கொரோனா சம்பவங்கள் ஒரு மில்லியனைத் தொட்டது



உலக அளவில் முதன்முறையாக,புதிதாகக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்படுவோரின் தினசரி எண்ணிக்கை ஒரு மில்லியனைத் தாண்டியுள்ளது.

2019 இறுதியில் முதல் முறை கண்டுபிடிக்கப்பட்டது தொடக்கம் கடந்த டிசம்பர் 23 – 29 காலப்பகுதியில் முதல் முறை கொரோனா தொற்று தினசரி சம்பவங்கள் உச்சத்தை தொட்டிருப்பதாக சுகாதார அதிகாரிகளை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது.

கடந்த வாரம் மட்டும் 7.3 மில்லியனுக்கும் அதிகமானோருக்கு நோய்த்தொற்று உறுதி செய்யப்பட்டதாக ஏ.எப்.பி செய்தி நிறுவனம் தெரிவித்தது. இதன்படி வேகமாகப் பரவக்கூடிய ஒமிக்ரோன் திரிபு கண்டுபிடிக்கப்பட்டிருக்கும் நிலையில் சராசரியாக நாளுக்கு 1,045,000 தொற்று சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

இது முன்னர் பதிவான தினசரி உச்ச எண்ணிக்கையை விடவும் குறிப்பிடத்தக்க அதிகரிப்பாகும். தற்போதைய கொரோனா அலைக்கு முன்னர் கடந்த ஏப்ரல் 23 மற்றும் 29க்கு இடையே நோய்த் தொற்று சம்பவங்களின் சாரசரி தினசரி எண்ணிக்கை 817,000 ஆக இருந்ததே அதிகமாகும்.

எனினும் குறைந்த நோய் அறிகுறிகளைக் காட்டும் தொற்று சம்பவங்கள் அடையாளம் காணப்படாத நிலையில் உள்ளன. அதேபோன்று வைரஸ் சோதனை செயற்பாடுகள் நாடுகளுக்கு இடையே மாறுபட்டு இருப்பதால் உண்மையான எண்ணிக்கை கூறப்படுவதை விடவும் அதிகம் என நம்பப்படுகிறது.

உலகளாவிய தொற்றுச் சம்பவங்கள் கடந்த ஒக்டோபர் நடுப்பகுதி தொடக்கம் அதிகரித்து காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் உள்ளிட்ட பல நாடுகளில் புதிதாக நோய்த்தொற்று உறுதி செய்யப்படுவோர் எண்ணிக்கை முன்னெப்போதும் இல்லாத அளவு அதிகரித்துள்ளது.

உலகில் வைரஸ் பரவல் தொடர்வதால், சில நகரங்களில் புத்தாண்டு வரவேற்பு நிகழ்ச்சிகள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

